Registered as a News Paper in Sri lanka
விலை : ரூபா 20.00
தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU
முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 சித்திரை 11 வெள்ளிக்கிழமை (24.04.2015) பக்கங்கள் 20 ஓசை – 206

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.

## கோத்தாவுக்கு கால அவகாசம்

தனக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஆராய்ந்து விளக்கமளிப்பதற்கு கால அவகாசம் வேண்டும் என்று முன்னாள் பாதுகாப்பு அமைச்சு செயலர் கோத்தாபய ராஜபக்ஷ கோரியதற்கிணங்க அவருக்கு 90 நாள்கள் கால அவகாசம் வழங்கியது இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு. முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ இலஞ்ச ஊழல மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவில் நேற்று வியாழக்கிழமை முன்னிலையாகினார்.

ஆணைக்குழு அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டது. இதன்போது ஞாபகத்தில் இல்லாத தகவல்களை கேட்பதால் அவற்றை ஆராய்ந்து விளக்கமளிப்பதற்கு தனக்கு 90 நாள்கள் கால அவகாசம் வழங்க வேண்டும் என்று ஆணைக்குழு அதிகாரிகளிடம் கோத்தாபய கேட்டுக்கொண்டார். அதற்கு இணங்கிய ஆணைக்குழுவினர் குறித்த கால அவகாசத்தை வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவன்ட்கார்ட், லக்ன லங்கா

19 ஆம் பக்கம் பார்க்க

## நாவற்குழியில் கோர விபத்து

### 18 பேர் படுகாயம்



யாழ்.நாவாற்குழிச்சந்தியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் 18 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் கூறினர்.

நாவற்குழிச்சந்தியில் பாடசாலை மாணவர்களை ஏற்றுவதற்காக காத்திருந்த பஸ் மீது, மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்றுகொண்டிருந்த பஸ் பின்பக்கமாக மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் படுகாயமடைந்த 16 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையிலும் 2

19 ஆம் பக்கம் பார்க்க



# சர்வதேச அழுத்தத்துக்கு முற்றுப்புள்ளி

100 நாள் அறுவடை

## இனங்களுக்கிடையில் சுமுக உறவு

(கொழும்பு)

கடந்த நூறு நாட்களில் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த முடிந்ததுடன் எமது தாய்நாட்டின் மீது இருந்து வந்த சர்வதேச அழுத்தங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடிந்தது. அது மட்டுமல்லாமல் நாட்டின் அனைத்து இனங்களுக்கும் இடையில் புரிந்துணர்வையும் சுமுக உறவையும் ஏற்படுத்த முடிந்ததாகவும் ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன நேற்று நாட்டுமக்களுக்காக, ஆற்றிய விசேட உரையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது :

நான் ஜனாதிபதியாக பதவியேற்று 100 நாள் நிறைவடைந்துள்ள நிலையில் உங்களிடம் பேச ஆவலாய் உள்ளேன்.

இந்த நாட்டின் பொருளாதாரம், அரசியல் சர்வதேச தொடர்பு என்பவற்றை நோக்காகக் கொண்டு நாம் புதிய பல திட்டங்களை முன்னெடுத்தோம்

ஜனாதிபதித் தேர்தல் ஊடாக கிடைத்த ஜனநாயகத்தினூடாக கடந்த 3 மாத காலங்களில்

19 ஆம் பக்கம் பார்க்க

## செய்தியாளர் உட்பட நால்வர் யாழில் கைது

யாழில் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர் மற்றும் இரு பல்கலைக் கழக மாணவர்கள் உட்பட்ட நால்வரை எதிர்வரும் 27 ஆம் திகதிவரை விளக்கமறிய லில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி பொ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

தொலைகாட்சி ஒன்றின் யாழ். பிராந்திய ஊடகவியலாளர் மற்றும் இரு பல் கலைகழக மாணவர்கள் உட்பட நால்வர் யாழ்.பல்கலைகழகத்திற்கு அருகில் வாடகை வீடொன்றில் இருந்த வேளை நள்ளிரவு 12.30 மணியளவில் மூன்று வாகனங்களில் சென்ற பொலிசார்,வீட்டுக்குள் நுழைந்து ஊடகவியலாளரையும் அவருடன் தங்கி இருந்தவர்களையும் கைது செய்து இருந்தனர்.

கைது செய்யப்பட்ட நால்வரும் 1 இலட்சம் ரூபாய் பணத்தினை கொள்ளையிட்டனர் என குற்றம்சாட்டப்பட்டு யாழ்.நீதி

19 ஆம் பக்கம் பார்க்க

## எரியுண்ட சடலங்கள் மீட்பு

முல்லைத்தீவின் இரட்டைவாய்க்கால் சந்தியிலிருந்து மாத்தளன் செல்லும் வழியில் காட்டுக்குள் உள்ள பங்கரிலிருந்து முற்றாக எரியுண்டு அடையாளம் காணமுடியாத நிலையில் சடலம் ஒன்று நேற்று பகல் மீட்கப்பட்டது.

வீதி திருத்த வேலைகளில் ஈடுபட்டுவரும் . ஒருவர் தடி வெட்டுவதற்காக காட்டுக்குள் சென்ற போது பங்கருக்

19 ஆம் பக்கம் பார்க்க

## விருப்பு வாக்கு இனி இல்லை; கலப்பு முறையில் தேர்தல்

### நிறைவேற்று சபையில் தீர்மானம்

நாடாளுமன்றத்தை .மே மாத முதல் வாரத்தில் கலைத்து, பொதுத்தேர்தலை ஜூன் மாத இறுதியில் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அலரி மாளிகையில் நேற்று நண்பகல் நடைபெற்ற தேசிய நிறைவேற்றுச் சபையின் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

விருப்பு வாக்கு முறையை நீக்கி, வாக்குகளை கணக்கிடும் முறையின்படி தொகுதிக்குரிய நாடாளுமன்ற உறுப்பினரை கட்சி நியமிக்கக்கூடிய புதிய விதி முறைகளுடன் தேர்தல் நடப்பு

19 ஆம் பக்கம் பார்க்க

## மருத்துவ மனையில் பஸில்

முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச, கொழும்பு தேசிய மருத்துவமனையின் கட்டண விடுதியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திவிநெகும திணைக்களத்தில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணைக்காகச் சென்ற பசில் ராஜபக்ஷ ஆறு மணிநேர விசாரணையின் பின்னர், நேற்று முன்தினம் மாலை நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினால் கைது செய்யப்பட்டார்.

கடுவெல நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட அவரை மே 05ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டதையடுத்து, வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

அவர் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட போது, மருத்துவ சிகிச்சைக்காக பிணை வழங்குமாறு சட்டத்தரணிகள் கோரியிருந்தனர்.

ஆனால், பொதுச்சொத்துகள் சட்டத்தின் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளதால், அவருக்கு பிணை வழங்க முடியாது என்று

19 ஆம் பக்கம் பார்க்க

## சிதம்பரபுரம் மீள்குடியமர்வு தாமதமடைவது ஏன்?

### கேள்வி எழுப்புகிறார் டக்ளஸ்



வவுனியா, மாவட்டத்தில் உள்ள ஆசிகுளம் கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் 1990களில் இருந்து தங்கவைக்கப்பட்டுள்ள சுமார் 186 குடும்பங்களின் மீள் குடியேற்றத்திற்கு என்ன நடந்துள்ளது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்துள்ள செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா 1990களில் இம் மக்கள் மேற்படி நலன்புரி

19 ஆம் பக்கம் பார்க்க

# முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டோருக்கு மாதாந்தக்கொடுப்பனவு வழங்கல்



(வவுனியா)

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கான மாதாந்தக் கொடுப்பனவு வழங்கும் திட்டம் வடமாகாண சுகாதார அமைச்சினால் நேற்று வவுனியாவில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு வவுனியா பம்பைமடுவில் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலை வளாகத்தில் உள்ள "வைகறை" எனும் நிலையத்தில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட 38 பேருக்கு வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவ கலாநிதி ப. சத்தியலிங்கம் கொடுப்பனவுகளை வழங்கி வைத்தார்.

கழுத்துக்குக் கீழ் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட 9 பேரும் இடுப்புக்குக் கீழ் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட 29 பேரும் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொண்டனர்.

கழுத்துக்குக் கீழ் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு 3000 ரூபா, இடுப்புக்குக் கீழ் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு 1500 ரூபா வீதம் வழங்கப்பட்டது.

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்கள் இனிவரும் காலங்களில் அருகிலுள்ள தபால் நிலையங்களில் மாதாந்தக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரி விக்கப்படுகின்றது. (90)

# கனகாம்பிகை அம்பாள் ஆலய பெருந்திருவிழா ஆரம்பம்

(இரணைமடு)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இரணைமடு திருவருள்மிகு கனகாம்பிகை அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று நண்பகல் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் இடம்பெறும்.

தொடர்ந்து 8 ஆவது நாள் வேட்டைத்திருவிழா திருவையாறு சித்திவிநாயகர் ஆலயத்தில் இடம்பெறுவதுடன், அன்றிரவு சப்பறத் திருவிழா இடம் பெறும்.

9 ஆம் நாள் (02.05.2015) சனிக்கிழமை தேர்த் திருவிழாவானது வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து காலை 9.30 மணிக்கு பரிவார மூர்த்திகள் சகிதம் மூன்று சித்திரத் தேரில் ஆரோகணிப்பார்.

மறுநாள் மூன்றாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஆலயத்தின் தீர்த்தத் திருவிழாவானது இரணைமடு நீர்தேக்கத்தில் இடம்பெறும்.

அன்று மாலை திருவிளக்கு பூஜை இடம்பெறுவதுடன் மரபு முறைப்படி அடியார்கள் இரணைமடுத் தீர்த்த நீரை எடுத்து வந்து அம்பாளின் பாதங்களில் அபிசேகம் செய்வதுடன், கும்ப தீர்த்தம் எடுக்கும் நிகழ்வும் வளந்து பானைகளும் ஏனைய பானைகளும் வைத்து பொங்கும் நிகழ்வும் இடம்பெறும்

அன்று இரவு கொடியிறக்கம் இடம்பெறும்.

04.05.2015 காலை சங்காபிஷேகம் இடம்பெறும். மாலை பூங்காவனத் திருவிழா இடம் பெறும். அன்றிரவு பூந்தண்டிகையில் அம்பாள் வீதிவலம் வருவார்.

மறுநாள் வைரவர் மடையுடன் பெருந்திருவிழா நிறைவுறும்.

இரணைமடு கனகாம்பிகை ஆலய பெருந்திருவிழாவில் உள்நாட்டில் இருந்து மட்டுமல்லாது வெளிநாடுகளில் வாழும் அடியவர்களும் பக்திபூர்வமாக பங்கேற்பது சிறப்பம்சமாகும்.

## பிரியாவிடை

(திருநெல்வேலி)

கைதடி அரச முதியோர் இல்லத்தில் கடந்த 5 வருடங்களாக அபிவிருத்தி உத்தியோகத்தராக அளப்பரிய சேவைகளையாற்றிய திருமதி சிவமதி பிரபாகரனுக்கு எதிர் வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்குப் பிரியாவிடை வைபவம் நடைபெறவுள்ளது.

இல்ல அத்தியட்சகர் த. கிருபாகரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

திருமதி சிவமதி பிரபாகரன் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையின் அபிவிருத்தி உத்தியோகத்தராக இடம் மாற்றப்பட்டுள்ளார்.

இப்பிரியாவிடை வைபவத்தில் இல்ல உத்தியோகத்தர்கள், பணியாளர்கள், முதியோர் அனைவரும் பங்குபற்றவுள்ளனர். (137)

# தனியார் துறை வெற்றிடங்களை நிரப்ப யாழ். வணிகர் கழகம் நடவடிக்கை

யாழ்ப்பாண மாவட்டத்தில் தனியார் துறைகளில் நிலவும் பல்வேறு பதவி வெற்றிடங்களை நிரப்பும் வகையில் வணிகர் கழகத்தால் நேற்று முதல், நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக யாழ்.மாவட்ட வணிகர் கழகத்தின் தலைவர் எஸ்.ஜெயசேகரம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் துறைகளில் நிலவும் பல்வேறு பதவி வெற்றிடங்களை நிரப்பும் வகையில் வணிகர் கழகத்தால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த 4 ஆண்டுகளின் இடைவெளியின் பின்னர் மீண்டும் யாழ். மாவட்டத்தில் உள்ள இளைஞர், யுவதிகளிடம் இருந்து பதவிகளுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளோம்.

கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய நடவடிக்கையின் மூலம் பல இளைஞர், யுவதிகளும் அதேவேளை அரச அலுவலகங்களில் இருந்து ஓய்வுபெற்றவர்களும் கூட தனியார்துறைகளில் வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

கணனித்துறை, விற்பனையாளர்கள், வெளிக்கள அலுவலர், கணக்கு பதிவாளர்கள், லிகிதர்கள், விற்பனை பிரதிநிதிகள், சாரதிகள் எனப் பல பதவிகளுக்கும் தனியார் துறையில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவற்றுக்கு தொழில் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்ட சம்பளத்திலும் பார்க்க அதிகரித்த சம்பளத்தைப் பெறக்கூடிய வாயப்புக்களும் காண்ப்படுகின்றன.

தனியார் துறையில் பணியாற்றக்கூடிய மனநிலை உடையவர்கள் மட்டும் விண்ணப்பங்களை மானிப்பாய் வீதியிலுள்ள வணிகர் கழக அலுவலகத்தில் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ முழு விபரத்துடன் தாம் விரும்பும் தொழிலையும் குறிப்பிட்டு அனுப்ப முடியும் என அவர் மேலும் கூறினார். (25,90)

## ஞானச்சுடர் இதழ் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம ஏற்பாட்டில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் விசேட நிகழ்வில் இன்று வெள்ளிக்கிழமை முறபகல் 10:00 மணிக்கு 207ஆவது ஞானச்சுடர் பங்குனி மாத இதழ் வெளியிடப்படவுள்ளது.

இவ்விதழின் வெளியீட்டுரையை இளைப்பாறிய அதிபர் வ. கணேசமூர்த்தியும் மதிப்பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் க. ஆனந்தராசாவும் ஆற்றவுள்ளனர்.

## DD TV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | வெள்ளிக்கிழமை |
|---|---|
| Am 05.00 | ஆலய தரிசனம், பக்திப் பாடல்கள் |
| Am 07.00 | கலைக்கதிர் |
| Am 08.00 | நாளிதழ் நேரம் |
| Am 09.00 | SMS Time |
| Am 9.55 | காலை செய்திகள் |
| Am 10.00 | Hello DD |
| Am 10.30 | IT.Com |
| Am 11.00 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வாழும் கலைஞர்கள் |
| PM 01.00 | மதியச் செய்திகள் |
| PM 01.30 | சுப்பர் திரைப்படம் |
| PM 03.55 | மாலைச் செய்திகள் |
| PM 04.30 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 07.30 | தமிழ் பேசும் தமிழா |
| PM 08.00 | பிரதான செய்திகள் |
| PM 08.30 | Hello DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

### வெளிநாட்டு மருமக்களை பார்க்க

# பேருந்து நிலையத்தில் காத்திருந்த முதியவர் கைதடி முதியோர் இல்லத்தில் இணைப்பு

(திருநெல்வேலி)

வெளிநாட்டிலிருந்து மருமக்கள் வருவதாகக் கூறி உறவினர்கள் சிலரால் அழைத்துச் செல்லப்பட்ட முதியவர் ஒருவர் முல்லைத்தீவு பஸ் நிலையத்தில் அநாதரவாக விடப்பட்டுள்ளார்.

கரவெட்டி மத்தியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செல்லத்துரை (வயது- 89) கரவெட்டியில் பல இன்னல்களுக்கு மத்தியில் இவர் வாழ்ந்து வந்தார். இவருக்கு இரண்டு பெண் பிள்ளைகள். அவர்கள் கல்யாணமாகிக் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தாலும் இம் முதியவருக்கு அவர்களுடன் சேர்ந்து வாழ்வதற்கு விருப்பம் இல்லை.

இந்நிலையில், இவரது மருமக்கள் வெளிநாட்டிலிருந்து வருவதாகவும், அவர்கள் இவரைப் பார்ப்பதற்கு அதிக விருப்பம் கொண்டிருப்பதாகவும் தெரிவித்து சில உறவினர்கள் இவரை நேற்று முன்தினம் அதிகாலை கரவெட்டியிலிருந்து முல்லைத்தீவுக்கு அழைத்துச் சென்றனர்.

முல்லைத்தீவு பேருந்து நிலையத்தில் இவர்கள் காத்திருந்த போதும் எதிர்பார்த்தபடி வெளிநாட்டு மருமக்கள் வரவில்லை. இதனால் ஏமாற்றமடைந்த அவர்கள் தம்முடன் கூட்டிச் சென்ற முதியவரை அங்கு தனியாக விட்டுவிட்டுத் திரும்பி வந்து விட்டனர்.

பேருந்து நிலையத்தில் தனியே நின்று தவித்துக் கொண்டிருந்த முதியவரைக் கண்டு இரங்கிய சிலர் இவர் பற்றி முல்லைத்தீவு அரசாங்க அதிபருக்குத் தகவல் கொடுத்தனர். அரச அதிபர் மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தருடன் உடன் தொடர்பு கொண்டு அவர் மூலமாக முதியவரை கைதடி அரச முதியோர் இல்லத்தில் நேற்று முன்தினம் தற்காலிகமாக இணைத்துக் கொள்வதற்கு ஏற்பாடு செய்தார்.

வெளிநாட்டு மருமக்களின் நினைவு வந்துவிட்டதால் அவர்கள் எப்போது வருவார்கள், தன்னிடம் கதைத்துப் பேசுவார்கள் என்றும் தணியாக தாகத்துடன் கைதடி அரச முதியோர் இல்லத்தில் வழி மேல் விழி வைத்துக் காத்திருக்கிறார் இம் முதியவர்.

இவரை அழைத்துச் செல்வதற்கு இவரது சொந்தங்கள், உறவினர்கள் மற்றும் எவராவது இருந்தால் அவர்களை கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (137)

# முதலீட்டாளர்களின் ஒன்றுகூடல்

(திருநெல்வேலி)

தேசிய அபிவிருத்தி வங்கியின் (என்.டீ.பீ.) முதலீட்டாளர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் யாழ்ப்பாணம் ரில்கோ விடுதியில் நடைபெற்றது.

வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ராஜேந்திரா தியாகராஜா இந்நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. ராஜேந்திரா தியாகராஜா, என்.டீ.பீ. வங்கியின் பிரபு துரைசாமி, நிதி ஆலோசகர் ராமகிருஷ்ணா மற்றும் பலர் வங்கியின் செயற்பாடுகள் பற்றி விளக்கவுரைகளை நிகழ்த்தினர். தொழிலாளர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், முதலீட்டாளர்கள் என அதிகளவானோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (137)

# நாய்களின் தொல்லையால் நோய் ஏற்படும் அபாயம்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, நெடுங்கேணி போன்ற பகுதிகளில் நாய்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதாகவும் அவற்றுக்கு குட்டை நோய் அதிகரித்துக் காணப்படுவதால் மக்களுக்கும் நோய் ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியிலுள்ள நாய்களுக்கு குட்டைநோய் பிடித்துள்ளதால் அந்த நாய்களின் உரிமையாளர்கள் கண்டு கொள்ளாமல் வீதிகளில் விட்டுள்ளனர்.

இதனால் இந்த நாய்கள் தமது உணவுக்காக அருகிலுள்ள வீடுகளையும் பாடசாலைகளையும் தேடித்திரிவதுடன் பாத்திரங்களை எச்சப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கும் மக்கள் இதனால் தமக்கும் நோய்கள் ஏற்படக் கூடிய ஆபத்து உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே இந்த நாய்களின் உரிமையாளர்களை குறித்த நாய்களை கால்நடை வைத்தியரிடம் கொண்டு சென்று சிகிச்சையளிக்குமாறும் தெரிவிப்பதுடன் ஏனைய கட்டாக்காலி நாய்களையும் பிரதேச சபையும் சுகாதாரத் திணைக்களமும் இணைந்து கட்டுப்படுத்தித் தரும்படி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (40)

## கலாசார மையம் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேசத்தின் கலை, கலாசாரத்தை வளர்க்கும் நோக்கில் பிரதேசத்தில் இவ்வாண்டு இறுதிக்குள் கலாசார மையம் ஒன்று அமைக்கவுள்ளதாக பிரதேச செயலாளர் சுப்பிரமணியம் முரளிதரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், வடலியடைப்பு ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் இதற்கான காணியை நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளனர்.

அதற்கான சட்ட ரீதியான அனுமதியும் எமக்குக் கிடைத்துள்ளது. விரைவில் அடிக்கல் நாட்டுவிழா நடாத்தப்பட்டு, கலாசாரமையம் அமைப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்படும். இந்த வருட இறுதிக்குள் கட்டடப் பணிகள் முடிவடைந்து, கலாசார மையம் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்.

## யானைகளின் தொல்லையால் போக்குவரத்து பாதிப்பு

முல்லைத்தீவு ஒட்டுசுட்டானிலிருந்து மாங்குளத்திற்கு செல்லும் பாதைகளில் யானைகளின் தொல்லைகளினால் போக்குவரத்து செய்வதில் மக்கள் நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர்.

மணவாளன்பட்டமுறிப்பு, தச்சடம்பன், கரிப்பட்டமுறிப்பு ஆகிய பகுதிகளில் மாலைவேளையில் யானைகளின் நடமாட்டம் இருப்பதன் காரணமாக போக்குவரத்து செய்வதில் இடர்களை எதிர்கொண்டுள்ளதாக மேற்படி கிராமங்களின் மக்கள் ஒட்டுசுட்டான் பிரதேச செயலரிடம் மனு மூலம் தெரிவித்துள்ளனர்.

இரவுவேளைகளில் மணவாளன்பட்டமுறிப்பு, அம்பகாமம், கரிப்பட்டமுறிப்பு ஆகிய கிராமங்களுக்கு வருகை தரும் யானைகள் பயன்தரு மரங்களை அழித்து நாசப்படுத்தி வருவதாகவும் அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (160)

## இயங்காத நிலையில் உள்ள ஸ்கந்தபுரம் சனசமூக நிலையம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் சனசமூக நிலையம் போரினால் சேதமடைந்து புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

1983 ஆம் ஆண்டு முதல் இயங்கி வந்த இந்நிலையம் இடப்பெயர்வுகளுக்கு முன்னர் சிறப்பாக இயங்கிவந்தது.

போரினால் சேதமடைந்தமையினால் தற்போது இயங்கமுடியாதநிலையில் உள்ளது. போரூட், யு.என்.எச்.சி.ஆர். ஆகிய நிறுவனங்களின் நான்கு இலட்சம் ரூபா நிதியுதவியுடன் உருவாக்கப்பட்ட மேற்படி சனசமூக நிலையம் போரினால் அழிவடைந்த நிலையில் தற்போது இயங்கமுடியாதநிலையிலுள்ளது.

இதன் காரணமாக ஸ்கந்தபுரம் கிராம சனசமூக நிலையத்தின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. (160)

## முள்ளி மயானத்திற்கு கிடைக்குமா? விடிவு

### விசனமடையும் பொதுமக்கள்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை கொடிகாமம் முள்ளி ஐயன்கண்டி மயானம் நீண்டகாலமாக எந்தவித புனரமைப்பும் இல்லாத நிலையில் உள்ளதால் உடல்களை தகனம் செய்யச் செல்வோர் பல்வேறு இடையூறுகளை எதிர் கொள்வதாக வடவரணி, வரணிப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மயானத்தில் உள்ள மடம் விழும் நிலையில் உள்ளதாகவும் தகனம் செய்யச் செல்வோர் மழை, வெயிலில் நின்றே இறுதிக்கடமைகளை செய்ய வேண்டிய நிலையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். இம் மயானத்தில் தற்போது இறந்தவர்களின் ஞாபகார்த்தமாக நினைவுத் தூபிகள் அமைக்கப்பட்ட நிலையில் அவற்றை வளர்ந்து வரும் மரஞ்செடிகள் மூடிவருவதாகவும் இறந்தவர்களின் உறவுகள் மிகவும் கவலையடைவதாகவும் தெரிவிக்கும் மக்கள் மனிதனாக பிறந்து வாழ்ந்த நாம் இறப்பின் பின் மயானத்தில் ஆவது நிம்மதியாக தூங்க முடியவில்லை என ஏங்குவதை உயிர் வாழும் போதே காணமுடிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வடவரணியை சேர்ந்த பிரபல வர்த்தகர் ஒருவர் மயானத்தில் எந்த விதமான வசதிவாய்ப்போ பாதுகாப்பு வேலிகளோ இதுவரை அமைக்கப்படவில்லை எனத் தெரிவிப்பதுடன் உரிய தரப்பினர் பார்த்தும் பாராத்துபோல் இருப்பது எந்த வித அக்கறையும் அற்று செயற்படுவதாக காணப்படுவதாக வடவரணி பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப் பினர் இனிமேலாவது இந்த மயானத்தை புனரமைப்பு செய்ய முன்வர வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (150)

## குடிநீர் எடுக்கவந்தவர்கள் சாட்டிப்பகுதியில் விரட்டியடிப்பு

சாட்டிப்பகுதியில் குடிநீரை எடுப்பதற்காக பௌசர்களில் வந்தவர்களை இனந்தெரியாதோர் விரட்டியடித்தமை அப்பகுதியில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாது.

யாழ்ப்பாணத்தில் குடிநீர் பிரச்சினை ஏற்பட்டுள்ள இந்நிலையில் சாட்டிப்பகுதியிலிருந்தே தீவகத்திலுள்ள ஏனைய பகுதிகளுக்கும் குடிநீர் பௌசர்கள் மூலம் எடுத்துச் சென்று விநியோகிக்கப்பட்டு வந்தது. இவ்வாறு குடிநீர் விநியோகிப்பதற்காக பௌசர்களுடன் வந்தவர்களை இனந்தெரியாதவர்கள் விரட்டியடித்து தண்ணீர் எடுக்கமுடியாது என எச்சரிக்கை செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் ஏனைய பகுதிகளிலுள்ளவர்கள் தண்ணீர் இல்லாது பெரும் இன்னல்களை எதிர்நோக்கிவருவதாக தெரிவிக்கப் படுகின்றது.

## ஊடகங்களின் மோசடி; தீங்கான செயல்!

● ம.அய்யம்பிள்ளை

"தேவையற்ற போராட்டங்களால் பயன் கிட்டப்போவதில்லை" என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை டாக்டர் சிவசங்கர் எழுதியதாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் உதயன் பத்திரிகை கடந்த 16.04.2015ஆம் திகதி வெளியிட்டிருந்தது.

இந்தக் கட்டுரை தொடர்பாக இதே பத்தியில் கடந்த 19.04.2015 அன்று பதில் எழுதப்பட்டிருந்தது.

ஆனால் இது தொடர்பாக தொடர்ந்து நடந்த உரையாடல்களில் சில உண்மைகள் தெரியவந்தன.

உண்மையில் உதயன் பத்திரிகையில் வந்த கட்டுரையை டாக்டர் சிவசங்கர் எழுதியிருக்கவில்லை. டாக்டர் சிவசங்கரின் பெயரைப் பயன்படுத்தி உண்மை நிலவரங்களை மறைப்பதற்காக அந்தக் கட்டுரை எழுதப்பட்டிருந்தது.

ஏனென்றால் யாழ்ப்பாணத்தில் நடந்துவரும் நல்ல தண்ணீருக்கான சமூகமயப்பட்ட போராட்டங்களை முன்னெடுத்துவரும் முக்கியமானவர்களில் ஒருவர் டாக்டர் சிவசங்கர். அண்மையில் நடந்த உண்ணாவிரதப் போராட்டத்திலும் சிவசங்கரின் பங்கு முக்கியமானது. பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளில் சிவசங்கர் நல்ல முறையில் செயற்பட்டு வருகிறார்.

இப்படி இருக்கும் போது அவரே இந்தப் போராட்டங்கள் தேவையற்றவை, அவசரமாக மேற்கொள்ளப்பட்டவை, விவேகமற்றவை என்ற மாதிரி எழுதுகிறாரே என்ற ஒரு குழப்ப நிலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காகவே இந்தக் கட்டுரையை மேற்படி யாழ்ப்பாணப் பத்திரிகை பிரசுரித்துள்ளது என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு நீதியான, நியாயமான போராட்டத்தை ஏற்க மறுக்கின்ற தரப்பினர் எப்படியெல்லாம் பொய்களை தமது மக்களுக்கே சொல்கின்றார்கள் என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்.

இதுபோல எண்ணற்ற பொய்களையும், ஏராளம் உண்மை மறைப்புகளையும் இந்த மாதிரிப் பத்திரிகைகளும், இவை ஆதரிக்கும் அரசியல் தரப்புகளும் தொடர்ந்து செய்தே வருகின்றன. இதைப்பற்றியெல்லாம் எவரும் பெரிதாக கண்டுகொள்வதில்லை. அப்படிக் கண்டுகொண்டாலும் அவற்றைப் பொருட்படுத்துவதில்லை.

இதனால் தான் பொய்களும், புரட்டுகளும் தாராளமாக தமிழ்ச் சமூகத்தில் மலிந்து போய் இருக்கின்றன. ஏமாற்றுகள் அங்கீகரிக்கப்படுகின்றன.

பொய்யும், புரட்டும், ஏமாற்றும் நிறைந்த சமூகம் ஒருபோதும் உருப்படாது. அதனால் நன்மைகளைப் பெறவும் முடியாது. நன்மைகளைப் பிறருக்குச் செய்யவும் முடியாது.

இன்றைய ஈழத்தமிழ்ச் சமூகத்தின் நிலை இதுதான்.

உண்மையில் தமிழ் மக்கள் சந்தித்து வருகின்ற ஏராளம், ஏராளம் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை பெற்றுக்கொடுக்க வேண்டிய தரப்புகள் அவற்றைச் செய்யாமல் பொறுப்பற்றதனமாக உள்ளன. அதே வேளை தமது நலன்களைத் தாராளமாகப் பெற்றுக்கொள்கின்றன.

மக்களுக்குச் சேவையாற்ற வேண்டிய தரப்புகள் மக்களுக்கு உண்மைகளைச் சொல்ல வேண்டிய ஊடகங்கள் எல்லாம் தமிழ்த் தேசியத்தின் பேரால் மக்களை ஏமாற்றுகின்றன.

இதனால் தமிழ்த் தேசியத்திற்கே வீழ்ச்சியும், இழுக்கும் ஏற்பட்டு வருகின்றது.

தமிழ்த் தேசியத்தை குழிதோண்டிப் புதைப்பவர்கள் இவர்களே.

டாக்டர் சிவசங்கர் எழுதியதாக காட்டப்பட்ட கட்டுரையானது அவர்மீதான நம்பகத்தன்மையை கேள்விக்குள்ளாக்கும் நோக்குடனேயே திட்டமிட்டுச் செய்யப்பட்டுள்ளது.

இது ஒரு மோசடி. தீங்கான செயல்.

இவ்வாறான செயலைச் செய்யும் துணிச்சல் எப்படி இவர்களுக்கு ஏற்பட்டது?

தமிழ்ச் சமூகத்தின் மந்தத்தனமே இந்த துணிச்சலை வழங்கியுள்ளது. தமிழ்ச்சமூகம் ஏமாளிச்சமூகமாக இருக்கும் வரை அதனால் எந்த நன்மைகளையும் பெறமுடியாது. எந்த ஈடேற்றத்தையும் காணமுடியாது.

மரம்போல் மனிதன் வளருகிறான் என்பது பெருமையல்ல...., மரம்போல் அவன் பயன்படுகிறானா என்பதே பெருமை. - கண்ணதாசன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இதுவும் வன்முறையின் வழிதான்!

அண்மையில் தமிழகத்தைச் சேர்ந்த இருபது தமிழர்களை அயல் மாநிலத்தில் தெலுங்குப் பொலிஸார் கொலை செய்தார்கள் என்று தமிழக ஊடகங்களும் சமூக வலைத்தள எழுத்தர்களும் கடும் கண்டனங்களைப் பதிவு செய்திருந்தார்கள்.

இளைஞர் அணியொன்றின் தலைவர் மாறன் என்பவர், "இலங்கைத் தமிழர்களுக்கு சிறு பாதிப்பு ஏற்பட்டாலே தமிழகம் எவ்வளவு கொதிப்படைந்து விடுகிறது ஆனால் தமிழகத் தமிழர்கள் கொல்லப்பட்டதற்கு இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் யாரும் சிறு கண்டனத்தைக் கூடப் பதிவு செய்யவில்லையே..." என்று அறிக்கை விட்டிருந்ததையும் அங்குள்ள ஊடகங்கள் முக்கியப்படுத்தியிருந்தன.

இலங்கைத் தமிழர்களுக்கு தங்கள் துன்பம் தவிர உலகில் மற்ற யாருடைய துன்பமும் ஒரு பொருட்டல்ல என்பதும் எல்லோரும் எங்களுடைய துன்பத்தைத்தான் கவனிக்க வேண்டும் என்ற நினைப்பிருப்பதும் ஒரு பக்கமிருக்கட்டும்.

இலங்கைத் தமிழர்களுக்காக தமிழகத்தில் எழும் கொந்தளிப்புகள் சகோதரத் தமிழர்களின் துன்பம் என்கிற உணர்வு பூர்வமான துடிப்பைக் கொண்டிருப்பதும் உண்மைதான்.

ஆனால் விஷயபூர்வமான விளக்கத்தையோ செயற்பாட்டையோ அது கொண்டிருப்பதில்லை. வெறுமனே அங்குள்ள அரசியல்வாதிகள் தங்களுடைய அரசியல் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் மிகைப்படுத்தப்பட்ட நாடகங்களுடனேயே அந்த உணர்ச்சி வெள்ளம் பொங்கி வடிந்துவிடுகிறது.

அதனால்தான் இப்போதும் இலங்கைத் தமிழர்களுக்கு தமிழீழம்தான் தீர்வு என்றே அங்குள்ள மிகப் பெரும்பாலோர் மேலோட்டமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கை அரசாங்கத் தலைவர்கள் மட்டுமல்லாமல் சிங்கள இனமே காட்டுமிராண்டிகள், கொலைவெறியர்கள் அவர்களைக் கொல்ல வேண்டும், துடைத்தழிக்க வேண்டும் என்றெல்லாம் தான் தங்கள் தமிழுணர்வை வெளிப்படுத்தி வருகிறார்கள்.

இவர்களது வீரமுழக்கங்களைக் கேட்டுப் புல்லரிப்புப் பெறும் நம்மவர்களும், சிங்களவர்களை இந்த நாட்டிலிருந்து ஓட ஓட விரட்டிவிட்டு அல்லது துடைத்தழித்துவிட்டு நமக்கான தீர்வைக் கண்டுகொள்ளலாம்; அதற்கு உதவ 'நம்மாட்கள்' இருக்கிறார்கள் என்று உசார் பெற்று நம்பவும் ஆரம்பித்துவிடுகிறார்கள் போலும்.

இல்லாவிட்டால், "சிங்கள அரசாங்கங்களுடன் பேச்சுச் சரிவராது, அவர்கள் தீர்வு தரவே மாட்டார்கள்" என்று சொல்லிக் கொண்டிருப்பவர்களை ஒவ்வொரு முறையும் வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்பி வைத்துக் கொண்டிருப்பார்களா?

அரசாங்கம் தர முடியாததைக் கேட்பது; அதன்மூலம் எதிர்ப் புணர்ச்சியைப் பெருக்குவது; முறுகல் நிலைமை தணியவிடாமல் பார்த்துக் கொள்வது; எதிர்ப்பு வீரவசனங்களால் வாக்கு வேட்டையாடிக் கொள்வது.... என்பதாகத் தொடர்கிறது இவர்களது அரசியல்தீர்வு கேட்கும் நாடகம்.

"சர்வதேசம் வரும் இலங்கை அரசாங்கத்தை மண்டியிடச் செய்யும்" என்பது போன்ற உசாரேத்தல்களைச் செய்துகொண்டிருக்கத் தோதாக அயலக, உலகத் தமிழர்கள் அங்கங்கே வீரவசன ஆர்ப்பாட்டங்களைச் செய்துகொண்டிருப்பார்கள். அது போதும் இங்குள்ள மக்களை ஏமாற்ற என்பது இவர்கள் கணக்கு.

வெறுப்பும் பழிவாங்கும் உணர்ச்சியும் மறையாமல் இணக்கமும், இணைந்து முன்னேறும் வாழ்வும் எப்படிச் சாத்தியமாகும்? கோபம், பகை, விரோதம் போன்றவற்றைக் கைவிடாமல் நல்லிணக்க வாழ்வுக்கு எப்படி வாசல் தெரியும்?

கடந்தகாலத் தவறுகளைத் தூக்கிப் பிடித்தபடி, வெறுப்பைத் தூண்டி வளர்த்து, இணக்கம் காண முடியாதவர்களாக எதிரிகளைச் சித்தரித்து, துவேசத்தில் மக்களைக் குழுவாகத் திரட்டிப் பழிதீர்ப்பு மனோநிலையில் வைத்திருப்பது பகைமறப்பு – நல்லிணக்கத்தின் பாதையல்ல. இது வன்முறை அரசியலின் எச்சமே.

- ஆசிரியர்

# 19 ஆவது திருத்த சட்டத்திற்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும்

## ஆயர்கள் பேரவை கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் 27 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள 19 ஆவது அரசியல் யாப்பு திருத்த சட்ட மூலத்திற்கு அனைத்து இலங்கை மக்களும் ஆதரவு வழங்குமாறு, இலங்கை ஆயர்கள் பேரவை கோரிக்கை விடுத்துள்ளதாக மட்டு அம்பாறை மறை மாவட்ட ஆயர கலாநிதி பொன்னையா ஜோசப் தெரிவித்தார்.

கடந்த 3 தினங்களாக கண்டி தேசிய குரு மடத்தில் நடைபெற்ற ஆயர்கள் பேரவை மாநாட்டில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால்தான் தனிநபர் அதிகாரம் முற்றாக ஒழிக்கப்படுவதுடன் மக்களால் தெரிவு செயயப்படும் நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படும்.

இதன்மூலம் அமைதி, நிரந்தர சமாதானம், ஒப்புரவு, புரிந்துணர்வு, நல்லிணக்கம், எல்லா மக்களும் மகிழ்ச்சியாக இருக்கக்கூடிய சூழ்நிலை என்பன உருவாகும்.

எனவே இந்த நாட்டில் வாழும தமிழ், சிங்கள, முஸ்லிம், கத்தோலிக்க மக்கள் அனைவரும் குறித்த பிரேரணைக்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டுமென ஆயர்கள் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளதாக ஆயர் பொன்னையா ஜோசப் மேலும் தெரிவித்தார்.

தனிநபர் கைகளில் அதிகாரம் குவிந்து கிடந்தமையால் தான் கடந்த காலங்களில் முழு நாடும் பற்றி எரிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

# ஏனைய மாவட்டங்களைப்போன்று கிளிநொச்சியும் முன்னேறவேண்டும்

## மாவட்ட மேலதிக அரச அதிபர் வலியுறுத்து

(கொழும்பு)

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசம் என்றோ அல்லது புதிதாக மீள்குடியேறிய பகுதியென்றோ இனிவரும் காலங்களில் கூறிக்கொண்டிருக்காமல் ஏனைய மாவட்டங்களைப் போன்று கிளிநொச்சி மாவட்டமும் முன்னேற்றம் அடைய வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்கள், சிறுவர் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் இள வயது கர்ப்பம் தரித்தல், பாடசாலை இடைவிலகல், சிறுவர் இல்லங்களில் அதிகளவான சிறுவர்கள் இணைந்து கொள்ளல் போன்றவை அதிகமாக காணப்படுகின்றன. அவற்றை நீக்குவதற்கான பல்வேறு வழிவகைகள் செய்யப்படவேண்டும்.

கிளிநொச்சி மாவட்டம், மீள்குடியேற்றம் செய்யப்பட்டு 6 ஆண்டுகளாகியும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதி அல்லது புதிதாக மீள்குடியேறிய பகுதி என்று கூற முடியாது.

இனிவரும் நாட்களில் அனைத்து உத்தியோகத்தர்களும் ஒன்றிணைந்து சேவையாற்ற வேண்டும். இதன் மூலம் தான் ஏனைய மாவட்டங்களைப் போன்று அபிவிருத்திப் பாதையை நோக்கி நாங்கள் முன்னேற வேண்டும் என அவர் கூறினார்.

# மூன்று முக்கியஸ்தர்கள் சில தினங்களில் கைது?

(கொழும்பு)

முன்னைய அரசாங்கத்தில் அங்கம் வகித்த மூன்று முக்கிய நபர்கள் அடுத்த சில தினங்களில் நிதி மோசடி விசாரணைப் பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட உள்ளதாக பொலிஸ் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் சம்பந்தமான ஆரம்பகட்ட விசாரணைகள் பூர்த்தியாகியுள்ளதுடன் அரச பணத்தை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டில், சட்டமா அதிபரின் ஆலோசனையின்படி அவர்கள் கைது செய்யப்பட உள்ளனர்.

பொதுச் சொத்துக்களை கொள்ளையிட்டமை சம்பந்தமாக எவராக இருந்தாலும் தகுதி தராதரம் பாராது கைது செய்யுமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று அண்மையில் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இவ்வாறான குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் வ்ரை நாடாளுமன்றம் கலைக்கப்படுவதை ஒத்திவைக்குமாறும் இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

# மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் திட்டம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான திட்டமொன்றை வகுப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இத்தகைய திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கோரிக்கை விடுத்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் டீ.எஸ்.ஜயவீர தெரிவித்தார்.

படசாலை சேவை வான்களில் பயணிக்கும் மாணவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெறுவதை தடுக்கும் வகையிலேயே புதிய திட்டம் வகுக்கப்படவுள்ளது.

# ரக்ன ஆயுத களஞ்சியசாலை அகற்றுமாறு உத்தரவு

(கொழும்பு)

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் வளாகத்தில் இயங்கிவந்த ரக்ன லங்கா பாதுகாப்பு நிறுவனத்தின் ஆயுதக் களஞ்சியசாலையை அங்கிருந்து அகற்றுமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.

குறித்த ஆயுதக் களஞ்சியசாலை நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக மாறலாமென்ற அச்சத்தில், இதனை அப்புறப்படுத்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஆயுதக் களஞ்சிசாலையில், சுமார் 3000 இற்கும் அதிகமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட ரக்ன லங்கா பாதுகாப்பு நிறுவனத்தில் இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில், தற்போது முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாவிடம் விசாரணை நடாத்தப்பட்டு வருகின்றது.

அத்துடன், ரக்ன லங்கா நிறுவனத்திற்கு, ஜனாதிபதியால் புதிய தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழக கட்சிகளின் முகத்திரையைக் கிழித்த ரணிலின் துப்பாக்கிச் சூட்டுப் பேச்சு!

**- இரா.கார்த்திகேசு**

**அடுத்த பொதுத்தேர்தலில் தனது எதிரணியான சிறீ.ல.சு.கட்சிக்கு ஜனாதிபதி மைத்திரி அக்கட்சியின் தலைவர் என்ற வகையில் தலைமை தாங்கினாலும், அவரை இந்திய ஆதரவாளராகவும், தன்னை இந்தியாவுக்கு எதிரான இலங்கையின் தேசபக்திமானாகவும் காட்டி வெற்றி பெறுவதற்காகவே, ரணில் இந்த இந்திய எதிர்ப்பு என்ற அஸ்திரத்தை இப்பொழுதே கையில் தூக்கி வைத்திருக்கிறார் என்பதே உண்மையாகும்.**



இலங்கையின் புதிய ஜனாதிபதியினால் தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமது அரசின் 100 நாள் வேலைத் திட்டத்தின் சிறப்பு வெளிப்பாடுகளில் ஒன்றாக இந்தியாவுக்கு எதிரான முதலாவது கல்லை வீசியிருந்தார்.

மைத்திரிபால சிறிசேன இலங்கையின் புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற. பின்னர், இந்தியாவுக்கே தனது முதலாவது வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டார். பதிலுக்கு இந்தியாவின் பிரதமர் நரேந்திரமோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார்.

மோடி விஜயம் மேற்கொள்வதற்கு முன்னதாகத்தான் ரணில் இந்தியாவை நோக்கித் தனது கல்லை வீசி எறிந்தார். தமிழக மீனவர்கள் எல்லைதாண்டி இலங்கைக் கடற்பரப்பிற்குள் மீன் பிடித்தால் அவர்களைச் சுட்டுத் தள்ளுவதற்கு இலங்கை அரசுக்கு உரிமை உள்ளது என்றார்.

உண்மையில் இது ஒரு துணிச்சலான கூற்றுத்தான்! அதுவும் இந்தியாவின் பிரதமர் இலங்கை வரவிருந்த சூழலில், ரணில் இந்தக் குண்டைத் தூக்கிப்போட்டார்.

ரணிலின் இந்தப் பேச்சை இலங்கை - இந்திய ஊடகங்கள் ஆரவாரம் செய்து செய்திகளை வெளியிட்டன. ஆனால் அவர்கள் எதிர்பார்த்த மாதிரி இந்தியப் பிரதமரின் விஜயத்தின் போது ரணிலின் கூற்றுப் பற்றி விவாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதுமாத்திரமல்ல, இந்தியா ரணிலின் "ஆத்திர மூட்டும்" பேச்சு சம்பந்தமாக அலட்டிக் கொள்ளவும் இல்லை.

அதைவிட ஆச்சரியம் என்னவென்றால், மகிந்த ராஜபக்ஷ இயற்கையாகச் சுவாசித்தாலும், அவர் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகவும், தமிழகத்தில் வாழும் 7 கோடி தமிழர்களுக்கு எதிராகவுமே திட்டமிட்டுச் சுவாசிக்கிறார் என ஆர்ப்பாட்டம், கடையடைப்பு, பஸ் எரிப்பு எனச் செய்யும் தமிழகக் கட்சிகள் கூட ரணிலின் இந்த திமிர்ப் பேச்சுப் பற்றி பேசாமடந்தைகளாக மாறிப்போயிருந்தார்கள்.

ரணிலின் இந்தப் பேச்சில் இரண்டு விடயங்கள் உள்ளடங்கி உள்ளன. முதலாவது விடயம், இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்கு உதவிய இந்தியாவுக்கு சங்கட்த்தை ஏற்படுத்தும் விதமாக ஏன் ரணில் அப்படிப் பேசினார் என்பது. இரண்டாவது விடயம், எடுத்ததிற்கெல்லாம் இலங்கைக்கு எதிராக ஆவேசப் போராட்டம் நடாத்தும் தமிழக அரசியல்வாதிகள் ரணிலின் பேச்சுக் குறித்து ஏன் அடக்கி வாசிக்கிறார்கள் என்பது.

ரணில் ஏன் அப்படிச் சொன்னார் என்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. வரலாற்று ரீதியாகவே ஐ.தே.க. இந்தியாவுக்கு எதிரான ஒரு கட்சி என்பது முக்கியமானதாகும். சுதந்திர இலங்கையின் முதலாவதுஅரசாங்கத்தை அமைத்த அன்றைய ஐ.தே.க. தலைவர் டி.எஸ். சேனநாயக்கவின் அரசாங்கம்தான் இந்திய வம்சாவழியினரான மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையையும், பிரஜாவுரிமையையும் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கி சுதந்திர இலங்கையில் இந்திய விரோதப் போக்கிற்கு கால்கோள் இட்டது.

அத்துடன் சுதந்திர இந்தியாவின் முதலாவது பிரதமர் நேருவும், பின்னர் அவரது புதல்வி இந்திராகாந்தியும் இந்தியாவின் பிரதமர்களாகப் பதவி வகித்த, அமெரிக்க - சோவியத் பனிப்போர் நிலவிய அக்காலகட்டத்தில், அவர்களுடைய அரசுகள் அமெரிக்க எதிர்ப்பு நிலைப்பாட்டில் இருந்ததால், அமெரிக்க சார்பான ஐ.தே.க.வும் அமெரிக்காவுக்குச் சார்பாக இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டையே எடுத்து வந்தது.

இந்த விடயத்தில் ரணிலின் மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தன மிகவும் தீவிரமான இந்திய எதிர்ப்பாளர் ஆவார். அவர் 1977 இல் ஆட்சிக்கு வந்த பின்னர் இந்தியாவுக்கு எதிராக, தீவிரமான அமெரிக்க சார்பு நிலைப்பாட்டை எடுத்ததும், அவருக்கு ஒரு "பாடம் படிப்பிக்க" இலங்கையில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை இந்திராகாந்தி அரசு தொடக்கி விட்டதும் வரலாற்று நிகழ்வுகள்.

ஜே.ஆரின் ஆட்சிக் காலத்தில்தான் இந்திய - இலங்கை உடன்படிக்கையில் கையெழுத்திட இலங்கை வந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஜே.ஆர். முன்னிலையில் மரியாதை அணிவகுப்பில் கலந்து கொண்ட இலங்கைக் கடற்படைச் சிப்பாய் ஒருவன் ராஜீவின் தலையில் தனது துப்பாக்கி பிடியால் தாக்கிக் கொலை செய்ய முயன்றான். அதன் பின்னர். தற்போதைய மோடியின் விஜயத்துக்கு முன்னர் இதுவரை காலமும் இந்தியப் பிரதமர் யாருமே இலங்கை வருவதைத் தவிர்த்து வந்தனர். இவைகள் பழைய கதைகள். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் ரணில் இந்திய விரோத நிலைப்பாட்டை எடுப்பதற்கு இரண்டு பிரதான காரணங்கள் இருக்கின்றன.

அதில் ஒன்று இந்தியா தன்னை இலங்கை அரசியலில் ஓரம்கட்ட முயற்சிக்கிறது என்ற ரணிலின் சந்தேகமாகும். அண்மையில் நடந்து முடிந்த இலங்கை ஜனாதிபதித் தேர்தலின் போது எதிரணி சார்பில் ரணில் போட்டியிட விரும்பிய போதும், அதைத் தடுத்து மைத்திரியை பொது வேட்பாளர்ாக்கியதில் இந்தியாவின் "ரோ" அமைப்புக்கு முக்கிய பங்கு உண்டு என்ற பலமான அபிப்பிராயம் இலங்கையில் நிலவுகின்றது.

அதற்குக் காரணம் ரணில் தீவிரமான மேற்கத்தைய சார்பாளர் என்பதாகும். தற்போதைய மோடியின் இந்திய அரசும் மேற்கத்தைய -அதிலும் குறிப்பாக அமெரிக்க சார்பு அரசு என்றாலும், தென்னாசியப் பிராந்தியத்தின் வல்லரசாகத் தன்னைக் கருதிக் கொள்ளும் இந்தியா, தன்னைத் தவிர இந்தப் பிராந்தியத்தில் உள்ள வேறெந்த நாடும் மேற்கத்தைய சக்திகளுடன் நேரடியாகத் தொடர்பு வைத்துச் செயற்படுவதை விரும்பவில்லை.

அமெரிக்கா உலகப் பொலிஸ்காரன் என்றால், இந்தியா தென்னாசியப் பொலிஸ்காரன் என்பதே இந்தியா நீண்டகாலமாகக் கடைப்பிடித்து வரும் கொள்கையாகும். இந்தக் கொள்கை இந்தியாவில் எந்த அரசு பதவிக்கு வந்தாலும் மாறாத ஒன்றாகும்.

எனவேதான் அமெரிக்காவுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் நீண்டகால வரலாற்றைக் கொண்ட ரணிலை விட, அவ்வாறான நிலைப்பாடு எதுவும் அற்ற மைத்திரி ஜனாதிபதியாக வந்தால் அவரைக் கையாள்வது சுலபம் என்பது இந்திய ஆளும் தரப்பின் எண்ணமாகும். இது ரணிலுக்கும் புரியும். அதனால்தான் ரணில் தனது எதிர்ப்பை இந்தியாவுக்குத் தெரியப்படுத்துவதற்காக இந்தியாவின் எந்த அரசுக்கும் தலையிடியாக இருக்கும் தமிழக மீனவர் பிரச்சினையில் அப்படி ஒரு "துப்பாக்கிச்சூட்டு" கதையைத் திரும்பத் திரும்பச் சொல்லி மோடி அரசுக்கு தமிழக அரசியல் அரங்கில் ஒரு நெருக்கடியை உருவாக்க முயல்கிறார். அதைப் புரிந்து கொண்டதாலேயே மோடி அரசும் ரணிலின் கல்லெறிகளைத் தட்டிவிட்டு அமைதியாக இருக்கிறது.

ஆனால் தமிழக அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் அமைதியாக இருப்பது தான் பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்திருக்கிறது. ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இலங்கை கடற்படை தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடாத்தினாலும் நடாத்தாவிட்டாலும் தமிழக அரசியல்வாதிகள் இலங்கை அரசுக்கு எதிராக காரசாரமான கண்டன அறிக்கைகள் விடுவதும், தமிழக மீனவக் கிராமங்களில் தொடர் போராட்டங்கள் நடாத்துவதும் அன்றாட விடயங்கள். ஆனால் இப்பொழுது இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவே "எல்லை தாண்டும் தமிழக மீனவர்களைச் சுடுவோம்" என போர்ப் பிரகடனம் செய்த போதிலும், எந்நேரமும் நெருப்புக் கக்கும் தீக்கோழிகளான வைகோ, நெடுமாறன், ராமதாஸ், திருமாவளவன் போன்றவர்கள் மணலுக்குள் தலையைப் புதைத்துக் கொண்டு சத்தம் சந்தடியின்றி அடங்கிப்போய்க் கிடக்கின்றனர். இதற்குக் காரணம் என்ன?

பொதுவாகவே தமிழகத்தில் எல்லா திராவிடக் கட்சிகளும் ஏகாதிபத்திய சார்புக் கட்சிகளே. அதனால்தான் கடந்த காலங்களில் ஏகாதிபத்திய எதிர்ப்பான மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது எடுத்ததெற்கெல்லாம் இலங்கைக்கு எதிராக போர்க்கொடி தூக்குவதை வழமையாகக் கொண்டிருந்தார்கள். தமது சகாவான ரணில் விக்கிரமசிங்க என்ன சொன்னாலும் சொல்லிவிட்டுப் போகட்டும். அதைக் கண்டு கொள்ளாமல் இருந்து விடுவோம் என அவர்கள் சபதம் செய்திருக்கிறார்கள் போலும். இன உறவை விட வர்க்க - அரசியல் உறவு மேலானது என மார்க்சிய மூலவர்கள் சும்மாவா சொல்லிச் சென்றிருக்கின்றனர்.

ரணிலின் இந்திய எதிர்ப்புக்கு இன்னொரு முக்கிய காரணமும் இருக்கின்றது. அதாவது ஜனாதிபதித் தேர்தலில் தான் தோற்றுப் போனதற்கு மேற்கத்தைய உளவு அமைப்புகளின் செயற்பாடுகளுடன், இந்திய ரோ உளவு அமைப்பும் ஒரு காரணம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த அண்மையில் இரண்டு மூன்று தடவைகள் திரும்பத் திரும்பக் கூறியிருந்தார். அதன் மூலம் பெரும்பான்மை சிங்கள இனம் மத்தியில் மீண்டும் ஒரு இந்திய எதிர்ப்பு அரசியல் களைகட்டத் தொடங்கியிருக்கிறது.

விரைவில் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதால் இந்த இந்திய எதிர்ப்பு அரசியல் மேடைகளில் ஒரு பிரபலமான பிரசார ஆயுதமாக மாறக்கூடிய சூழல் உள்ளது. அப்படியான ஒரு நிலை ஏற்பட்டால், ஏதோ ஒரு வகையில் அடுத்த தேர்தலில் பிரதமர் வேட்பாளராகக் களமிறங்கக் காத்துக் கொண்டிருக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கு அது பெரும் வாய்ப்பாக இருக்கும். ஏனெனில் பாரம்பரியமாகவே சிங்கள மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்பு உணர்வு ஆழமாக வேரூன்றி இருக்கின்றது. அது தென்னிந்திய மன்னர்கள் இலங்கை மீது முன்னைய் வரலாற்றுக் காலங்களில் அடிக்கடி படையெடுத்து அவர்களை அடிமைப்படுத்தியதால் உருவானது.

அந்த உணர்வை நவீன இலங்கையின் வரலாற்றில் எண்ணெய் ஊற்றி வளர்த்த பெருமை ஐ.தே.கவையே சாரும். பின்னர் ஜே.வி.பி அதைத் தனது கொள்கையின் அடிநாதமாக வரித்துக் கொண்டது. இந்திய - இலங்கை உடன்படிக்கை காலத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் தனது பங்கிற்கு இந்திய எதிர்ப்பைக் கிளறியது. அரசியல் கட்சிகள் தவிர, பல்வேறு பௌத்த அமைப்புகள், சிங்கள அமைப்புகள் என்பனவும் இந்திய எதிர்ப்பிலேயே உரம் பெற்று இருப்பன. எனவே அது எப்பொழுதும் இலங்கை அரசியலில் நீறுபூத்த நெருப்பாகவே இருந்து வருகின்றது.

ரணிலுக்கு இது நன்கு விளங்கும். எனவேதான் அடுத்த பொதுத்தேர்தலில் தனது எதிரணியான சிறீ.ல.சு.கட்சிக்கு ஜனாதிபதி மைத்திரி அக்கட்சியின் தலைவர் என்ற வகையில் தலைமை தாங்கினாலும், அவரை இந்திய ஆதரவாளரா கவும், தன்னை இந்தியாவுக்கு எதிரான இலங்கையின் தேசபக்திமானாகவும் காட்டி வெற்றி பெறுவதற்காகவே, ரணில் இந்த இந்திய எதிர்ப்பு என்ற அஸ்திரத்தை இப்பொழுதே கையில் தூக்கி வைத்திருக்கிறார் என்பதே உண்மையாகும்.

**(நன்றி: வானவில் 52)**



முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ மீது விசாரணை நடாத்தப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றையதினம் இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின் அலுவலகம் முன்னால் ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டதனைக் காணலாம்.

## ஐ.நா.வின் வேண்டுகோளின்படியே ஆயுதக் களஞ்சியம் உருவாக்கம் என்கிறார் கோத்தா

மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் ஐக்கிய நாடுகளின் வேண்டுகோளின் பேரில் அமைக்கபபட்ட ஒன்று என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்திச் சேவைக்கு அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையினால் சர்வதேசத்தின் வேண்டுகொள் ஒன்று இதன் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது. பிரித்தானிய கடல் பாதுகாப்பின், சர்வதேச செயற்பாட்டுக்குத் தேவையான ஒரு நடவடிக்கையாகவும் இந்த மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் காணப்பட்டது எனவும் அவர் அச்செய்திச் சேவைக்கு மேலும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

# புதிய முறைமையின் கீழேயே அடுத்த பொதுத் தேர்தல்

## அடம்பிடிக்கும் ஐ.ம.சு.மு.



நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 255 ஆக அதிகரிக்கும் தேர்தல் முறை மாற்றம் குறித்து புதிய யோசனை ஒன்றை முன்வைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, புதிய தேர்தல் முறைமையின் கீழேயே அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் நடாத்தப்படும் என்று தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடாத்திய செய்தியாளர் சந்திப்பில், இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் சுசில் பிரேம ஜெயந்த,

20 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றத் தாமதம் ஏற்பட்டாலும், புதிய தேர்தல் முறைமையின் கீழேயே நாடாளுமன்றத் தேர்தல் நடாத்தப்படும். விரைவிலேயே 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படும் என்று நம்புகிறோம்.

255 உறுப்பினர்களைக் கொண்டதாக புதிய நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்யும் யோசனையை முன்வைத்துள்ளோம். இதன்படி, 165 உறுப்பினர்கள் தொகுதிவாரியாகவும், 66 உறுப்பினர்கள் மாவட்ட ரீதியான விகிதாசார முறையிலும், 24 உறுப்பினர்கள் தேசியப் பட்டியல் மூலமாகவும் தெரிவு செய்யப்படுவர். இது தொடர்பான பத்திரம் தேர்தல்கள் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

20 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டு மூன்று மாதங்களுக்குள் தொகுதிகளை வரையறுத்து தேர்தலை நடாத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

## நீதிமன்ற உத்தரவையும் மீறி ஆர்ப்பாட்டம் நடாத்தியோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்



நீதிமன்ற உத்தரவையும் மீறி நேற்று இலஞ்ச ஊழல் திணைக்களத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் அத்தியட்சகருமான ருவான் குணசேகர தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாக, அவர் மேலும் குறிப்பிட்டார்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவை நேற்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடக் கூடாதென, நேற்றுமுன்தினம் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

நீதிமன்ற உத்தரவையும் மீறி நேற்றைய தினம் கோத்தாவுக்கு ஆதரவு தெரிவித்து சில பிக்குமாரும் அரசியல் பிரமுகர்களும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு முன்னால், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## கோத்தாவை இலக்கு வைத்து போலியான குற்றச்சாட்டுகள்

### விசனமடையும் பீரிஸ்

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவை இலக்கு வைத்து போலிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருவதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் வேண்டுமென்றே கோத்தாபயவை இலக்கு வைத்து நடவடிக்கை எடுத்து வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் நல்லாட்சி அரசாங்கத்தின் சார்பிலேயே இவ்வாறு கோத்தாபய கைது செய்ய, ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் முனைப்புக் காட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த வீரரான கோத்தாபயவின் நன்மதிப்பிற்கு களங்கம் ஏற்படுத்துவதனை இலக்காகக் கொண்டு இந்த பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

# படையினருக்கான தண்டனை பிணங்கள் மேல்தான் நடக்கும்

## உதய கம்மன்பில எச்சரிக்கை

படையினருக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டுமாயின், அது எமது பிணங்களுக்கு மேல்தான் நடக்கும்.

கடந்த 30 வருட காலமாக நாட்டில் புரையோடிப்போயிருந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தவர்களை, தற்போதைய அரசாங்கம் திட்டமிட்டு பழிவாங்கி வருவதாக உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவிதது நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்த உதய கம்மன் பில, மேற்குறித்தவாறு கூறியுள்ளார்.

இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

தற்போதைய அரசாங்கம் தமிழ்ப் பிரிவினைவாதிகளுக்கு சார்பாக செயற்பட்டு, நாட்டைக் காத்த தலைவர்களையும் இராணுவ வீரர்களையும் திட்டமிட்டு பழிவாங்கி வருகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளையே அதிகமாக பெற்று இந்த அரசாங்கம் ஆட்சியமைத்தது. அதன் காரணமாகத்தான், அரசாங்கம் அவர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றது.



அத்துடன், நாட்டுக்காக உயிரை துச்சமென மதித்து போராடிய இராணுவ வீரர்களை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தி தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டுமென கங்கணம் கட்டிக் கொண்டு அழைக்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சர்வதேச அழுத்தத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றியுள்ளோம்

## அரசாங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

சர்வதேச நாடுகளின் அழுத்தத்திலிருந்து இலங்கையை காப்பாற்றியுள்ளதாக வெளிவிவகாரப் பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளிடமிருந்து சர்வதேச விசாரணை என்ற பேச்சுக்கே தற்போது இடமில்லாமல் போயுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் தமது சிறப்பான அணுகுமுறையின் மூலம் சர்வதேச விசாரணையை இல்லாது செய்துள்ளனர்.

சர்வதேச விசாரணையில் இருந்து இலங்கையை விடுவிக்கவும், இராணுவத்தினரைப் பாதுகாக்கவும் இவர்களின் செயற்பாடு, காரணமாக அமைந்துள்ளது என்றும் பிரதியமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# நாட்டில் ஏற்பட்ட குழப்பம் சந்திரிக்காவே பொறுப்பு

## கெஹலிய குற்றச்சாட்டு

நாட்டில் பாரிய குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள குழப்ப நிலைமைகளுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவே பொறுப்பு.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிளவடைந்துள்ளது. மக்கள் விடுதலை முன்னணி பிளவடைந்துளளது. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் குழப்ப நிலைமை ஏற்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரது செயற்பாடுகள் குறித்து முன்னாள் கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

சோமவன்ச அமரசிங்க எடுத்த தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது. சோமவன்ச அமர சிங்க. ரோஹன விஜேவீரவின் கொள்கைகளையே பின்பற்றி வருகின்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் நிமால் சிறிபால டி சில்வாவின் நடவடிக்கைகள் ஐந்து சதத்திற்கேனும் பயனற்றது என முன்னாள் ஊடக அமைச்சர் கெஹலிய தொலைபேசி ஊடாக பத்திரிகை ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

# மக்கள் அதிகம் கூடுகின்ற இடங்களில் வீதி விளக்குகள் பொருத்தாதது ஏன்?

## கரைச்சி பிரதேச சபையிடம் மக்கள் கேள்வி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் அதிகம் கூடுகின்ற பிரதான இடங்களில் வீதி விளக்குகளைப் பொருத்துமாறு பொது மக்களும், வர்த்தகர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி நகரில் ஏ9 வீதியில் மாத்திரமே வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பொருத்தப்பட்ட வீதி விளக்குகளை தவிர நகரையும், நகரை அண்டிய பகுதிகளிலும் வீதி விளக்குகள் இதுவரை காலமும் பொருத்தப்படவில்லை.

கரைச்சி பிரதேச சபை கடந்த ஐந்து வருடங்களுக்கு முன் தனது உள்ளூராட்சி மன்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் கரைச்சி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பிரதான இடங்களில் வீதி விளக்குகளை பொருத்துவதாக குறிப்பிட்டிருந்தது ஆனால் கரைச்சி பிரதேச சபையின் பதவிக்காலம் முடிவடையவுள்ள நிலையிலும் இதுவரைக்கும் சபையின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து ஒரு வீதி விளக்குகளைக் கூட பொருத்தவில்லை இது பொது மக்கள் மத்தியிலும், வர்த்தகர்கள் மத்தியிலும் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை டிப்போ சந்தியிலிருந்து இரணைமடு வரையான பகுதிகளில் மாவட்ட வைத்தியசாலை உள்ளிட்ட முக்கியமான சந்திகள் மற்றும் கனகபுரம் சந்திப்பகுதி, சேவியர்கடை சந்திப் பகுதி, ஏ9 வீதி பரந்தன் சந்திப் பகுதி போன்ற மிக முக்கிய இடங்களில் வீதி விளக்குகள் பொருத்தப்படவில்லை.

இந்த இடங்களில் திணைக்களங்கள், வியாபார நிறுவனங்கள் என்பன காணப்படுவதனால் நாளாந்தம் அதிக மக்கள் கூடுகின்ற இடங்களாகவும் காணப்படுகிறது.

எனவே மேற்குறித்த இடங்களில் வீதிவிளக்கு மிகமிக அவசியமானது ஆனால் கடந்த ஐந்து வருடங்களில் அதிக வருமானத்தைப் பெற்று வருகின்ற கரைச்சி பிரதேச சபையானது ஒரு வீதி விளக்கு களையேனும் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காது இருப் பது சபையின் அசமந்தப் போக்கு என குற்றம் சுமத்தும் ம்க்கள் கரைச்சி பிரதேச சபையை விட சிறிய பிரதேச சம்பைகளான பூநகரி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகள் தங்களின் பிரதேசங்களில் காணப்படுகின்ற முக்கியமான இடங்களில் வீதி விளக்குகளை பொருத்தியுள்ளன எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.(29)



யாழ்ப்பாண நகரில் முக்கியமான வீதிகளில் உரிய காலத்தில் கழிவுகள் அகற்றப்படாமையினால் அவை வீதிகளில் பரவி போக்குவரத்தில் ஈடுபடும் மக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்துகின்றன. யாழ்ப்பாண தொடருந்திற்கெதிரேயுள்ள வீதியில் குவிக்கப்பட்ட கழிவுகளை நாய்கள் கிளறி வீதியில் பரவியுள்ளதை படத்தில் காணலாம். (27)

## வரணி வைத்தியசாலை புனரமைப்பு

(வரணி)

வரணிப்பிரதேச வைத்தியசாலை அபிவிருத்தி நடைமுறைப் படுத்தப்படவுள்ளதால் வைத்தியசாலை வளாகத்தில் நின்ற சுமார் நூற்றாண்டுக்கு மேற்பட்ட வேப்பமரம் அரச அங்கீகாரம் பெற்று தறிக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைகள் பூர்த்தியடைந்த பின் வைத்தியசாலையில் புதிதாக புனரமைப்புப் பணிகள் நடைபெறவுள்ளளதாக அபிவிருத்திச் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். வைத்தியசாலை புனரமைப்பிற்கென முன்னாள் ஆளுநரால் இரண்ட ரைக் கோடி ரூபா ஒதுக்கப்பட்டதாகவும் அந்நிதியே புனரமைப் பிற்கு பெரிதும் உதவியாகவும் உள்ளது. தற்போது பற்சிகிச்சை மண்ட பத்திற்கான கட்டடம் கட்டப்பட்டு வேலைகள் நிறைவடையும் நிலையிலும் உள்ளது. இக்கட்டடம் கட்டுவதற்கு தொண்டு நிறுவனம் உதவி வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது. (150)

## பாலத்தை புனரமைக்க கோரிக்கை விடுக்கும் மக்கள்

நெடுங்கேணி பழைய மாமடு வீதியின் பாலம் புனரமைக்கப்படாமல் மக்கள் போக்குவரத்து செய்ய முடியாத அவலநிலை ஏற்பட் டுள்ளது.

பழைய மாமடுவிலிருந்து நெடுங்கேணிக்குச் செல்லும் பிரதான வீதியிலுள்ள பாலம் நீண்ட காலமாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் இவ் வீதி வழியாக அத்தியாவசியத் தேவைகளுக்கும் செல்லும் மக்களும் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும் மழை காலத்தில் பெரும் சிரமத்தின் மத்தியில் தங்கள் பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இப் பாலம் தொடர்பாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறையிட்ட போதிலும் எந்தவித் பயனும் இதுவரை கிடைக்கவில்லை இது தொடர்பாக ஊடகங்களில் தகவல் வெளி வந்த போதிலும் எந்த அதிகாரிகளும் கண்டு கொள்ளாமல் இருப்பதையிட்டு இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

## நிதி உதவி வழங்கல்

வரணி வடக்கு ஜே/339 கிராம அலுவலர் பிரிவில் கடந்த கால வெள்ளப்பாதிப்பால் வீடுகள் சேதமடைந்த குடும்பங்களுக்கு கிராம அலுவலர் மூலமாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது சாவகச்சேரிப் பிரதேச சபையினர் ஊடாக 10,000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையைக் கொண்டு தற்காலிக தூண்கள் நிறுத்தி வீடு அமைக்கப்பட்டு வருகின்ற அதேவேளை மீதிப்பணமாக இன்னும் 10,000 ரூபா வழங்கப்படவிருப்பதாக பயனாளிகள் தெரிவிக்கின்றனர். மீதிப்பணம் அனுமதி கிடைத்ததும் வழங்கப்பட இருப்பதுடன் இப்பண உதவி சமூகசேவைப் பகுதி ஊடாகவே வழங்கப்படுகிறது.

அத்துடன் சமூக சேவைப்பகுதியின் உதவியினால் மாதாந்த உதவிப்பணம், ஊனமுற்றோர் உதவிப்பணம், வாழ்வாதார உதவிகள் போன்ற பலவித உதவிகள் வழங்கப்படுவதால் வறுமைக்கோட்டில் வாழும் குடும்பங்கள் மிகவும் பயன் அடைந்து வருவதை காணக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.(150)

## சில வீதிகள் திருத்தம்

(யாழ்ப்பாணம்)

2014 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டு 3 ஆம் கட்டமாக நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட சில வீதிகள் திருத்தம் செய்யப்படவுள்ளன. கோண்டாவில் உப்பு மடம் இருபாலை (கே.கே.எஸ். வீதி) 1ஆம் ஒழுங்கை, புதுவீதி ஆறுகால் மடம் (சிவம் கடை லேன்), கேணியடி வலது ப்க்கம் 1 ஆம் லேன், கொக்குவில், நந்தாவில் ஒழுங்கை வலதுபக்கம் 1, 2 ஆவது ஒழுங்கை,

தில்லைக்காளி வீதி, கோண்டாவில் (அன்னங்கை), கோண்டாவில் மேற்கு காளிகோவில் முன் ஒழுங்கை, (1,2), கே.கே.எஸ்.வீதி, சம்பியன் வீதி, எதிர் வீதி, செம்பாட்டு லேன் கை ஒழுங்கை, ஆறுமுகம் வீதி, கல்வியங்காடு, முனீஸ்வரன் வீதி, கோண்டாவில், சைவப்பாடசாலை வீதி 2ஆம் குறுக்கு வீதி, கோண்டாவில், பொன்னையா வீதி, கொக்குவில் மேற்கு, எம்.எஸ்.லேன் (குமரக் கோட்டம் குறுக்கு வீதி), கோண்டாவில், உதயபுரம் கடற்கரை வீதி, அரியாலை, அம்பாள் வீதி, கொக்குவில் ஆகிய வீதிகளுக்கு மொத்தம் ஒரு கோடியே 35 இலட்சத்துப்பத்தாயிரம் ரூபா செலவிடப்படவுள்ளது. (137)

## சாதாரணதரப் பெறுபேறுகள்

கிளிநொச்சி கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் வருமாறு,

சு.கயலழகி 3ஏ,பி,3சி,எஸ், லோ.காத்தியாயனி ஏ,4பி,2எஸ், கி.கிரிஷாந்தன் ஏ,3பி,3சீ,எஸ், சி.சர்மிளா ஏ,2பி,3சீ,எஸ், ர.துளசிகா ஏ,பி,4சீ,2எஸ், கு.டிலக்ஷன் 2பி,4சீ,எஸ்

## மே தினக் கூட்டம் ஆவரங்காலில்

(யாழ்ப்பாணம்)

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் புரட்சிகர மேதினம் யாழ்.ஆவரங்கால் பகுதியில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் சி.க.செந்தில்வேல் நேற்றுமுன்தினம் புதன்கிழமை தெரிவித்தார். கொக்குவிலில் அமைந்துள்ள மாக்சிச லெனினிச கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

14 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து, யாழ்.ஆவரங்கால் சந்தியில் மே 01 ஆம் திகதி பி.ப. 3.30 மணியளவில் பேரணி ஆரம்பிக்கப்பட்டு, புத்தூர் கலைமதி விளையாட்டு மைதானத்தில் நிறைவடையும்.

இந்தப் பேரணியின் போது, மக்கள் அதிகாரத்திற்கான மாற்று அரசியலை முன்னெடுக்க அணி திரள்வோம் எனும் தொனிப் பொருளில், குறைந்த சம்பளம், கூடிய நேர வேலை, நிரந்தரமின்மை, சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் செலுத்தாமை போன்றவற்றினால் பாதிக்கப்பட்டு வரும் அனைத்து ஆண் பெண் ஊழியர்களுக்கு உரிய உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.

பெண்கள் மீதான அனைத்து வன்முறைகளும் சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்களும் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். சுன்னாகம் மின்நிலைய கழிவு எண்ணெயால் மாசடைந்து வருவது தடுத்து நிறுத்தப்பட உரிய நடவடிக்கைகள் வேண்டும். மாசடையக் காரணமானவர்கள் மீது உரிய விசாரணையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு மாற்று வழி முறைகளும் நிலை நிறுத்தப்பட வேண்டும் அதற்கான சுயாதீன ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளுடன் மேதின ஊர்வலத்தினை நடாத்த தீர்மானித்துள்ளதாக அவர் கூறினார்.

இந்த மேதினக் கூட்டத்தில் தொழிலாளர் வர்க்கத்தினையும் இணைந்து கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (25)

## முரசின் இன்றைய பலன்

(24.04.2015 வெள்ளிக்கிழமை)

மன்மத வருஷம் சித்திரை மாதம் 11 ஆம் திகதி.
ஷஷ்டி திதி. சித்தம் யோகம்.
திருவாதிரை நட்சத்திரம் பி.ப. 03.53 வரை. பின் புனர்பூசம்.
இராகுகாலம் 10.30-12.00 வரை சுபநேரம் 06.00-07.30 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**: கால்நடைகளில் பயிர்பச்சைகள் சேதமடைவதால் கவலை கொள்ளல்.

**ரிஷபம்**: சகோதர உறவில் ஏற்பட்டிருந்த மனத்தாங்கல் நீங்கி விடுதல்.

**மிதுனம்**: உரிய நேரத்தில் மனைக்கு வந்ததால் திருட்டு முறியடித்தல்.

**கடகம்**: பிணைக்கும் துணைக்கும் செல்வதை சகோதரி தடுத்து விடுதல்.

**சிம்மம்**: மதிப்பும் மரியாதையும் மக்களினால் இழக்கும் நிலை ஏற்படல்.

**கன்னி**: அவசர நிமித்தம் பணத்தைச் சரியாகக் கணக்கிடாது பிழை யேற்படல்.

**துலாம்**: கருணை மனுவில் இட்மாற்றம் தற்காலிகமாக நிற்பாட்டுதல்.

**விருச்சிகம்**: பாக்கிய குருவினால் பிதாவின் பிரிவினை ஏற்பட்டு வருந்தல்.


**தனுசு**: கண்டகராகு 4 இல் கேதுவினால் தேங்கியவற்றை விற்பனை செய்ய திக்குமுக்காடல்.

**மகரம்**: வாக்குவாதத்தினால் அயலவருடன் பிணக்கு ஏற்படல்.

**கும்பம்**: எதிரியின் அடாவழத்தனம் காரணமாக முறையிடச்செல்லல்.

**மீனம்**: வெளியீடுகளில் ஆர்வம் காட்ட முயற்சிகளில் ஈடுபடல்.

# வன்னியின் பெரும்போர் புதுக்குடியிருப்பில் இன்று





புகழ்பூத்த வன்னி மண்ணின் கிளிநொச்சி மாவட்டத்தின் மூத்த துடுப்பாட்ட அணியை கொண்ட கிளிநொச்சி மகாவித்தியாலயமும், முல்லை மாவட்டத்தின் முதல் தர துடுப்பாட்ட அணிகளில் ஒன்றான புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும் களம் காணும் எழுச்சி மிக்க பெரும்துடுப்பாட்டப் போட்டி இன்றும் நாளையும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெறவுள்ளது.

தனிச்சிறப்பும் போட்டித்தரமும் ஒழுங்குபடுத்தல்களும் மாணவர்களினதும், ஆதரவாளர்களினதும் ஆரவாரங்களும் நடனங்களும் ஆர்ப்பரிப்புக்களுமென எல்லோரது மனதையும் கவர்ந்து கொள்ளும். வன்னியின் பெரும் போர் என்ற கிளி – முல்லை நட்புக்கிண்ணப் போட்டியானது வரலாற்றுச் சிறப்பு மிக்கது

2007ஆம் ஆண்டு கிளிநொச்சியில் மிகப்பிரமாண்டமான ஏற்பாடுகளுடன் நடந்தேறிய முதலாவது போட்டி சமநிலையில் முடிவுக்கு வந்தது 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற 2ஆவது போட்டி புதுக்குடியிருப்பில் நடைபெற்றது இதில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி வெற்றி பெற்றது இதன் பின் போர் அனர்த்தங்கள் அவலங்கள் இடப்பெயர்வுகள் என்பன தாண்டி புத்தெழுச்சி பெற்ற "வன்னியின் பெரும் போர்" மீண்டும் 2013 ம் ஆண்டு புதுக் குடியிருப்பில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி தனது சிறப்பான வெற்றியை பதிவு செய்தது.

2014 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் நடைபெற்ற போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணிக்கு வெற்றி வாய்ப்புக்கள் அதிகம் காணப்பட்ட போதும் மழையின் ஆதிக்கத்தால் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் வெற்றிக் கனவு தகர்ந்தது.

5ஆவது போட்டி மீண்டும் இன்றும் நாளையும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் புனரமைக்கப்பட்ட அழகிய விளையாட்டுத் திடலில் இரு பள்ளி அணிகளும் தமது நட்புறவின் வெளிப்பாடான "வன்னியின் பெரும் போர்" என்ற கிளி முல்லை நட்புக்கிண்ண ஒன்றிப்பில் கலந்து சிறப்பிக்க உள்ளமை பெருமைக்கும் போற்றுதற்கும் உரியன.

# சென்னையிடம் வீழ்ந்தது பெங்களூர் றோயல்ஸ்



பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணியை வீழ்த்தி சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 4ஆவது வெற்றியை பெற்றுள்ளது. பெங்களூர் சின்னச்சாமி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணி களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சூப்பர் கிங்ஸ் 8 விக்கெட் இழப்புக்கு 181 ஓட்டங்கள் குவித்தது. ரெய்னா 32 பந்தில் 62 ஓட்டங்களும், சிமித் 29 பந்தில் 38 ஓட்டங்களும் (3 பவுண்டரி, 3 சிக்சர்), பிளசிஸ் 18 பந்தில் 33 ஓட்டங்களும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பெங்களூர் சார்பில் யுஸ்வேந்திரா 3 விக்கெட்டும், இக்பால் அப்துல்லா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

பின்னர் விளையாடிய றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர அணியால் 8 விக்கெட் இழப்புக்கு 154 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. இதனால் 27 ஓட்டங்களில் சென்னை அணி வெற்றிபெற்றது.

மன்விந்தர் பிஸ்லா 17 ஓட்டங்களும், ருசோவ் 14 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் கோலி அரைச்சதம் கடந்து 51 ஓட்டங்களும், டேவிட் வீஸ் 22 ஓட்டங்களும் எடுத்தனர்.

மற்றய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் சென்னை சார்பில் ஆசிஷ் நெஹ்ரா 4 விக்கெட் வீழ்த்தினார்.

. ஆட்டநாயகனாக சென்னை அணியின் சுரேஷ் ரெய்னா தெரிவானார்.இந்த வெற்றி குறித்து சென்னை அணித்தலைவர் டோனி கூறியதாவது, எங்களது செயற்பாடு சிறப்பாக இருந்தது.

சிரேஷ்ட பந்து வீச்சாளர் ஆசிஷ் நெஹ்ரா சிறப்பாக வீசினார். பிளசிஸ் கடைசி ஆட்டத்தில் மிகவும் அபாரமாக விளையாடினர். மேலும் அவர் பந்து வீச்சாளர்களையும், சிரேஷ்ட வீரர்களையும் அடிக்கடி பேசி ஆலோசனைகளை வழங்கினார் என்று கூறியுள்ளார்.

# இன்றைய ஆட்டம்




# ஆரோன் பிஞ்அவுட்

மும்பை அணியின் ஆரோன் பிஞ், தொடையின் பின்பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக, தற்போது நடைபெற்றுவரும் 8ஆவது ஐ.பி.எல்., தொடரில் இருந்து விலகினார்.

எட்டாவது ஐ.பி.எல்., தொடருக்கான மும்பை அணியில், அவுஸ்ரேலிய "ருவெண்டி-20" அணி கப்டன் ஆரோன் பிஞ், இடம் பிடித்திருந்தார். முதல் மூன்று போட்டிகளில் விளையாடிய இவர், 23 ரன்கள் மட்டுமே எடுத்தார். அகமதாபாத்தில் நடந்த ராஜஸ்தானுக்கு எதிரான போட்டியின், போது இவரது இடது கால் தொடையின் பின்பகுதியில் காயம் ஏற்பட்டது. இதனால் இவர், களத்தடுப்பு செய்யவரவில்லை.

இந்நிலையில் அவுஸ்ரேலியா சென்ற இவருக்கு "ஸ்கான்" எடுத்துப் பார்த்ததில் காயத்தின் பாதிப்பு பெரிய அளவில் இருந்ததால் உடனடியாக சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. தவிர இவர் 12 வாரங்கள் ஓய்வில் இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

இதனையடுத்து இவர், 8ஆவது ஐ.பி.எல்., தொடரில் இருந்து விலகினார்.

# பாகிஸ்தானுக்கு வெள்ளையடிப்பு



பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் அசத்திய வங்கதேச அணி, 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஹட்ரிக் வெற்றி பெற்றது.

வங்கதேச வீரர் சவுமியா சர்கார் சதம் அடித்து அசத்தினார்.

வங்கதேசம் சென்ற பாகிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றது. முதல் இரு போட்டிகளில் வென்ற வங்கதேச அணி, 2:0 என, தொடரை வென்றது.

இரு அணிகள் மோதிய மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி மிர்புரில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணித் தலைவர் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

பாகிஸ்தான் அணிக்கு அறிமுக வீரர் சமி அஸ்லாம் (45) ஆறுதல் தந்தார். முகமது ஹபீஸ், ரிஜ்வான், பவத் ஆலம் தலா 4 ரன்னுக்கு ஆட்டமிழந்தார்.


ஹரிஸ் சொகைல் அரைச்சதம் (52) அடித்தார். ஒருமுனையில் விக்கெட் சரிந்த போதும், பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அசார் அலி, 101 ரன்னுக்கு ஆட்டமிழந்தார். சுமார் 5 ஆண்டுக்குப் பின் பாகிஸ்தான் ஒருநாள் அணித் தலைவர் ஒருவர், இப்போது தான் சதம் அடித்தார். இதன்படி பாகிஸ்தான் அணி 49 ஓவரில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வங்காளதேச அணிக்கு சவுமியா சர்கார், தமிம் இக்பால் ஜோடி சிறந்த தொடக்கம் கொடுத்தது. முதல் விக்கெட்டுக்கு 145 ரன்கள் எடுத்த நிலையில், தமிம் இக்பால் (64) ஆட்டமிழந்தார். மகமதுல்லா (4) ஏமாற்றிய போதும், சர்கார் சதம் கடந்து அசத்தினார்.

தொடர்ந்து சர்காருக்கு, முஷ்பிகுர் ரகிமும் கைகொடுக்க, 39.3 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 251 ரன்கள் எடுத்து, 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதையடுத்து, ஏற்கனவே முதல் இரு போட்டிகளில் அசத்திய வங்காளதேசம் ஹட்ரிக் வெற்றி பெற்று அசத்தியது.

சதம் அடித்த சர்கார் ஆட்ட நாயகனாகவும், தமீம் இக்பால் தொடர் நாயகனாகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

சித்திரைப் புதுவருடத்தினை சிறப்பித்து நயினாதீவு பொலிஸ் பிரிவினரால் 12 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்குமான விளையாட்டுப்போட்டி நயினாதீவு மணிமேகலை அரங்க வளாகத்தில் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்றது. இதில் மதகுருமார்களும், பொதுமக்களும், கடற்படையினரும் கலந்து சிறப்பித்தனர். (21)

# பரு.பிரதேச செயலக கிரிக்கெட்

# தொண்டைமானாறு ஒற்றுமை வெற்றி



பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 2015 ஆம் ஆண்டிற்கான விளையாட்டு விழாவின் கிரிக்கெட் இறுதியாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் வல்லை நெடியாகாடு விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் மோதியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகம் முதலில் துடுப்பெடுத்தாடியது. 10 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட ஆட்டத்தில் தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் 84 ஓட்டங்களைப் பெற பதிலுக்கு 85 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நெடியகாடு விளையாட்டுக் கழகம் 43 ஓட்டங்களைப் பெற, 41 ஓட் டங்கள் வித்தியாசத்தில் தொண்டைமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகம் வெற்றியை தனதாக்கியது.

போட்டி வல்லை நெடியகாடு விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது

## யங்கம்பன்ஸ் உதைபந்து

# நவஜீவன்ஸ், றெட்றேஞ்சர்ஸ் அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம்



கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் யாழ்.மாவட்ட ரீதியான 7 நபர் கொண்ட மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் 2ஆம் சுற்று கடந்த செவ்வாய்க் கிழமை பி.ப. 03:30 மணியளவில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் முதல் நடைபெற்ற போட்டியில் நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து கலட்டி ஐக்கியம் மோதியது. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இப்போட்டியில் இரு அணி வீரர்களும் மாறி மாறி கோல்களைப் போட ஆட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது இறுதியில் நவஜீவன்ஸ் மேலுமொரு கோலைப் போட்டு 4:3 என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.


இரண்டாவதாக இடம்பெற்ற போட்டியில், மணற்காடு சென்.அன்ரனிஸ், மானிப்பாய் றெடறேஞ்சர்ஸ் அணிகள் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய மானிப்பாய் றெட் றேஞ்சர்ஸ் 5:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (90)

# யாழ்.இந்து வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலய பாடசாலை அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டியில் யாழ் மத்தியை எதிர்கொண்ட யாழ்ப்பாணம் இந்துகல்லூரி. போட்டியின் போக்கை ஆரம்பம் முதல் தன்வசப்படுத்தி அனைத்து வீரர்களின் சிறந்த பங்களிப்புடன் 59:37 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (93.90)

# மேசைப்பந்தாட்டம் போட்டி அட்டவணை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான மேசைப்பந்தாட்டப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

இந்தப் போட்டிகளுக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளன.

**ஆண்கள் குழு A**

யாழ். மத்திய கல்லூரி (J/CC), தெல்லிப்பழை யூனியன் கல்லூரி (TUC), கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் (KCCC), ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை (ARCTMS)

**ஆண்கள் குழு B**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (UOJ), சென்.ஜோண்ஸ் கல்லூரி (SJC), ஒஸ்கா(Osca), யாழ்.இந்துக்கல்லூரி (JHC)

**பெண்கள் குழு A**

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி (TUC), கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் (KCCC), யாழ். இந்து மகளிர் கல்லூரி (JHLC), உடுவில் மகளிர் கல்லூரி (UGC)

**பெண்கள் குழு B**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (UOJ),வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை (VGHS), சுண்டிக்குழி மகளிர் கல்லூரி (CGC), ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை (ARCTMS)

# ஹொக்கி பயிற்சிமுகாம் தொடர்புகொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட ஹொக்கி சம்மேளனம் பாடசாலை மற்றும் விளையாட்டுக்கழக பயிற்றுவிப்பாளர்கள், சிரேஷ்ட விளையாட்டு வீரர்களுக்கான இரண்டு நாள் ஹொக்கி பயிற்சிநெறியை வழங்கவுள்ளது.

நாளையும், நாளைமறுதினமும் நடைபெறவுள்ள இப் பயிற்சி செயலமர்விலிருந்து விளையாட்டுக் கழகங்களிலிருந்து இருவரும், பாடசாலைகளிலிருந்து ஒருவரும் பங்குபற்ற முடியும்.

மேலதிக விபரங்களுக்கு ஜா.மதியழகன் 0777376975 அல்லது கோபிநாத் 0773478748 என்பவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# உடுத்துறை பாரதி உதைபந்து காலிறுதிக்கு வல்லை முன்னேற்றம்




உடுத்துறை பாரதி விளையாட்டு கழகம் 70 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தும் 11 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் நேற்று முன் தினம் காலை நடைபெற்ற 2ஆவது சுற்று ஆட்டத்தில் வல்லை விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வடமராட்சி கிழக்கு கட்டைக் காடு சென்மேரஸ் விளையாட்டுக் கழம் மோதியது.

முதல் பாதியில் சென்மேரிஸ் அணியினர் 2 கோல்களை பெற்று முன்னிலை வகிக்க 2 ஆவது பாதியில் மிகவும் சிறப்பாக விளையாடிய வல்லை அணியினர் 2 கோல்களை பெற ஆட்டம் 2-2 என சமநிலையில் முடிவுற்றது.

வல்லை அணி சார்பாக நிரூபன்,தாஸ் தலா 1 கோல்களைபெற்றனர் வெற்றியை தீர்மானிக்கும் தண்ட உதையில் வல்லை அணி 5 - 4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

காலிறுதியில் வல்லை அணி வெற்றிலைக்கேணி சென்செபஸ்தியன் அணியுடன் மோதவுள்ளது.

# எங்கேயிருந்து தொடங்க வேண்டும்?



**ப**ணக்காரர் ஒருவர் தனது வீட்டுக்கு மற்றொரு பணக்காரரை விருந்துக்கு அழைத்திருந்தார். விருந்தினர் வரும் போது வசதியான அந்த வீடு மிகவும் பளபளப்பாக இருக்கவேண்டும் என்பதற்காகச் சுத்தப்படுத்தி அழகுபடுத்தும் பணியும் நடந்தது.

அந்த வீட்டில் நடுவிலிருந்த பளிங்குகளால் ஆன படிக்கட்டுகளை பளபளப்பாக்கும் வேலையும் நடந்தது. வேலை செய்பவர்கள் மேலே இருந்து அதைச் சுத்தம் செய்து கொண்டு வந்தார்கள். ஆனால், அந்தப் பணக்காரர் ஒருவனைப் பார்த்து, "ஏன் மேலே இருந்து சுத்தம் செய்கிறாய், கீழே இருந்து சுத்தம் செய்து கொண்டு போ" என்றார்.

அங்கே வேலை செய்து கொண்டிருந்தவர்கள் அதைக் கேட்டு விழித்தார்கள். அந்தப் படிக்கட்டுகளை எப்படியும் சுத்தம் செய்யலாம். ஆனால் எது அதிகப் பலனைத் தரும். கீழே இருந்து சுத்தம் செய்தால், அதிக பட்சம் நான்கு படிக்கட்டுகளைச் சுத்தம் செய்யலாம். அதற்கும் மேல் சுத்தம் செய்ய, சுத்தம் செய்த படிகட்டுகள் மீதே கால் வைத்து ஏற வேண்டி இருக்கும். அது மீண்டும் அழுக்காகுமே...?

எப்படிப் படிக்கட்டுகளை மேலே இருந்து சுத்தம் செய்தால், அது அதிக பலனைத் தருமோ, அதே போல் மேலே இருப்பவர்கள் சுத்தமாக இருந்தால், அது சமுதாயத்தில் வேகமான மாற்றத்தை ஏற்படுத்தும். கீழிருப்பவர்களைப் பார்த்து ஒருவர் புகைப் பிடிப்பதோ அல்லது நல்ல செயல்கள் செய்வதோ மிகமிகக் குறைவு. ஆனால் அதே செயலை மேல்நிலையிலுள்ள ஒரு தலைவரோ அல்லது சிறப்பு பெற்றவரோ செய்தால் அதன் வீச்சு அதிகமாக இருக்கும்.

மாற்றம் இரு பக்கமும் வேண்டும். அது மேலே இருந்து ஆரம்பித்தால்தான் இன்னும் நன்றாக இருக்கும்.

# வடிவேலு ஓர் உடல் மொழிக் கலைஞன்!

**தெ**னாலிராமன் படத்துக்கு வடிவேலு நடிக்கும் "எலி" படத்தை இயக்கிவரும் யுவராஜ் தயாளன் சொல்கிறார்:

நடிகர் வடிவேலு ஓர் உடல் மொழிக் கலைஞன். எவ்வளவு பெரிய காட்சி, வசனமாக இருந்தாலும் அதை அவர் உச்சரித்து நடிக்கும் போது, வேறு ஒரு கோணத்துக்கு வந்து விடும். நாம் ஒன்று நினைத்து எழுதியிருப்போம். அவர் அதை வேறு ஓர் இடத்துக்கு எடுத்துச் சென்று இன்னும் மெருகேற்றுவார். நீங்கள் பார்த்து ரசிக்கிற அவரின் காமெடிக் காட்சிகளில் எல்லா இடங்களிலும் வடிவேலுவின் "டச்" இல்லாத காமெடி இல்லை.



இப்போதுதான் சினிமாவுக்கு அறிமுகமாகிற நடிகர் மாதிரி அவர் இருப்பது ஆச்சரியம். நான் ஒவ்வொரு காட்சியாக சொல்லிக் கொண்டே போக, அவர் இப்படி வைத்துக் கொள்ளலாமா? அப்படி வைத்துக் கொள்ளலாமா? என ஒவ்வொரு காட்சியாக நடித்துக் காட்டுவார்.

இந்தப் படம் 1960 - காலகட்டக் கதை. ஒரு கொள்ளைக் கூட்டம். அந்தக் கூட்டத்தின் ரகசியங்களைக் கண்காணிக்க, கடத்தல் வழிகளை ஆராய்ந்து காவல்துறைக்குச் சொல்ல ரகசிய உளவாளியாக அந்தக் கூட்டத்துக்குள் நுழைகிறார் வடிவேலு. அங்கு அவருக்கு கிடைக்கும் அனுபவங்கள்தான் கதை. அந்த கூட்டத்தில் இருந்து கொண்டே அவர் பணியை எப்படிச் செய்தார்? என்னவெல்லாம் நடந்தது என்பதை சுவையாகக் காட்டி இருக்கிறோம்.

வடிவேலுவுக்கு ஜோடியாக சதா... "தெனாலிராமன்" படத்துக்கே சதாதான் என் தேர்வாக இருந்தார். அப்போது இருந்த சூழலால் அவர் படத்தில் இல்லை. வடிவேலு ரகசிய உளவாளியாக இருக்கும் அந்த கொள்ளைக் கூட்டத்தில் சதாதான் கிளப் டான்ஸர். வடிவேலுவுக்கும் சதாவுக்குமான இடம் ரொமான்ஸ், காதல் என்பதையும் மீறி அந்த இடமும் காமெடியால் அதகளப்படும். ஆரூர் தாஸின் வசனம், வித்யாசாகரின் மியூசிக் இரண்டும் படத்துக்கு தனித்துவம்.



# மைக்கேல் ஜாக்ஸன் 1

## மீற முடியாததோர் இசைக்கனவு

**வா**ழ்க்கையைக் குறித்த ஒரு ஜென் கதையை நாம் எல்லோரும் கேள்விப் பட்டிருப்போம். அடர்ந்த கானகத்தில் கொடும் விலங்கினால் துரத்தப்பட்டு ஓடி-வரும் ஒருவன் பாழும் கிணற்றில் தடுமாறி விழுந்து, ஒரு விழுதைப் பிடித்துக் கொண்டு தொங்குகிறான். அப்போது அந்த மரத்திலிருந்து ஒரு பாம்பு அவனை நோக்கி நகர்ந்து வருகிறது. இவன் விழுந்ததால் கலைந்து போன தேன் கூட்டிலிருந்து தேன் சொட்ட, அந்தத் தேனை சுவைத்து நக்கினான் அவன் என்பது அந்தக் கதை.

அந்தக் கதையில் வரும் அதே போன்ற அபாயகரமான சூழலில்தான் இன்றைய உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. மதவாதிகளும், அரசியல்வாதிகளும், தேச பக்தர்களும், தேசத் துரோகிகளும், ஆயுத உற்பத்தியாளர்களும் இந்த உலகை ரத்தக் களரியாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இத்தகைய சூழலில் வாழ்வு குறித்த நம்பிக்கையையும், கனவையும் அளித்ததாலேயே உலகம் பூராவும் கோடிக்கணக்கான இளைஞர்களும், குழந்தைகளும் மைக்கேலை ஒரு தீர்க்கதரிசியைப் போல் கொண்டாடுகிறார்கள். அந்தக் காரணத்தினால்தான் அவருடைய ஆல்பங்களின் விற்பனை 75 கோடியைத் தாண்டின; 13 கிராமி விருதுகள் கொடுக்கப்பட்டன.

இயேசு கிறிஸ்துவுக்குப் பிறகு இந்த உலகில் அதிக அளவு பிரபல்மானவராக அறியப்பட்டவர் மைக்கேல் ஜாக்ஸன். தேசம், மொழி, மதம் என்ற வரையறைகளையெல்லாம் தாண்டி உலகின் ஒவ்வொரு மூலையிலும் அவருக்கு மிகத் தீவிரமான ரசிகர் கூட்டம் இருந்தது. எங்கோ ஒரு குக்கிராமத்தில் கூட ஒரு சிறுவன் நன்றாக நடனம் ஆடினால் "குட்டி மைக்கேல் ஜாக்ஸன்" என்று அழைக்கப்படும் அளவுக்கு அவரது புகழ் பரவியிருந்தது. ஆனால் இவர்களுக்கெல்லாம் ஒரு ஜோன் லெனனையோ, பொப் மார்லேயையோ தெரியுமா? உலகில் உள்ள நூற்றுக் கணக்கான பாடகர்களையும், நடனக்காரர்களையும் மீறி மைக்கேல் ஜாக்ஸன் என்ற ஒரே ஒருவர் மட்டும் இவ்வளவு பிரபலம் அடைந்ததற்குக் காரணம் என்ன?

மைக்கேலின் குரலிலும் நடனத்திலும் இருந்த மஜிக்தான் காரணம். "பில்லி ஜீன்" என்ற பாடலுக்கு அவர் ஆடிய ஆட்டத்தில் யாராலும் நம்பவே முடியாத "மூன்வோக்"கை (MoonWalk) நடந்து காண்பித்தார். 1983-இல் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக அவர் இந்த நிலவு நடையை நடந்து காண்பித்ததை உலகம் பூராவும் 5 கோடி பேர் பார்த்தார்கள். நிலவில் நடப்பதைப் போன்ற இந்த நடையை இவருக்கு முன்பே ஓரிரண்டு ஆட்டக்காரர்கள் ஆடியிருந்த போதிலும் மைக்கேல் ஆடிய போதுதான் இது உலக அளவில் பிரபலமாகியது. முன்னோக்கி நடக்கும் ஆட்டக்காரர் ஏதோ ஒரு விசையால் பின்னோக்கி இழுக்கப்படுவதைப் போல் தோற்றம் தரக் கூடியதாக ஒரு கால் பின்னோக்கி நகரும் இந்த நிலவு நடையை மைக்கேல் மேடையில் நிகழ்த்திக் காண்பிக்கும் போது இதைப் பார்க்கும் அத்தனை பேருமே ஒரு பித்தநிலைக்குப் போவதைக் காணலாம். அதோடு இந்தப் பாடலில் அவர் அவ்வப்போது கொடுக்கும் விக்கல் ஒலியும் பிரசித்தமானது.

"The Way You Make Me Feel" என்ற பாடல் இளைஞர்களுக்கானது. அது ஒரு காதல் பாடல். காதலிக்கும் போது நீ நீயாக இரு என்பது செய்தி. அந்தப் பாடலிலும் காண்பவர்களை வசியம் செய்யும் விதத்தில் முன்னங்கால்களைத் தேய்த்துத் தேய்த்து நடப்பார் மைக்கேல்.



மைக்கேல் தன்னுடைய எல்லாப் பாடல்களிலுமே ஒரு சுவாரசியமான கதை சொன்னார். அல்லது, உலக சமாதானம் குறித்த தனது அரசியல் கருத்துக்களை மிகக் காத்திரமாகப் பதிவு செய்தார். கதைகளில் மாயாஜாலக் கதை, சாகசக் கதை, பேய்க் கதை (த்ரில்லர்), சயன்ஸ் ஃபிக்ஷன் கதை (ஸ்மூத் க்ரிமினல்), கார்ட்டூன் பொம்மைக் கதை (Speed Demon) என்று பலவிதமான கதைகளைப் புனைந்தார். அவர் சொன்ன க்தைகளும் உலக அளவில் சிறுவர்களை ஈர்த்ததற்கு மற்றொரு காரணம்.

"Remember the Time" என்று ஒரு பாடல். எகிப்திய மன்னன் ராம்ஸேஸ் (நடிப்பு: எட்டி மேர்ஃபி) மது அருந்திக் கொண்டிருக்கிறான். அரசிக்கு ஒரே அலுப்பாக இருக்கிறது. "என் பேரோ தன்னுடைய அரசிக்காக கேளிக்கை காண்பிப்பானா?" என்று கேட்கிறாள். குச்சிகளை வைத்து வித்தை காட்டும் ஒருவன் வந்து



தன் திறமையைக் காட்டுகிறான். அரண்மனையின் பணிப்பெண்கள்தான் அதை ரசிக்கிறார்கள். அரசிக்கு எரிச்சல் வருகிறது. "இதெல்லாம் ஒரு கேளிக்கையா? இவனை சிங்கத்துக்கு இரையாக்குங்கள்" என்கிறாள். அடுத்து வருபவன் தீயை விழுங்குபவன். அவன் சிரச்சேதம் செய்யப்படுகிறான்.

அடுத்து, முகத்திலிருந்து கால் வரை முக்காடு இட்ட ஒரு உருவம் வருகிறது. அது தரையில் ஒரு பொடியைத் தூவி விட்டு அதன் மேல் நிற்கிறது. உடனே அந்த உருவம் மறைந்து அந்த முக்காடு மட்டுமே தரையில் விழுகிறது. அரசி முதல் முதலாக ஆச்சரியம் கொள்கிறாள். பிறகு அந்த இடத்திலிருந்து ஜொலிக்கும் ஆணழகன் ஒருவன் முளைக்கிறான். அவளை வசீகரிக்கும் ஆட்டத்துடன் ஒரு பாடலைப் பாடுகிறான். அந்தப் பாடல் அவளைக் கால எந்திரத்தில் 3500 ஆண்டுகள் முன்னோக்கி இழுத்துச் செல்கிறது. "நாம் ஒரு காலத்தில் காதலர்களாக இருந்தோம் அது உனக்கு ஞாபகம் இருக்கிறதா? கைகளைக் கோர்த்தபடி கடற்கரைகளில் உலா வந்தோம். இரவும் பகலும் தொலைபேசியில் பேசினோம். எல்லாம் திடீரென்று ஒரு முடிவுக்கு வந்ததே, ஏன்? உனக்கு அதெல்லாம் ஞாபகம் இருக்கிறதா பெண்ணே?"

இதைக் கேட்டுக் கடுங்கோபம் அடையும் ஃபேரோ அவனைக் கொல்லும்படி ஆணையிட, சேவகர்களால் அந்த ஆட்டக்காரனைப் பிடிக்கவே முடியவில்லை. அவன் ஒரு மந்திரவாதி. பிடித்தால் காற்றாய்க் கரைந்து வேறோர் இடத்துக்குப் போய் அங்கிருந்து ஆடுகிறான் அரசியிடம் தனது பழைய காதல் கதைகளைப் பாடி அவளை மயக்குகிறான். கடைசியில் ஃபேரோவும் அவனுடைய சேவகர்களும் அவனை நான்கு பக்கமும் சூழ்ந்து கொள்ளும் போது அவன் திரும்பவும் பழையபடியே மந்திரத் தூளாக மாறி காற்றில் கலந்து விடுகிறான்.

- சாருநிவேதிதா -

(தொடரும்)

# விஞ்ஞானி நியூட்டன்

- ரவி நடராஜன் -



இத்தாலியரான கலிலியோ, சூரியனை சுற்றித்தான் பூமி சுழல்கிறது என்ற கோப்பர்னிகஸ் தத்துவத்தை ஆதரிக்கப் போய், கத்தோலிக்க திருச்சபையின் மேலாட்சி அமைப்பினால் இம்சிக்கப்பட்டார் என்பதைப் பார்த்தோம். இங்கிலாந்தில் வாழ்ந்த நியூட்டனின் நிலை மேலானதாக இருந்ததா என்றால், அப்படி ஒன்றும் இல்லை. ஆனால் கலிலியோவை விட அவருக்குச் சற்று மேலான வாய்ப்புகளும், கருத்து வெளியீட்டில் திறப்புகளும் கிட்டின.

இருந்த போதும், முழுவதும் வெளிப்படையாக கருத்துப் பரிமாற்றம், மற்றும் அறிவார்ந்த சர்ச்சைகள் எழுந்தமை 19-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகே என்று சொல்லலாம். இதெல்லாம் நியூட்டனின் காலத்துக்கு வெகு காலம் பின்னரே கிட்டியவை.


நியூட்டன் சிக்கலான வாழ்வு வாழ்ந்தவர். ஒரு புறம், நாடாளுமன்ற உறுப்பினர், மற்றொரு புறம் நாணய சாலையின் தலைவர், வேறொரு புறம், றோயல் சொஸைட்டியின் தலைவர். பௌதிகத் துறையை புரட்டிப் போட்டவர் என்று எல்லோராலும் இன்று ஒப்புக்கொள்ளப்பட்ட மேதை இவர். ஆனால், இவரது முறைகள் முற்றிலும் திறந்த முறைகள் அல்ல. தலை சிறந்த விஞ்ஞானியாக இருந்த போதும், இவர் தன்னுடைய ஆராய்ச்சியை வெளியிடத் தயங்கியவர். பலரும் வற்புறுத்தியதால் இவர் "Principia Mathematica" என்ற ஆராய்ச்சிப் புத்தகத்தைக் கைப்பட எழுதி வெளியிட்டார். இதை அச்சிட இவர் எந்த முயற்சியும் எடுக்கவில்லை - இத்தனைக்கும், அன்றைய தத்துவ, அறிவியல் கருத்துகள் மேலும் பரிமாற்றங்களுக்கு என்று உருவாக்கப்பட்டதும், அவற்றின் உயர்பீடமாகக் கருதப்பட்டதுமான றோயல் சொஸைட்டியின் தலைவர் இவர்! மற்றவர்கள் இவருடைய மேதமையை புரிந்து கொள்ளப் பல வருடங்கள் ஆயிற்று. ஐனஸ்டீனைப் போலவே, எளிதில் புரிந்து கொள்ள முடியாதவர் என்று பெயர் எடுத்தவர் நியூட்டன்.

இவர் கலிலியோ செய்ததைப் போல பல சோதனைகளைச் செய்து (ஒளி, ஈர்ப்புசக்தி, இரசாயனம்), முன்னிலைகளையும், சோதனைக்காளாகும் பொருட்களின் நிலைகளையும், மாறுதல் நிகழும் விதங்களையும், மாறுதலுக்குப் பின்பு கிட்டும் விளைவுகளையும் துல்லியமாக அளக்க வேண்டும் எனவும் அப்படியே அளக்கவும் தெரிந்த விஞ்ஞானி.

இவர் காலத்தில் விஞ்ஞானிகள் எப்படியாவது மற்ற உலோகங்களைத் தங்கமாக மாற்ற இரசாயன முறைகளைத் (Alchemy) தேடி வந்தனர். இவரும், பல சோதனைகளை செய்து, வெளியிடவே இல்லை. நியூட்டனின் வெளியிடாத, தொலைந்து போன ஆராய்ச்சிகள், வெளி வந்த ஆராய்ச்சிகளைவிடப் பல நூறு மடங்கு என்று கணக்கிடப்பட்டுள்ளது. அவர், இறந்த பல ஆண்டுகளுக்குப் பிறகு, வம்சாவளியாக வந்தவர்களிடம், அவரது எழுத்துக்களை சிலர் ஏலத்துக்கு வாங்கி சில எழுத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

தன்னுடைய ஆராய்ச்சிகளை வெளியிட்டு, கண்டவர்கள் ஏளனம் செய்வதை இவரால் பொறுக்க முடியவில்லையாம். இதனால், தன்னுடைய ஆராய்ச்சியை வெளியிட வாழ்நாள் முழுவதும் தயங்கியவர் நியூட்டன். முதன் முறையாக, விஞ்ஞானத்தில் கணிதவியலுக்கு முக்கிய பங்குண்டு என்று உலகிற்கு நிரூபித்தவர் நியூட்டன். இன்று உயர்நிலைவகுப்பில் எல்லோரும் படிக்கும் நுண்கணிதம் (calculus) இவரின் முக்கிய பங்கு. அதிலும், லைப்னிஸ் என்ற கணித மேதையுடன் மோதல் - யார் முதலில் நுண்கணிதத்தைக் கண்டுபிடித்தவர் என்று கடைசி வரை முடிவாகவே இல்லை.

நியூட்டன், கோட்பாடு மற்றும் சோதனை அறிவியலின் தந்தை என்று ஒப்புக் கொள்ளப்பட்டாலும், இவரது இரகசிய முறைகள், இன்றைய திறந்த விஞ்ஞான பரிமாற்ற முறைகளுக்கு முற்றிலும் மாறுபட்டவை. எந்தக் கட்டுரை, எப்படி வெளியாக வேண்டும் என்று சட்டதிட்டங்கள் தீட்டும் பணியையும் நியூட்டன் ஆரம்பித்து வைத்தார். அவர் தொடக்கிய சில விஞ்ஞானச் சடங்குகள் அன்றிலிருந்து இன்றுவரை, இந்த திறந்த தகவல் உலகத்திலும் தொடர்கின்றன.




நியூட்டன், மாற்றுகருத்துள்ளவர்களை துவைத்து எடுப்பதில் மிகவும் ஆர்வம் கொண்டவர். பல தருணங்களில், இவர் தனிப்பட்ட தாக்குதல்களையும் விட்டு வைக்கவில்லை. ஹூக் (Robert Hooke) என்னும் சக விஞ்ஞானியுடன் இப்படிப்பட்ட கசப்பான விவாதம் நியூட்டனின் வாழ்க்கையின் ஒரு அம்சம். இன்று விஞ்ஞான கருத்துப் பரிமாறல்கள் தனிப்பட்ட எதிர்ப்புகளைத் தாண்டி நிற்கின்றன, இதற்கு எதிரான நிலையே நியூட்டன் காலத்தில் நிலவியது.

நியூட்டனின் ஆராய்ச்சிக்குச் சந்திரனின் துல்லியமான வான் நிலை (lunar positions) பற்றிய விவரம் (data) தேவைப்பட்டது. அவருடைய நாட்களில் சந்திரனின் துல்லிய நிலை, மாலுமிகளுக்கு மிகவும் தங்களுடைய பயணங்களுக்கு உபயோகப்படும் என்று கருதப்பட்டது. ஆனால், பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்த நியூட்டனுக்கு தகவல் சேகரிக்க நேரமில்லை. ஆனால், தன்னுடைய நாட்டு மாலுமிகளுக்கு உதவ வேண்டும் என்று ஆசைப்பட்டார். சந்திரனின் விண் நிலைகள்ள ஜோன் ஃப்ளாம்ஸ்டீட் (John Flamsteed) என்னும் வானியல் விஞ்ஞானி பொறுமையாகக் கணித்துச் சேகரித்து வந்தார். நியூட்டன் ஜோனை சந்தித்து, மாலுமிகளுக்கு உதவச் சந்திர நிலை பற்றிய விவரங்களைக் (data) கேட்டுள்ளார். ஜோன் உடனே ஒப்புக் கொள்ளவில்லை. தன்னுடைய உழைப்பு, தனக்கு விருப்பமில்லாத விஷயங்களுக்கு உபயோகிக்கப்படும் என்ற அச்சம் அவருக்கு. மேலும், யாரோ செய்யும் தவறுக்கு, தான் உடந்தையாகி விடுவோமோ என்றும் கவலை அவருக்கு.

வெறுத்துப் போன நியூட்டன், தன்னுடைய பதவியைக் காட்டி மிரட்டவும் முயற்சித்தார். தயங்கிய வண்ணம் ஜோன் விவரங்களைக் கொடுத்தாலும், இவர்களுக்குள் பகை வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தது. ஒரு சோதனை விஞ்ஞானியும், ஒரு கோட்பாடு மேதையும் சேர்ந்து வேலை செய்ய எவ்வளவு தயங்கினார்கள் என்பதை இன்று சிலரே அறிவார்கள். நியூட்டனுக்குத் துல்லிய சோதனை விவரத்தின் மதிப்பு புரிந்தது. ஆனால், அவருக்கும் சில கௌரவப் பிரச்சினைகளும் இருந்தன.

இதற்கு நேர் எதிரான விஷயம் ஒன்று, நியூட்டனுக்கு முன் வாழ்ந்த ஜேர்மானிய விஞ்ஞானி ஜொஹானெஸ் கெப்லரின் (Johannes Kepler) வாழ்வில் நடந்தது. இவர் வானியல் மற்றும் கணக்கியல் நிபுணர். இவர் வாழ்ந்த காலத்தில், டிக்கொ பிராஹி (Tyco Brahe) என்ற ஒரு விஞ்ஞானி உண்டு. இவர் ஒரு தீவுக்குச் சொந்தக்காரர். தன்னுடைய தீவில், நட்சத்திரங்கள் மற்றும் கிரகங்களின் வானத்து நிலையைத் துல்லியமாக அளக்க ஒரு வான் ஆய்வகத்தை (observatory) நிறுவினார். இவருடைய துல்லிய அளவிடல்கள் கெப்லரின் கிரக இயக்க கோட்பாடுகள் உருவாக உதவின.. டிக்கோவிற்கு தன்னுடைய அளவீடுகளைக் கெப்லரிடம் தருவதில் எந்தத் தயக்கமும் இருக்கவில்லை.





# ஷாம்பெய்ன் வீடு!

மனிதராக பிறந்த ஒவ்வொருவருக்குமே வாழ்நாளில் எப்படியாவது, தங்களின் கனவு இல்லத்தை கட்டி, அதில் குடியேறி விட வேண்டும் என்ற ஆசை இருக்கும். ஆனால், பலருக்கு அந்த ஆசை நிறைவேறுவது இல்லை. ரஷ்யாவை சேர்ந்த ஹமிதுல்லா இல்பிஷெவுக்கும் இப்படி ஒரு ஆசை ஏற்பட்டது. அவரின் ஆசை மிக மிக வித்தியாசமானது.

காலியான ஷாம்பெய்ன் மதுப் போத்தல்களால் வீடு கட்ட வேண்டும் என்பது தான், அவரின் ஆசை. மிகவும் சிரமப்பட்டு, அந்த ஆசையை நிறைவேற்றினார் ஹமிதுல்லா. ஆம் 12,000 ஷாம்பெய்ன் போத்தல்களால், அழகான வீட்டை அமைத்துள்ளார். இதற்காக, பல கட்டட நிபுணர்களின் ஆலோசனையையும் பெற்றுள்ளார்.

# ரஷ்ய ஜனாதிபதியின் மகள்!

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமர் புடின். ஏதாவது செய்து, அவ்வப்போது செய்திகளில் இடம் பிடிப்பார். ஆனால், அவருடைய இரண்டு மகள்களைப் பற்றிய செய்திகள் வராமல் இருக்க, படுகவனமாக இருப்பார்.

இந்நிலையில், 30 ஆண்டுகள் இவருடன் வாழ்ந்த இவரது மனைவி லுட்மிலா கடந்த ஆண்டு, இவரை விவாகாரத்து செய்து விட்டார். அத்துடன், மூத்த மகள் மரியா நெதர்லாந்தில் வாழ்ந்து வருகிறார் என்றும், தென் கொரிய இராணுவ உயர் அதிகாரி ஒருவரது மகனை, விரைவில் திருமணம் செய்யவிருப்பதாகவும் தற்போது தகவல் வெளியாகி உள்ளது.

இச்செய்தியை, அதிபர் புடின் ஒப்புக் கொள்ளவோ, மறுக்கவோ இல்லை.



# 18 மகிமை வாய்ந்த 18

- சிங்கம் 18 ஆண்டுகள் வரை வாழும்.
- ஒட்டகச் சிவிங்கி 18 அடி உயரம் வரை வளரும்.
- பெங்குவின்களில் 18 வகை உள்ளன.
- ராஜநாகம் 18 அடி நீளம் வரை வளரும்.
- ஒரு ட்ரில்லியனுக்கு 18 பூச்சியங்கள்.
- மொனாகோ நாட்டின் பரப்பளவு 18 ச.கி.மீ.
- முதன்முதலாக இதய மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட பின் ல்ூயிஸ் வாஷ்கன்ஸ்கை உயிரோடு இருந்த நாட்கள் 18.

# ‘சைவ மணித்தீவு’ எனும் சிறப்புக் கொண்ட அனலைதீவின் பெருமைகள்

ஈழத்தின் வடபால் யாழ். குடா நாட்டின் தீவகப்பிர தேசங்களில் சைவ மணித்தீவு என்று சிறப்பித்துக் கூறப்படுவது அனலைதீவு ஆகும். நயினாதீவுக்கும் எழுவை தீவுக்கும் இடையில் காணப்படும் இத்தீவு சுமார் 10 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக்கொண்டது. சிறந்த நன்னீர் வளத்தால் விவசாய செய்கை, கடல் வளத்தால் மீனவத் தொழில் என்பன பிரதானமாகவும், அரச துறையில் பல்வேறு வகிபாகங்களையும் இவ்வூர் மக்கள் கொண்டுள்ளனர். தற்போது சுமார் 3,000 பேர் வசித்து வருகின்றனர். அனலைதீவு மக்களின் பூர்வீக இருப்புத் தொடர்பில் தெளிவான தகவல்கள் இல்லாதபோதும் இவர்கள் தம்மை தனிநாயக முதலியாரின் வழித்தோன்றல்களாகக் கருதுகின்றனர். இதன் மூலம் இவர்கள் யாழ்ப்பாண இராச்சியத்தின் சோழர் குடியேற்ற தொடர்பினை வரலாறாக கொண்டுள்ளனர் . இருந்தும் தீவகத்தின் கண்ணகை அம்மன் வழிபாடு, ஐயனார் வழிபாடு, பேச்சு வழக்கம், உணவு பழக்க வழக்கம் என்பன சேரத்தமிழர்களாக இவர்களை வகைப்படுத்தத் தூண்டுகின்றன.

அனலைதீவானது அதன் காரணப்பெயரான அணை – அலை தீவு என்பதிலிருந்து மருவியது என்பர். போர்த்துக்கீசர் இத்தீவிற்கு இட்ட பெயர் டொனா கிளாரா தீவு என்பதாகும். ஒல்லாந்தர் இட்ட பெயர் ரொட்டர்டாம் தவிர சிங்களத்தில் அக்னிதிவயின என்று வர்ணிக்கப்படுகின்றது. இது அனல்(அக்னி) கூடிய தீவு என்ற சம்ஸ்கிருத சொல்லின் மொழி பெயர்ப்பாகும். இத்தீவுக்கு இப்பெயர் சிவனின் நெற்றிக்கண்ணுக்கு ஒப்பிட்டு சூட்டப்பட்டதாகும். அனலைதீவின் இரு மருங்கும் காணப்படுவது பருத்தீவு மற்றும் புளியந்தீவு என்பதாகும். இம்மூன்று தீவுகளும் சிவபெருமானின் கண்களாக உருவகிக்கப்படுகின்றது. அனலைதீவு – அக்னிதீவு(நெற்றிக்கண்) பருத்தீவு – சூரியன் உதயமாகும் தீவு (வலக்கண்) புலியந்தீவு – அம்புலியன் சிவனாரின் தீவு (இடக்கண்) எனப்போற்றப்படுகின்றது.

## ஆலய வழிபாட்டில் அனலைதீவு

சைவமும் தமிழும் ஒருங்கே·பேணப்படும் இத்தீவில் ஆலயங்களும் அங்கு இடம் பெறும் ஆகம வழிபாடுகளும் பிரசித்தமானவை. அவ்வாறே ஆறுமுக நாவலரால் நெறிப்படுத்தப்பட்ட அவரது மாணாக்கரான ஸ்ரீமத் சின்னப்பா உபாத்தியாரால் ஸ்தாபிக்கப்பட்ட சதாசிவ சைவத்தமிழ் பாடசாலை இன்று 125 ஆண்டுகளை கடந்து வித்யா தானம் செய்துவருகின்றது. மேலும் இரு ஆரம்ப பாடசாலைகளும் 4 முன்பள்ளிகளும் இயங்குகின்றன. வெளிச்ச வீடு, பாதச்சுவடு என்பன வரலாற்று சின்னங்களாகும்.

ஆலயங்கள் வரிசையில் பிள்ளையார், ஐயனார், முருகன், சிவன், அம்மன், விஷ்ணு, வைரவர் எனப்பல தெய்வ வழிபாடுகள் முதன்மை பெறுகின்றன. இவற்றுள் ஐயனார் அனலைதீவை அடையாளப்படுத்த உதவுவதுடன் புளியந்தீவில் காணப்படும் சிவனாலயம் பண்டைய நாகேஸ்வரத்தையும் நயினை நாகபூஷணியை தொடர்பு படுத்தும் ஆலய மாகவும் விளங்குகின்றது.

ஊர்காவற்றுறையில் இருந்து மோட்டார் படகில் (லோஞ்சு) பயணித்து ஐயனார் இறங்கு துறையில் இறங்கினால் நம்மை வரவேற்பது கோட்டை மாதா கோவில் எனக்கூறப்படும் கௌரி அம்பாள் கோவில் ஆகும். இது நயினையைப்போல் இறங்கு துறையில் கோவில் கொண்ட கண்ணகி அம்பாள். காலத்தால் கௌரி அம்பாளாக மருவியது என்பர். நாகபூஷணி ஆலயம் போர்த்துகீசரால் அழிக்கப்பட்டபோது இக்கோவிலும் சிதைக்கப்பட்டது. தவிர ஒல்லாந்தர் காலத்தில் அவ்விடத்தே வேளாங்கன்னி மாதா கோவில் கட்டப்பட்ட போதும் சைவமணித்தீவில் அதன் தேவை ஏற்படாததால் அதை அனலைதீவு மக்கள் நிராகரித்து மீண்டும் அம்பாளை ஆவாகனம் செய்தனர்.

ஊரின் முதல் நாற்சந்தியை அடைந்தவுடன் காணப்படுவது பெரியபுலம் சங்கரநாதர் மகா கணபதிப்பிள்ளையார் கோவிலாகும். முதன்மை கடவுளரின் தேவை கருதி உருவாக்கப்பட்ட இவ் ஆலயதிற்கே பொங்கல், திருவிழா என்பன முதன்முதலாக நடாத்தப்படும், சித்திரை வருட பிறப்பை தேர்த்திருவிழாவாக கொண்டு பத்து நாள் மஹோற்சவம் இடம்பெறும். பெருங்கதை படிப்பு, தைப்பூஷம், ஆவணி சதுர்த்தி, மாத சதுர்த்தி என்பன இங்கு விசேடமாக இடம் பெறும்.

துறைமுகவீதியால் நேரே சென்றால் நாம் தரிசிப்பது வரலாற்று சிறப்பு மிக்க ஐயனார் ஆலயம் ஆகும். இது இலங்கையில் மிகப்பெரிய ஐயனார் ஆலயமாகவும், மிகப்பெரிய சித்திரத் தேரைக்கொண்டதாகவும் விளங்குகின்றது. 13 அல்லது 16 ஆம் நூற்றாண்டுக்குரியதாக கூறப்படும் இவ் ஆலயம் அனலைதீவு மக்களால் மட்டுமன்றி தீவக, யாழ், வன்னி மக்களாலும் காவல் தெய்வமாக போற்றப்படுகிறார். உலகம் பூராகவும் பரவிக்காணப்படும் ஐயப்பனின் மூல கடவுளரான இவர் யானை வாகனத்தில் பூரணை புஷ்கலை சமேத ஹரிஹர புத்திர ஐயனாராக காட்சி கொடுப்பார்.

இந்தியாவின் சிவகங்கை மாவட்டம் கல்லல் துடல் எனும் ஊரில் இருந்து இறைவனின் விதிப்படி கடலில் பெட்டகம் ஒன்றினுள் பாதுகாப்பாக வைக்கப்பட்ட ஐயனாரின் சிலை விக்கிரகம் ஒரேகல்லில் உருவான சுயம்பு விக்கிரகம் ஆகும். சேதுக்கடலில் ஒதுங்கிய அதனை கூழாமரவடியில் ஸ்தாபித்து பூஜிக்கத்தொடங்கிய காலம் முதல் இன்றுவரை ஐயனாரின் திருவருள் பேருண்மையானது.


1627 இல் யாழ். தீப கற்பத்தை தாக்கிய கடற்கோளின் (சுனாமி) போது ஐயனார் கடலலையை கட்டுப்படுத்தி மக்களை காத்த வரலாறு உண்டு. இதனை வரகவி முத்து குமார சுவாமி புலவர் அழகாக பாடியுள்ளார். இது தொடர்பான சித்திர வேலைப்பாடுகள் ஐயனாரின் 38 அடி உயரமான தேரிலும் செதுக்கப்பட்டுள்ளது.

1974 முதல் 1980 வரை உருவாக்கப்பட்ட இத்தேர் உலகப்புகழ் வாய்ந்தது. ஆடி அமாவாசையை அடுத்து வரும் பௌர்ணமியை தீர்த்த திதியாகக்கொண்டு 10 தினங்கள் திருவிழா இடம் பெறும். ஒன்பதாம் திருவிழாவான தேர்த்திருவிழாவிற்கு இலங்கையின் அனைத்து பாகத்திலிருந்தும், புலம்பெயர் தேசங்களிலிருந்தும் ஐயனாரின் பக்தர்கள் ஒன்று சேர்வார்கள். கற்பூரச்சட்டி முதல் பறவைக் காவடி வரை பல்வேறு நேர்த்திகள் ஐயனுக்கு அணிவகுக்கும், தங்க ஆபரண நேர்த்திகள் ஐயனை அலங்கரிக்கும் காட்சிகள் மிக பிரசித்தமானவை. இவை ஐயனாரின் பெரும்புகழை முரசு கொட்டி நிற்கின்றன.

மேலும் அனலைதீவில் காளி கோவில், விஷ்ணு கோவில், முத்துமாரி அம்மன் கோவில், வீர பத்திரர் கோவில் என்பன குலக் கோவில்களாகவும், எட்டுக்கும் மேற்பட்ட காவல் தெய்வமான வைரவர் கோவில்களும் காணப்படுகின்றன. தினசரி பூஜைகள் விசேட பூஜைகள என்பன இங்கு நேர்த்தியாக இடம் பெறுகின்றன. இத்தீவில் அனைத்து இந்துமத கடவுளர்களுக்கும் ஆலயம் இருப்பது சிறப்பு அம்சமாகும். இதனால் தான் இவ்வூர் சைவமணித்தீவு என போற்றப்படுகின்றது. இங்கு ஆகம விதி முறைகள் பிரளாவண்ணம் கிரியைகள் இடம் பெறுவதும், சிறப்பான ஆலய பரிபாலனம் இடம்பெறுவதாலும். கண்டிப்பான ஆச்சார சீலர்களாக மக்கள் விளங்குவதும் ஆன்மிகம் தழைத்து ஓங்கக் காரணம் ஆகும். இருந்தும் கடந்த கால போர்ச்சூழல் இவ்வூர் மக்களை கல்வி மற்றும் புலம் பெயர் காரணங்களுக்காக அவ்வூரை விட்டு விலகச் செய்தாலும் அவர்களின் நாவிலும் மனதிலும் ஐயனார் முதல் அனைத்து கடவுளர்களும் வாசம் செய்வதைக்காணலாம்.



அனலைதீவு அறநெறிப் பாடசாலை



ஆலய வழிபாடுகளின் காட்சி



கடந்த இரண்டாம் மாதம் திறந்து வைக்கப்பட்ட பிரதேச வைத்தியசாலையின் வெளிநோயாளர்பிரிவு





மாணவர்கள் நலன் மற்றும்பாதுகாப்புப் பற்றிய அரச அதிகாரிகளின் கலந்துரையாடலின்போது சமுகமளித்த பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள்.



இந்தவருடம் தீவகத்துள் சிறப்பான விளைச்சல் பெற்ற அனலைதீவு விவசாயம்



விருதுபெற்ற அனலைதீவு பொது நூலகம்

# தேனீர்க் கடைகளை நடாத்துவதில் உரிமையாளர்கள் திண்டாட்டம்

நெடுங்கேணியில் சுகாதாரப் பரிசோதகரின் கெடுபிடி காரணமாக அதிக தேனீர்க்கடைகள் பூட்டும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

நெடுங்கேணி தேனீர்க்கடைகள் ஓரளவு வசதிகளோடு இயங்கி வந்த போதிலும் அதனை முழுமையாக நவீனப்படுத்தும்படி உத்தரவு பிறப்பித்ததோடு சில தேனீர்க்கடைகளுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தினால் தேனீர்க்கடைகள் மூடப்பட்டுள்ளன. இராணுவத்தினரால் நடாததப்படும தேனீர்க் கடைக்கு சுகாதார பரிசோதகர் களினால் எந்தவித நடவடிக்கையும், இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அவர்கள் திறந்த வெளியில் எதுவிதமான சாப்பாடுகளையும் விற்கமுடியும்.

சாதாரணமான ஒரு தேனீர்க்கடையை தமிழ் வர்த்தகர்கள் நடாத்த முடியாத அளவுக்கு சுகாதார பரிசோதகரால் தள்ளப்பட்டுள்ளனர்.

இது போன்ற செயல்களினை சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு சுகாதாரத்துக்கு பாதக மில்லாமல் கடைகள் இயங்குவதற்கு ஒத்தாசை வழங்கித் தருவதோடு தமிழ் மக்களின் கடைகளை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தி இராணுவக் கடை களுக்கு ஊக்கம் வழங்குவதாக இப் பிரதேச மக்களும் சிறிய தேநீரத கடை உரிமையாளர்களும் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது போன்ற செயல்களை அனைத்து தேநீர்த் கடைகளுக்கும் ஒரே சட்டமாக சுகாதார பரிசோதகர் களினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென பாதிக்கப்பட்ட தேநீர கடை உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிறுத்தப்பட்டிருந்த வேலைகள் மீண்டும் தொடர ஏற்பாடு

திருநெல்வேலி சந்தையின் கீழ்த்தள வேலைகளும் கொக்குவில் பொது நூலகத்தின் மாடிக் கட்டட நிறுத்தப்பட்ட வேலையும் தொடரப் படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.வசந்த குமார் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி சந்தையின் தரைப்பகுதி முற்றிலும் சிமெந்து இடப்பட்டு மழைநீர் தேங்கி நிற்காமல் வழிந்தோடக்கூடிய வகையில் சீர்செய்யப்படவுள்ளது. அத்துடன் சந்தைக்கான வாயில்கள் அனைத்துக்கும் கேற்போடப படவுள்ளன. இதற்காக 1.6 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதோடு சந்தை வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

கொக்குவில் பொது நூலகத்தின் முன்பகுதிக்கான மாடிக்கட்டட வேலைகளும் விரைவில் தொடங்கப்படவுள்ளதாகத் தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

இம்மாடிக்கட்டடம் சுமார் 6 வருடங்களாக குறை வேலைகளுடன் காணப்பட்டது. இக் கட்டடத்தைக் கட்டி இம்முறை முழு வேலைகளையும் முடித்துப் பொதுநூலகத்தின் பாவனைக்கு விடுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக 4 மில்லியன் ரூபா பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருநெல்வேலி சந்தையையும் கொக்குவில் பொது நூலகத்தையும் நல்லூர் பிரதேச சபையே நிர்வகித்து வருவது குறிப்பிடத்தக்கது. (137)


# தென்மராட்சி பகுதிகளில் மரக்கறிகளின் விலை வீழ்ச்சி

(தென்மராட்சி)

தென்மராட்சியில் கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய சந்தைகளில் தற்போது மரக்கறி விலைகள் என்றுமில்லாதவாறு விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால் விவசாயிகள் மிகுந்த நஷ்டத்திலேயே மரக்கறி வகைகளை விற்பனை செய்து வருகின்றனர். குறிப்பாக கத்தரி வெண்டி,பூசணி வியாபாரிகளால் இருபது ரூபர்வுக்கே கொள்வனவு செய்யப்படுகிறது.

இதேவேளை மலிந்திருந்த தேசிக்காய் தற்போது திடீரென இருநூறு ரூபாவுக்கு உயர்வடைந்த நிலையில் முருக்கங்காய் 400-500 ரூபாய் வரை வியாபாரிகளால் விற்பனை செய்யப்படுகிறது. அதேவேளை தேங்காய் விலை சராசரி விலையிலேயே தளம்பல் இல்லாமல் 40-45 என்ற ரீதியில் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (150)

## வெள்ளி நற்சிந்தனை...



## பாடுறு பசியை நோக்கி தன்னுடல் கொடுத்த பைம்புள் (2)

பெண் புறாவின் தரும வசனங்களைக் கேட்ட ஆண் புறா, தனது பத்தினி கூட்டில் அடைபட்டிருப்பதைக் கண்டு வருந்தி, தனக்கு இடர் செய்த வேடனை அதிதியாக உதவி செய்யக்கடப்பாடுடையோம் என்று அவனுக்கு உணவு தருமாறு வேண்டும் தன் பத்தினியின் உயர் குணங்களை எண்ணிப் பெருமகிழ்வுற்று, அதிதிகளை ஆதரிப்பதே சிறந்தது. என்று மரத்தை விட்டிறங்கி வேடனை நோக்கி, ஐயா! உனக்கு நல்வரவு, எமது வீட்டிற்கு வந்த நீர் பட்டினியிருப்பது நலமன்று; சற்றுத் தாமதியும்" என்று முகமன்கூறி உலர்ந்த சருகுகளையும், சிறு குச்சிகளையும் ஒன்றாகக் குவித்து நெருப்புண்டாக்கி, "ஐயா! இந்த நெருப்பிலிருந்து குளிரை நீக்கிக் கொள்ளும்" என்றது வேடன் புறாவின் அன்பையும் ஆதரவையும் எண்ணி உள்ளம் மகிழ்ந்து தீக்காய்ந்து குளிரை நீக்கிக்கொண்டான்.

பின்னர் ஆண் புறா வேடனைப் பார்த்து, "ஐயா! பகற்காலமாக இருந்தால் பழங்களைக் கொண்டு வந்து உமக்கு உணவாகத் தருவேன். இந்த இராப்பொழுதில் வேறு உணவைத் தேடிக்கொடுக்க முடியாது; இதோ எரிகின்ற நெருப்பில் வீழ்ந்து மடிகிறேன்; என்னுடைய மாமிசத்தை உட்கொண்டு பசியை நீக்குக" என்று இனிமையாகக் கூறி அக்கினியில் வீழ்ந்து மடிந்தது.

அது கண்டவேடனுக்கு நல்லுணர்வு தோன்றியது அந்தப் புறாவின் அன்பையும் அறத்தையும் விருந்தை உபசரிக்கும் பெருந்தகைமையையும் எண்ணி எண்ணி மகிழ்ந்தான். அந்தப்புறாவின் செயற் கருஞ்செயல் வேடனுடைய கல்மனதையும் கரைத்து உருக்கியது. அவனது மனதில் நெடு நாளாகத் தழைத்திருந்த கோபம், கொலை, குரூரம், கொடுமை முதலிய குணங்களை வேரோடு பிடுங்கி எறிந்தது. அன்பு ஊற்றெடுக்க ஆரம்பித்தது "நான் மனிதனல்லன்; விலங்கானேன். இப்புறா பறவையன்று; உயர்ந்த மனிதன் ஏபறவையே! நீயே எனக்குச் சற்குரு இனிநான் ஓர் உயிருக்கும் தீங்கு புரியேன் கொலைத்தொழிலை இக்கணமே ஒழித்தேன். இது காறும் புரிந்த மறச் செயல்களுக்கு பரிகாரம் தேடுவேன்" என்று கண்கலங்கி கதறினான்.

கூட்டிலிருந்த பெண் புறாவைத் திறந்து விட்டான் வெளிப்பட்ட பெண்புறா ஐயா! நீயோ மிகவும் பசித் திருக்கிறாய்; எனது நாயகனது இறைச்சியால் உன் வயிறு நிரம்பாது யானும் இத்தீயில் வீழ்ந்து என் கணவனுடன் சேர்கிறேன் என்னையும் உண்டு இளைப்பாறுவாய்! அதிதிகளைப் பூசிப்பதே எனது கடமை என்று நெருப்பில் வீழ்ந்து இறந்தது

பேடையைப் பிடித்துத் தன்னைப் பிடிக்க வந்தடைந்த வேடனுக்கு உதவி செய்து விறகிடை வெந்தீ மூட்டி பாடுறு பசியை நோக்கித் தன்னுடல் கொடுத்த பைம்புள் வீடு பேற்றுயர்ந்த காதை வேதத தின் விழுமி தன்றோ? – கம்பராமாயணம்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிருக்கப் பெட்டகம்

'ஓர் இயக்குநர் படப்பிடிப்புத் தளத்தினுள் நுழையும் போது அதற்கான சமரசங்களிலும் தாமாகவே நுழைகிறார்' என்கிற நடைமுறைச் சிக்கலை சொன்னவர் ஹிட்ச்கொக். ஒரு திரைப்பட இயக்குநர் தம்முடைய கனவுகளையும் உழைப்பையும் கொட்டி ஒரு திரைக்கதையை தாளில் எழுதி விடுகிறார். ஆனால் அதை அப்படியே ஒரு துளி கூடக்குறையாமல் படமாக்க முடிந்தது என்று எந்தவொரு இயக்குநரும் சொல்லுமளவிற்கு அவருக்கு சுதந்திரம் தரப்படுகிறதா? என்பது மிகப் பெரிய கேள்விக்குறி. சினிமா உருவாக்கம் என்பது மிகுந்த பொருட்செலவைக் கோரி நிற்கும் ஒரு கலை என்பதால் இயல்பாகவே அது வணிகர்களின் கையில் இருக்கிறது. கலைஞர்களின் கையில் இல்லை. ஒரு கலைஞனும் இதற்கான வணிகத்தில் நுழையும் போது தன்னிச்சையாக பெரும்பாலும் அவனும் ஒரு வணிகனாக மாறிப் போய் விடுகிறான். இந்த சமரசங்களை பெரிதும் செய்து கொள்ளாதவர்கள் அங்கு ஜீவிக்க முடிவதில்லை. **– சுரேஷ் கண்ணன்**

சினிமா இங்கு கேளிக்கைப் பொருளாகவும், வியாபாரப் பண்டமாகவும்தான் இருக்கிறது. அது கலை நுண்ணுணர்வைக் கூர்தீட்டும் கலை மனித ஆத்மாவோடு உறவாடும் கலை சமூக விழுமியங்களை முன்னிறுத்தும் கலை என்று பெரும்பாலோருக்குச் சொல்லிக்கொடுக்கப்படவில்லை. பராக்குப் பார்க்கும் சின்னப் பையன்களின் மனோபாவத்தைத் தாண்டிப் பெரும்பாலான தமிழ் சினிமாக்கள் வெளிவரவில்லை. **– பிரபஞ்சன்**

பெண்ணின் உடலைச் சுரண்டியபடியே தமிழ்ப் பெண்மையைப் போற்றும் பண்பாடு நம் சினிமாப் பண்பாடு. தமிழ் சினிமாவிலும், தொலைக்காட்சிகளிலும் பெண்கள் தாலிப்பிச்சை கேட்டுத் தினந்தோறும் கதறிக் கொண்டே இருக்கிறார்கள். **– கண்ணன்**

தமிழ்ப்படங்கள் பார்க்க வேண்டுமென்றால் தியேட்டர் போய் வர ஒரு விடுமுறை நாளைத் தியாகம் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த அளவு தியாகத்துக்கு அவை அருகதை உள்ளவையாக இல்லை. **– அசோகமித்திரன்**

1959இல் வெளிவந்த கல்யாணப் பரிசு படம் ஒரு புதிய தலைமுறை தமிழ் சினிமா ரசிகர்களை உருவாக்கியது. அது கல்லூரி வாழ்க்கையை ஒரு முக்கிய பகுதியாகக் கொண்ட படம். கல்லூரியில் படிக்கும் வயதை எப்போதோ தாண்டிய நடிகர்கள் அதில் மாணவர்களாக நடித்திருந்தார்கள். ஜெமினி கணேசன் சினிமாவிற்கு வருவதற்கு முன்னரேயே ஒரு கல்லூரியில் ட்யூட்டராக வேலை பார்த்தவர். ரசிகர்கள் இதையெல்லாம் எப்பொழுதும் பெரிதுபடுத்துவதில்லை. **– அம்ஷன் குமார்**

அவன் ரசிப்பது திரைப்படத்தை மட்டுமல்ல அதன் வழியாக அவன் தன் மனதில் ஒளிந்திருந்த ஒரு ஆசையைக் கண்டு பிடித்து விடுகிறான். திரையரங்கம் மனிதர்களின் அடக்கப்பட்ட கனவுகளை மீட்டு எடுக்கிறது. தன்னைச் சுற்றியுள்ள இருளில் திரையில் தெரியும் கதாபாத்திரங்கள் மனதிற்குள் வருவதற்காக மனதின் ரகசியக் கதவுகளைத் திறந்துவிட்டுக் காத்திருக்கிறான். திரைநாயகர்கள் மனதில் பிரவேசிக்கிறார்கள். பின் நெடுநாட்கள் வெளியேறுவதேயில்லை. கற்பனா கதாபாத்திரங்களோடு ஏற்பட்ட காதல் முடிவற்று நீளக்கூடியது. **– எஸ். ராமகிருஷ்ணன்**

தமிழ் சினிமாக்காரர்கள் ஒரு ரென்வார், ஒரு கோடார்ட், ஒரு பிரஸோன் படத்தைப் பார்த்துவிட்டுத்தான் தமிழில் ஒரு படம் பண்ண வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. மேலை நாட்டுச் செடிகளைப் பிடுங்கிக்கொண்டுவந்து இங்கே நட்டு வளர்த்து இவர்கள் நஷ்டம் அடைய வேண்டாம். ஷேக்ஸ்பியரை நமக்குத் தெரியும். காதல், காமம், நீண்ட வசனங்கள், பாட்டுகள் ஏறக்குறைய நம் தமிழ் ரசிகர்கள் கேட்டு அடம்பிடிக்கும் மிட்டாய்கள் எலந்த வடைகள்தான். அவர்கள் கேட்டதையெல்லாம் போட்டு, ஆனால் அவற்றையெல்லாம் அர்த்தத்தோடு ஆழத்தில் ஒரு அரிய தரிசனத்தில் கலந்துவிட்டார். விளைவு ஒரு வண்ணம் மிக்க, ஆழமான, அழுத்தமான கனமான செறிவுள்ள ஒரு காவிய நாடகம். இப்படி நாமும் தமிழ் சினிமாவில் வெற்றிக்குத் தேவையான சரக்கனைத்தையும் உள்ளடக்கி அர்த்தபுஷ்டியான படைப்புகளைச் செய்யலாமே? தயவுசெய்து ஷேக்ஸ்பியர் ஒரு மேதை என்று சொல்லிவிட்டுத தூங்கப் போய்விடாதீர்கள். **– எஸ். ஆல்பர்ட்**

# சிறைச்சாலைகளில் திடீர் சோதனை கைபேசிகள் சிம் அட்டைகள் மீட்பு

நாடு முழுவதுமுள்ள சிறைச்சாலைகளில் இந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகளின்போது, 73 அலைபேசிகளும் 54 சிம் அட்டைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் ஆலோசனைக்கு அமைய, சிறைச்சாலைகளில் சட்டவிரோத போதைப்பொருள் மற்றும் அலைபேசி பாவனை தொடர்பில் திடீர் சோதனைகளை மேற்கொண்டு அவற்றை பறிமுதல் செய்யுமாறு சிறைச்சாலைகள் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது. இதனையடுத்து, மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகளின் போது இவை கைப்பறறப்பட்டுள்ளன. இதேவேளை, இந்த சோதனை நடவடிக்கையின் போது, ஒரு கிராம் கஞ்சா மற்றும் 7 ஹெரோயின பக்கெற்றுகள் என்பன கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த திடீர் சோதனை நடவடிக்கைகள் ஜனவரி மாதத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டதாக திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# சிறையிலுள்ள பசிலை பார்வையிட்ட பந்துல,டளஸ்

(கொழும்பு)

நிதி மோசடிப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு வெலிக்கடை சிறையில் இருக்கும் முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்சவை பார்வையிடுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் சென்றுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன மற்றும் டளஸ் அழகப்பெரும ஆகிய இருவருமே சிறைக்கு சென்று பசில் ராஜபக்சவை நலம் விசாரித்துள்ளனர். பசில் ராஜபக்ச தற்போது வெலிக்கடை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவரை எதிர்வரும் மே மாதம 5ம் திகதி வரை விளக்கமறியலில வைக்குமாறு கடுவல நீதவான் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது



# பரமர் சங்கமம்

"சாமி அருள் தந்தாலும் பூசாரி விடமாட்டா"னென்னுறதும் எவ்வளவு பொருத்தமாகச் சொல்லி வைச்சினமெண்டு யோசிச்சுப் பாருங்க! நாட்டிலை உதுதானை இண்டைக்கு நேற்றே நானறியாக் காலம்தொட்டு நடந்தும் வருகுது.

கண் ரெண்டிலும் கற்றாக் வந்து முதல்ல சிவந்தாவும் பிறகு மிஸ்சரவணமுத்தும் கண் ஒப்புறேசன் செய்து க்ண்ணாடி போட்டு எழுத வாசிக்கச் செய்து கொண்டிருக்கிறன் எண்டாலும் இருந்திருந்திட்டு பார்வை மங்கல், நீர் வடிதல், கண் கடித்தலெண் டெல்லாம் ஆசுப்பத்திரிக்கு அலையத்தான் செய்யிறன்.

2014 ஆம் ஆண்டு தொடக்கம் மலரவன் எண்ட டொக்டர் வன்னியாலை வந்திருக்கிறார்: கெட்டிக்காறனெண்டெல்லாம் சனங்கள் கதைச்சுதுகள். நானும் போகும் திங்கள், புதன், வெள்ளி கிளினிக்குக்கே அவர் வந்ததும் வாய்ச்சுப் போச்சு.

முதலில் என்கண்ணைப் பாத்தமலரவன் டொக்டர், பழுதாக்கிப் போட்டாங்கள் இனி ஒண்டும் செய்யேலாது, இருக்கிற பார்வையை மேலும் பழுதாகாமல் பாதுகாக்கலாம் எண்டு சரளமாகக் கதைத்தது எனக்கு நல்லாப் புடிச்சுப் போச்சு.

ஏனெண்டா முதல்லை வைத்தியம் பாத்த ரெண்டு பேரும் நோயாளரோடை சரளமாகக் கதைச்சதை நான் காணேல்லை. மலரவன் எல்லோரோடும் சத்தமாக மளமளவெண்டு உரையாடிப்பர்ப்பது நோயாளிகளுக்கும் சந்தோசமா இருந்தது. அதைப் பரமர் சங்கமத்தில் முன்னமொருக்கா எழுதியிருக்கிறன்.

இன்னொருக்காப் போகேக்கை டொக்டரிடம் விசயத்தைச் சொன்னன். பாத்தாரோ என்னவோ டிக்கட்டை என்னையே கொண்டு போகத்தந்து ஆறுமாதத்துக்கு ஒருக்கா வரலாம்; நீங்க வந்து நிண்டு மினக்கெடாமல் இருக்கத்தான் டிக்கேட்டைத் தந்துவிடுவதாகவும் சொன்னார்.

எங்கை எனக்குப் போகக்கால நேரங்கள் கிடைக்காமல் 8 மாதத்தாலை கடந்த 8 ஆம் திகதி டிக்கட்டையும் கொண்டு போனன். அப்பவுமென்ன காலநேரத்தோடை காட்டக்கிடைச்சுதே இடையிடையே அட்டன்டன், நேஸ்மார் தங்களுக்குத் தெரிஞ்ச நோயாளர்களை முன்னுக்குக் கூட்டிப் போய் விட்டு விட்டுக் கொண்டிருந்தினம்.

ஆசுப்பத்திரிக்குள்ளே வெவ்வேறு பிரிவுகளில் வேலை செய்யிறவையும் தங்கடை உறவுகளையோ நண்பர்களையோ கூட்டிப் போய்க் கொண்டிருந்தினம் இடையிலை புதிசா தாதி வேலேல சேர்ந்திருக்கும் பொடியன் வந்து டிக்கட்டை வாங்கிப் பார்த்திட்டு நீங்க எப்புடி வந்தனீங்க வெளியிலை போங்க எண்டு விரட்டினான்.

அப்ப என்ரை சுயமரியாதை விழித்துக்கொண்டது நானின்னார். உன்னைப் பற்றிப் பத்திரிகேலை எழுதுவனெண்டன். அவனுக்கும் சுயமரியாதை இருக்கெல்லை! பேப்பரிலை எழுதுறேண்டா வடிவா எழுதுங்கோண்டிட்டு நழுவிவிட்டான் அப்ப பாருங்க சுவாமி அருண்டாலும் பூசாரியா நிற்கிற நந்தியள் சுவாமியைப் பாக்க விடாமல் மறிச்சுக் கொண்டுதானை நிக்குதுகள் இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்...

# தேர்தல் ஆணைக்குழு நிறுவல் நாட்டிற்கு நன்மையை ஏற்படுத்தும்

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக தேர்தல்கள் ஆணைக்குழு நிறுவப்படுவது நாட்டுக்கு நன்மையை ஏற்படுத்தும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

19ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்படுவது நாட்டு மக்களுக்குத் தேவையான ஒன்றாகும்.

19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு நிறுவப்பட உள்ளது. இதனை நாட்டு மக்கள் அனைவரும் எதிர்பார்த்திருந்தனர். தேர்தல் நடத்தும் பணிகளை தனியொருவர் நடத்துவதனை விடவும் ஆணைக்குழு ஒன்றின் மூலம் செய்வது மிகவும் உசிதமானது.

எவ்வாறெனினும் சட்டமூலமொன்றை அமுல்படுத்துவது அரசாங்கத்தின் கடமையாகும்.

திருத்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்டாலும் அமுல்படுத்தப்படாவிட்டாலும் எனக்கு தனிப்பட்ட ரீதியில் பிரச்சினையில்லை என மகிந்த தேசப்பிரிய கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியுடன் விசேட பேச்சு தேவை இல்லை என்கிறார் மகிந்த



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் தனக்கும் இடையில் விசேட பேச்சுவார்த்தை நடாத்தத் தேவையில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஊடகவியலாளர் ஒருவர், ஜனாதிபதியுடன் இடம்பெறவுள்ளதாகக் கூறப்படும் விசேட பேச்சுவார்த்தை குறித்து அவரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

எமக்கிடையில் விசேட பேச்சுவார்த்தை தேவையில்லை. ஏனெனில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறி.ல.சு.க.யின் தலைவர். நான் அக்கட்சியின் போஷகர். எமக்கிடையில் பாரிய இடைவெளி கிடையாது எனவும் அதனால் எமக்குள் விசேட பேச்சுவார்த்தை எதுவும் தேவையில்லை என்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டார்.

# 10 கோரிக்கைகளை முன்வைத்து மருதங்கேணி மக்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச மக்கள் 10 கோரிக்கைகளை முன்வைத்து அடையாள உண்ணாவிரதப் போராட்டமொன்றை நேற்று முன்தினம் நடாத்தியுள்ளனர்.

யுத்தம் மற்றும் சுனாமி ஆழிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட உறவுகள் மற்றும் சொத்துக்களை இழந்த தாம், 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்ட போதிலும், அபிவிருத்திப் பணிகளில் இருந்து புறக்கணிக்கப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு முன்னால் இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடமராட்சி கிழக்கு பிரதேசத்திற்கென தனியான பிரதேசசபை ஒன்றினை உருவாக்குதல்,

பிரதேச வளங்கள் சூறையாடுதலை கட்டுப்படுத்தல் உள்ளிட்ட 10 கோரிக்கைகள் இதன்போது முன்வைக்கப்பட்டன.

அத்துடன், தென்பகுதி மற்றும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் தடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் பிரதானமாக முன்வைக்கப் பட்டது.

மேலும், தமது பிரதேசத்தின் அபிவிருத்தி புறக்கணிக்கப்படுவது தொடர்பில் பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும், 5 வருடங்களாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

# உரமானியம் கிடைக்கவில்லை கிளி.விவசாயிகள் விசனம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக பயிர்ச் செய்கை செய்யப்பட்டு ஒரு மாதகாலம் கடந்த நிலையிலும் தங்களுக்கான மானிய உரம் வழங்கப்படவில்லையென கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் சங்கங்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தவருட சிறுபோக செய்கையில் 9,500 ஏக்கரில் நெற்செய்கையும், 1,500 ஏக்கரில் சிறுதானியச் செய்கையும் செய்யப்படுகின்றன.

பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு 1 மாதகாலம் ஆகியும் உரமானியம் இன்னமும் வழங்கப்படவில்லை என சங்கங்கள் கூறின.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் இ.தயாரூபன் தெரிவிக்கையில்,

சிறுபோக செய்கையில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு உரமானியம் வழங்குவதற்கு விவசாய அமைப்புக்கள் சரியான பட்டியலை தரவில்லை. பட்டியலைத் தரும்படி கோரியும் இன்னமும் அவர்கள் அதனைத் தரவில்லை.

ஒரு விவசாயிக்கு 5 ஏக்கருக்கு உரமானியம் வழங்கப்படும். பட்டியல் தரப்பட்டாலே எந்தளவு ஏக்கருக்கு உரமானியம் வழங்க வேண்டும் என்று கணக்கிட்டு வழங்கமுடியும் என்றார்.

# மலேரியாவை இல்லதொழிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## வைத்தியர் ஜெயராசா அழைப்பு



மலேரியா இல்லாத தேசத்தை உருவாக்குவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என கிளிநொச்சி மாவட்ட மலேரியாத்தடை இயக்கத்துக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி எம்.ஜெயராசா, நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட பொது மக்கள் பொலிஸ் தொடர்பாடல் அலுவலகத்தில் பொதுமக்கள் கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்துரை வழங்குகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திராவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த 1998ஆம் ஆண்டு காலத்தில் மலேரியாவின் தாக்கம் இலங்கையில் அதிகளவிலே காணப்பட்டது. 2017ஆம் ஆண்டில் இலங்கை மலேரியா இல்லாத தேசமாக சான்றிதழை பெற வேண்டியுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தை மலேரியா அற்ற ஒரு மாவட்டமாக உருவாக்குவதற்கு அனைத்து சமூகங்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். கிளிநொச்சி மாவட்டத்தில் சமூகப் பிரச்சினைகள் காணப்படுகின்றன.

மாற்றுத்திறனாளிகள் பாதிப்பு, முதியோர்கள் பாதிப்பு மற்றும் இளவயது கர்ப்பம் தரித்தல் உட்பட பல்வேறு பிரச்சினைகள் இங்குள்ளன. இவற்றில் 5 சதவீதமான பிரச்சினைகளே வெளியில் தெரியவருகின்றன. மிகுதி 95 சதவீதமான பிரச்சினைகள் மறைந்திருக்கின்றன.

மக்கள் மத்தியில் சேவையாற்றுகின்ற அனைவரும் ஒன்றிணைந்து உள, சமூகப் பிரச்சினைகளை சரியான வழியில் கையாள வேண்டும் என்றார்.

65. உண்டான் என்பதன் எதிர்மறைச் சொல்
(1). உண்டிலன் (2). உன்னான் (3). உன்பான்

66. மின்காந்தத்தில் இயங்கும் ஒரு பொருள்
(1). மின்மாணி (2). சைக்கிள் சில்லு (3). வாயு அடுப்பு

67. மின்கலம் ஒன்றில்
(1). எதுவும் இருக்காது (2). எதிர் முனைவு இருக்கும்
(3). நேர் முனைவும் எதிர் முனைவும் இருக்கும்

68. அபாயத்தைக் காட்டும் நிறம்
(1). சிவப்பு (2). பச்சை (3). நீலம்

69. காற்றின் நேரடிப் பயன் ஒன்று
(1). மின் உற்பத்தி (2). சோறு வடித்தல் (3). துணி [illegible]தல்

70. இலைகளைச் சமைக்க முன்
(1). கழுவக்கூடாது (2). நன்கு கழுவ வேண்டும் (3). வெட்டக்கூடாது

71. இலையினால் புதிய தாவரம் ஒன்றைத்தருவது
(1). சதைகரைச்சான் இலை (2). கத்தரி இலை (3). தென்னை ஓலை

72. நீரினால் பரவும் வித்து
(1). பலாக்காய் விதை (2). கத்தரி விதை (3). தென்னை விதை

73. கொழுப்பு இல்லாத உணவு
(1). பால் (2). சீனி (3). முட்டை

(10). "எமது கிராமத்திற்கு வருடப்பிறப்பு வந்துள்ளது" என்ற தலைப்பில் 3 வசனங்களை எழுதுக

74. ..............................................................................

75. ..............................................................................

76. ..............................................................................

### நேற்றுமுன்தினம் பிரசுரமாகிய வினாக்களின் விடைகள்

(01). 1.09  2.11  3.3  4.1.நதி  2.ஆழி  5.கோள்மண்டலம்  6.வகுப்பாசிரியரிடம்
7.முதலாம்  8.i.காலிமுகத்திடல்  ii.துறைமுகம்  (02). 9 - 12 வரை சிங்களத்தில் எழுதவும்
(03). 13.950  14.கணிதம்  15.கணிதம்  16.விஞ்ஞானம்
17.ஆங்கிலப்புத்தகங்கள் குறைவாக உள்ளமை  18.சிறுவர் நூலுக்கு  19.1430
20.ரூபா 7500  (04). 21.மாணவர்கள் கல்விச்சுற்றுலா ஒன்றை ஏற்பாடு செய்தனர்
22.பெருமளவு மாணவர்கள் சுற்றுலா செல்ல விரும்பினர்  23.சுற்றுலா மூலம் அவர்களால் பல்வகைப்பட்ட இடங்களை பார்க்க முடிந்தது
(05). 24.பறவைகள்  25.வகுப்பாசிரியர்
26.பழக்கங்கள்  27.மார்பு  (06). 28.ஊதுவேன், பாடுவேன்
29.பாடுவேன், ஊதுவேன்  (07). 30.தச்சு  31.வண்ணான்  32.எழுத்தாளர்
33.தையல்காரன்  (08). 34.1.3  2.7  3.3  4.5  35.10  36.8
37.1.2000ml  2.2L  38.18.05  (09). 39.மகாவலிகங்கை
40.கரப்பந்தாட்டம்  41.திருகோணமலை  42.நீலோற்பலம்  (10). 43.1  44.3
45.1  46.2  47.3  48.2  (11). 49.நிலையில்லாதது
50.சேர்ந்திருத்தல்  51.பிரியாதிருத்தல்  (12). 52 - 56 வரை விரும்பிய வசனம் எழுதுக
(13). 57.சரி  58.பிழை  59.சரி

**இப் பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை வெளியாகும்**



## தரம் - 4 பரீட்சை முன்னோடி - 2015

பகுதி - I
1மணி 15நிமிடம்



# கல்வி முரசு

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க

(01). பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

இன்று கடலில் காற்று வேகமாக வீசுகின்றது. அலைகள் மிக மோசமாக உயர எழும்பி எழும்பி அடிக்கின்றன. ஜோன் என்ன செய்வதென்று தெரியாது தன்னால் முடிந்தவரை அந்த வள்ளத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முயற்சித்துக் கொண்டிருந்தான். இந்த நேரத்தில் தூரத்தில் கிழக்குத் திசையில் இன்னும் ஒரு வள்ளம் தத்தளித்துக் கொண்டிருப்பதைக் கண்ட ஜோன் அதில் இருந்து கூக்குரல் ஒன்றையும் கேட்டான். உடனே அவன் தன் வள்ளத்தை அத்திசையில் திருப்பினான். அப்போது ஒரு பெரிய சுறாமீன் ஒன்று குறுக்கே சென்றது. ஆனாலும் அது காற்றின் வேகம் காரணமாக தென் திசையில் சென்று மறைந்து விட்டது

01. கடலில் இருந்து தரையை நோக்கி வீசும் காற்றின் பெயர் என்ன? ..............
02. கடலில் சென்று மீன் பிடிப்பவர்களை எவ்வாறு அழைப்பர்? ..............
03. கடலில் எதன் உதவியுடன் வள்ளங்கள் செல்லும்? ..............
04. ஜோன் தன் வள்ளத்தை எத்திசையில் திருப்பினான்? ..............
05. தூரம் என்பதன் எதிர்ச்சொல் என்ன? ..............
06. கடலில் செல்பவர்கள் எதன் உதவியுடன் திசையை அறிவர்? ..............
07. காற்றின் உதவியுடன் மனிதன் தயாரிக்கும் சக்தி என்ன சக்தி? ..............
08. கடல் நீரில் இருந்து தயாரிக்கப்பட்ட எமது உணவின் இன்றியமையாத பொருள் எது? ..............
09. திருப்பினான் என்பது என்ன காலம்? ..............
10. மீனவர்கள் ஏன் இரவில் மீன் பிடிக்கச் செல்கிறார்கள்? ..............
11. கடலில் வாழும் இரண்டு மீன் இனங்களின் பெயர்களை எழுதுக? ..............
12. இலங்கை எந்த சமுத்திரத்தில் உள்ளது? ..............
13. இலங்கையின் வடபகுதியில் சில சிறிய தீவுகள் காணப்படுகின்றன. அவற்றில் இரண்டு தீவுகளின் பெயர்களை எழுதுக ..............

(02). பந்தியில் தரப்பட்ட பின்வரும் சொற்களுக்கு சிங்களச்சொல்லை எழுதுக

14. கடல் .............. 15. நேரம் ..............

(03). பின்வரும் உபகரணங்களைப் பயன்படுத்தும் தொழில்களை எழுதுக

16. கத்தரிக்கோல் , அளவுநாடா .............. 17. கத்தரிக்கோல், சீப்பு ..............
18. கோடரி, கத்தி .............. 19. சவற்காரம், நீர் ..............

(04). கூட்டினுள் உள்ள சொற்களைக் கொண்டு தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக

20. மண்ணரிப்பை தடுக்க வளர்க்கக் கூடிய மரவகை ஒன்றை எழுதுக ..............
21. ஒரு வித்திலைத்தாவரம் ஒன்றை எழுதுக ..............
22. மனிதன் ஒரு ..............
23. நரம்புக்கருவி ஒன்று ..............

| | |
|---|---|
| | புல் |
| பாம்பு | தென்னை |
| வீணை | குருதிச்சோகை |
| முலையூட்டி | |
| குளிர்சாதனப்பெட்டி | |

24. உணவில் இரும்புச் சத்துக் குறைவினால் .............................................. நோய் உண்டாகும்

25. பொருட்களை கெடாமல் வைக்க உதவுவது ..............................................

26. காலின்றிய விலங்கு ..............................................

**(05). பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் கூட்டினுள் எழுதுக**

27. இலங்கையின் தேசிய சொத்துக்களில் சிங்கராஜாக் காடுகளும் அடங்கும் ( )

28. உலக சொத்தாக சிகிரியா கருதப்படுகின்றது ( )

29. சீகுராதா என்பது சிங்களத்தில் நாளை எனக் கருதப்படும் ( )


30. பீ.ப என்றால் மாலை எனக் கருதப்படும் ( )

31. நத்தைகள் முட்டை இடும் ( )

32. நரிகள் தனித்தனியாக வாழும் பண்புடையவை ( )


33. குதிரைகளுக்கு கொம்பு உண்டு ( )

**(06). படத்திற்கு பொருத்தமான ஆங்கிலச்சொல்லை எழுதுக**

34.  ..............................

35.  ..............................

**(07). கீழுள்ள வினாக்களுக்கு சரியான விடை எழுதுக**

36.  அருகில் தரப்பட்டுள்ள உரு சதுரங்களினால் ஆனது. மிகச்சிறிய சதுரத்தின் நீளம் 2cm எனில் உருவின் சுற்றளவு எவ்வளவு? ..............................................

37. இங்குள்ள கோலத்தின் அடுத்துவரும் எண் யாது? 4.04, 3.03, 2.02 ..............................

38. ரூபா 10 இல் எத்தனை 50 சதங்கள் உண்டு? ..............................

39. நான்கு சமதுண்டுகளால் வெட்டப்பட்ட அப்பிள் துண்டு ஒன்று முழுக்காயின் என்ன பங்காகும்? ..............

40. காலை 8.10க்கு வரவேண்டிய புகையிரதம் அரை மணித்தியாலம் பிந்தி வந்ததெனில் புகையிரதம் வருகை தர இருந்த நேரம் என்ன?

..............................................

41. ஒரு லீற்றரைக் கொள்ளக்கூடிய போத்தல் ஒன்றில் 800மில்லிலீற்றர் நீர் இருக்குமாயின் போத்தலை நிரப்ப இன்னும் எத்தனை மில்லிலீற்றர் நீர் தேவை? ..............................

42. 1000 ரூபாவில் எத்தனை 10 ரூபாக்கள் உண்டு? ..............................

43. மீன் ஒன்று 750g இருந்தது. $\frac{1}{2}$kg மீன் தேவை எனில் அதில் இருந்து எத்தனை g வெட்டி அகற்ற வேண்டும்?

44. ஒன்றுக்கொன்று சமனான இரண்டு பயிற்சிப்புத்தகங்களின் நிறை 48g எனில் அவ்வாறான 5 புத்தகங்களின் நிறை எத்தனை கிராம்?

..............................................

45. 1kmக்கு 20 ரூபாவை அறவிடும் வான் ஒன்று எத்தனை kmக்கு 260 ரூபாவை அறவிடும்? ..............



**(08). பின்வரும் வினாக்களுக்கு விடை தருக**

46. 9மணியாகும் போது கடிகாரத்தின் முட்களுக்கிடையே உள்ள கோணத்தின் பெயர் ..............................

47. விறகை சிறிதாக வெட்டினால் அடுப்பு இலகுவாக எரிவதற்கான காரணம் என்ன?

..............................................


48. இலங்கையின் தென் மாகாணத்தில் உள்ள நகரம் ஒன்றை எழுதுக ..............................

49. தும்பிக்கை உடைய விலங்கு ..............................

50. கடல் நீரில் இருந்து பெறப்படும் பொருள் ஒன்றை எழுதுக ..............................

51. குட்டி ஈன்று பால் கொடுக்கும் பறவை எது? ..............................

52. ஆறுகள் எங்கே உற்பத்தியாகின்றன? ..............................

53. 


இப்பூச்சியின் உடலில் காணப்படும் பிரிவுகளுக்கு சமனான பிரிவுகளை உடலில் கொண்டுள்ள இன்னுமொரு பூச்சியின் பெயரை எழுதுக

..............................................

**(09). சரியான விடைகளைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக**

54. தென்னை மரத்தில் இருந்து தயாரிக்கப்படுபவை?
(1). தும்பு (2). சட்டி (3). சீலை

55. நெல்மணியில் இருந்து பெறப்படுவது
(1). சோறு (2). அரிசி (3). கஞ்சி

56. பஞ்சு விதைகள் எதனால் பரவுகின்றது?
(1). நீரினால் (2). காற்றினால் (3). விலங்குகளினால்

57. முள்ளு முள்ளாகவும் பழுத்தால் சிவப்பு நிறத்தையும் அடைவது
(1). பலா (2). தோடை (3). றம்புட்டான்

58. இலைச்சருகுகளை உக்கச்செய்வது
(1). தேனீ (2). எலி (3). கறையான்

59. டெங்கு காய்ச்சல் எதனால் பரவும்
(1). எலியினால் (2). வைரசினால் (3). நுளம்பினால்

60. இலங்கையின் தேசிய மரம்
(1). தேயிலை மரம் (2). நாகமரம் (3). தென்னைமரம்

61. துறைமுகம் உள்ள நகரம்
(1). திருகோணமலை (2). நுவரெலியா (3). கண்டி

62. துவிச்சக்கர வண்டியில் உள்ளது
(1). சில்லு
(2). கப்பி
(3). சாய்தளம்

63. இலங்கையின் நாடாளுமன்றம் அமைந்துள்ள இடம்
(1). கண்டியில்
(2). ஸ்ரீ ஜெயவர்த்தனபுர
(3). காலி

64. தம்பி நேத்து வந்திச்சி என்பதை திருத்தி எழுதினால்
(1). தம்பி நேத்து வந்திச்சி
(2). தம்பி நேற்று வந்திச்சு
(3). தம்பி நேற்று வந்தார்

# நிதி நிறுவனத்தின் அசமந்த போக்கால் மக்கள் பாதிப்படைவதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிதி நிறுவனம் ஒன்றின் அசமந்தப் போக்கினால் பாதிக்கப்பட்ட ஓய்வூதியர் ஒருவர் தனது ஓய்வூதிய நிலுவையினை பெற்றுத் தருவதற்கு உதவுமாறு மத்திய வங்கியின் பிராந்திய அலுவலகத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

நிதி நிறுவனம் ஒன்றில் கணக்கினை ஆரம்பித்து அந்தக் கணக்கிற்கு ஓய்வூதியத்தினை வைப்பிலிடுமாறு பிரதேச செயலகம் ஊடாக விண்ணப்பித்திருந்தார். பிரதேச செயலகத்தினால் குறித்த இலக்கம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

அவர்கள் குறித்த கணக்கிற்கு ஓய்வூதியம் வைப்பிலிட்டதாக பிரதேச செயலகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

ஆனால் குறித்த கணக்கினை பரிசீலித்தபோது ஓய்வூதியம் வைப்பிலிடப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

இதனால் ஓய்வூதியர் தனது ஓய்வூதியத்தைப் பெறமுடியாத நிலையில் உள்ளார். இந்நிலை குறித்து நிதி நிறுவனம் முரண்பட்ட கருத்துக்களை தெரிவித்து வந்துள்ளது.

இதனால் பாதிக்கப்பட்டவர் வங்கிக்கிளை நிர்வகிக்கின்ற பொறுப்பில் உள்ள இலங்கை மத்திய வங்கியில் தனது ஓய்வூதிய பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு ஆலோசனையினை நாடியுள்ளார்.

குறித்த நிதி நிறுவனத்தின் ஊடாக ஓய்வூதியம் பெற்று வந்த ஓய்வூதியர் தற்போது வேறு வங்கிக்கு தனது ஓய்வூதிய கணக்கினைமாற்றி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வாடிக்கையாளர்களை கவர்வதற்காக அதிக பிரயாசைப்படும் நிதிசார் நிறுவனங்களின் அலட்சியப் போக்கால் இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடததக்கது. (54)

# கிரீடா சக்தி செயற்றிட்டத்திற்கு வீர, வீராங்கனைகள் தெரிவு

(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து "கிரீடா சக்தி" செயற்றிடத்திற்கு வீர வீராங்கனைகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இவர்களுக்கான தெரிவுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி முதல் ஒட்டிசுட்டான் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் ஆண் பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்து, வலைபந்து, உதைபந்து, கபடி, கராத்தே, குத்துச்சண்டை, மெய்வல்லுநர் நிகழ்வுகளுக்கான "கிரீடா சக்தி" செயற்றிட்டத்திற்கு வீர வீராங்கனைகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

எனவே ஆர்வமுள்ள அனைவரையும் குறித்த "கிரீடா சக்தி" செயற்றிடத்திற்கு வீர வீராங்கனைகள் தெரிவு செய்யப்படவுள்ள நிகழ்விற்கு கலந்து கொள்ளுமாறு விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.சிவதாஸ் அறிவித்துள்ளார். (48)

# தொழில்நுட்ப ஆய்வுகூடம் கரவெட்டியில் திறப்பு

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் கல்வியமைச்சால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவீன தொழில்நுட்ப ஆய்வு கூடம் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களால் நாடாவெட்டித் திறந்து வைக்கப்பட்டது.

விழாவிற்கு அதிபர் எம்.கனகலிங்கம் தலைமை தாங்கினார்.

விழாவிற்கு வருகை தந்த விருந்தினர்கள் பாண்ட் வாத்திய இசை முழங்க விழா மண்டபம் வரை அழைத்து வரப்பட்டனர். தேசிய மாகாண பாடசாலைக் கொடிகள் ஏற்றப்பட்டதையடுத்து மங்கள விளக்கேற்றலுடன் விழா ஆரம்பமானது.

நவீன தொழில்நுட்ப ஆய்வு கூட முகப்புவாசலை முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட மூன்று மாகாணசபை உறுப்பினர்களும் திறந்து வைத்ததையடுத்து நினைவுக் கல்லை மாகாண சபை உறுப்பினர் ஒருவர் திரைநீக்கம் செய்து வைத்தார்.

கணித ஆய்வுகூடம் மொழியியல் ஆய்வுகூடம், தகவல் தொடர்பாடல், தொழில் நுட்ப ஆய்வுகூடம், நெனச ஆய்வு கூடம் என்பனவும் விருந்தினர்களால் திறந்து வைக்கப்பட்டன. (01)

# ஓவியப் பயிலரங்கு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஓவியக் கூடத்தின் ஏற்பாட்டில் நடாத்துப்பட்டு வருகின்ற ஓவியப பயிலரங்கின் தொடர்ச்சியாக, அடுத்த பயிலரங்கு நாளை சனிக்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் பிற்பகல் 02.00 மணிவரை ஓவியக்கூடம் இயங்குகின்ற இல.15, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலாமுற்றத்தில் நடைபெறவுள்ளது.

தரம் 9 முதல் உயர்தரம் வரையான வகுப்புக்களில் ஓவியப் பாடத்தை கற்கின்ற மாணவர்களுக்காகச் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இப் பயிலரங்கில் ஆர்வமுள்ள மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (27)

# திருமறைக் கலாமன்றத்தின் சித்திரைத்திங்கள் பொற்தூறல்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் ஓவியக் கூடத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வருகின்ற ஓவியப் பயிலரங்கின் தொடர்ச்சியாக , அடுத்த பயிலரங்கு நாளை சனிக்கிழமை காலை 09.00 தொடக்கம் 02.00 மணி வரை ஓவியக்கூடம் இயங்கு கின்ற இல.15, றக்காவீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலாமுற்றதில் நடைபெறவுள்ளது.

தரம் 9 முதல் உயர்தரம் வரையான வகுப்புக்களில் ஓவியப் பாடத்தை கற்கின்ற மாணவர்களுக்காக சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இப்பயிலரங்கில் ஆர்வமுள்ள மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

# முதலாவது மாநாடு

(யாழ்ப்பாணம்)

முற்போக்கு தமிழ்த் தேசியக் கட்சியின் முதலாவது மாநாடு நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் பத்திரிசியார் கல்லூரி வீதியில் அமைந்துள்ள லொயலாஸ் திருமண மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு மருசிலின் அன்ரனி தலைமையில் இடம்பெறவுள்ளது. பிரதம விருந்தினராக விவசாய அமைச்சர் துமிந்த திஸநாயக்க கலந்து கொள்ளவுள்ளார்.

# அரச கருமமொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சை

அரசகரும மொழித்தேர்ச்சி (Language Dept. Exam 2nd National Language Sinhala Tamil) எழுத்துப் பரீட்சை மட்டம் எதிர்வரும் மே மாதம் 31 ஆம் திகதி நாடு முழுவதும் நடைபெறவுள்ளதாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன் இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS) வகுப்பு III உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல பரீட்சை எதிர்வரும் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது. (90)


# IIS நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா

இருபதாவது ஆண்டில் கால்பதித்துள்ள IIS நிறுவனம் தனது 19ஆவது ஆண்டு நிறுவன தின விழாவினையும் பட்டமளிப்பு விழா 2015 இனையும் நாளை காலை 9.00 மணிமுதல் HNB Metro Branch பிரதான மண்டபத்தில் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி குலரட்ணம் விக்னேஸ் தலைமையில் நடாத்தவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கௌரவ விருந்தினர்களாக வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் திருமதி. பாலசுந்தரம்பிள்ளை சிறப்பு விருந்தினர்களாக வணபிதா தே.ஞானப்பொன்ராஜா (அதிபர், பரியோவான் கல்லூரி சுண்டிக்குழி மகளிர் கல்லூரி) திருமதி துஸ்யந்தி துஸிதரன் அதிபர் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவ் வைபவத்தில் கல்வியாண்டு 2014/2015 இல் உயர் தேசிய டிப்ளோமா இளமானி, முதுமானி கற்கை நெறிகளை கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும், வியாபார முகாமைத்துவம், குடிசார் பொறியியல் துறைகளில் பூர்த்தி செய்த மாணவர்கள் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவதுடன் கடந்த கல்வியாண்டில் சிறந்த செயற்றிறன்களை வெளிப்படுத்திய மாணவர்களுக்கான சிறப்பு விருதுகளும் வழங்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

## வாழ்க வளமுடன்



பெயர் : எ.ஷரோன் றூபன்
முகவரி: 73, நாலாம் குறுக்கு க்குத்தெரு, யாழ்ப்பாணம்.

அகவை 2 இல் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்


## வாழ்க வளமுடன்



பெயர் : ஷமா
முகவரி: ஆசாத் வீதி, சவுதிலேன், யாழ்ப்பாணம்.

அகவை 4

## வாழ்க வளமுடன்



பெயர் : அஸ்லாம்
முகவரி: காதி அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.

அகவை 5 இல் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

## வாழ்க வளமுடன்

உங்களது மழலைச் செல்வங்கள் 10 வயதுக்கு உட்பட்ட வராயின் அவர்களின் பிறந்த நாளை வெளியிட தினமுரசு பத்திரிகையில் வெளிவரும் கீழ்க்காணும் கூப்பனை நிரப்பி புகைப்படத்தையும் அனுப்பி வையுங்கள்.

சிறாரின் பெயர் :- ..............................


முகவரி :- ..............................

பிறந்த ஆண்டு :- ..............................

..............................

பெற்றோர் கையொப்பம்

# சோனி பிக்சரின் ஆவணங்களை "விக்கிலீக்ஸ்" வெளியிட முடிவு




அமெரிக்காவின் சோனி பிக்சர்ஸ் திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தின் கணனி வலைத்தளங்களில் திருடப்பட்ட ஆவணங்களை பிரபல 'விக்கிலீக்ஸ்' இணையத்தளம் வெளியிடவுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் அமெரிக்க திரைப்பட நிறுவனமான ஹொலிவுட் ஸ்ரூடியோஸ் (Hollywood Studios) தயாரித்து The Interview என்ற அந்த திரைப் படத்தை வெளியிட இருந்த சோனி நிறுவனத்தின் மீது சைபர் தாக்குதல் நடாத்தப்பபட்டு பல மின்னஞ்சல்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் திருடப்பட்டது. தி இண்டர்வியூ படத்தில் வட கொரிய அதிபரான கிம்-யாங்க்-உன் என்பவரைக் கொல்ல அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் சதித்திட்டம் தீட்டுவது போன்று சித்ரிக்கப்பட்டிருந்ததால், இந்த சைபர் தாக்குதல் வட கொரியாவின் வேலையாகத தான் இருக்கும் என சந்தேகம் எழுந்தது.

ஆனால், இந்த தாக்குதலுக்கு வட கொரியா காரணம் இல்லை என மறுத்த கிம்-யாங்க்-உன், சோனி நிறுவனத்தின் மீதான சைபர் தாக்குதல் வரவேற்கத் தக்க ஒன்று என கருத்து தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் சோனி நிறுவனம் மீதான தாக்குதல் தொடர்பான பல ஆவணங்களை 'விக்கிலீக்ஸ்' (Wiki Leaks) நிறுவனம் கடந்தாண்டு வெளியிட்டது.

திருடப்பட்ட ஆவணங்கள் பொது இணையத்தளங்களில் கிடைத்ததாக விக்கி லீக்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ள காரணத்தை ஏற்க முடியாது. என சோனி நிறுவனம் கடுமையான கண்டனங்கள் தெரிவித்திருந்தது.

இதற்கு பதிலளித்த விக்கிலீக்ஸ் வலைத்தளத்தின் நிறுவனரான ஜுலியன் அசாஞ்சே (Julian Assange), வெளியிடப்பட்ட ஆவணங்கள் ஒரு பன்னாட்டு நிறுவனத்தின் உள்செயற்பாட்டை காண்பிக்கும் வகையிலும் மற்றும் ஒரு 'புவிசார்- அரசியல் மோதலின் மையத்தை தெளிவுப்படுத்துவதாக உள்ளதால், இதை குற்றம் சொல்ல முடியாது என கூறியுள்ளார்.

உலகச் செய்திகள்

# 4 தொன் எடையுடைய யானைத்தந்தங்கள் மீட்பு



கொங்கோ குடியரசிலிருந்து கடத்தப்பட்ட சுமார் 4 தொன் அளவிலான யானைத் தந்தங்கள் தாய்லாந்தில் கைப்பற்றப் பட்டுள்ளன. இந்த பாரிய தொகையிலான யானைத்தந்தங்கள் கொங்கோ குடியரசிலிருந்து கொண்டு வரப்பட்ட கொள்கலன்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாங்கொக் துறைமுகத்துக்கு வந்திறங்கிய கொள்கலன்களில் யானைத்தந்தங்கள் கடத்தப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து சுங்க அதிகாரிகள் மேற்கொண்ட சோதனையின் போது இந்த யானைத்தந்தங்கள், கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது, சுமார் 739 யானைத் தந்தங்கள் கைப்பற்றப் பட்டுள்ளதுடன் யானைத் தந்தங்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவித்துள்ளன. ஆசியாவில், ஆபிரிக்க யானைத்தந்தங்கள் கடத்தப்படும் முக்கிய இடமாக தாய்லாந்து காணப்படுவதுடன் இந்த கடத்தல்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் சர்வதேச தடைகளை அந்நாடு எதிர்கொள்ள நேரிடும் என சர்வதேச தகவல்கள்தெரிவிக்கின்றன

# நேபாளத்தில் பேருந்து விபத்து 12 சுற்றுலாப்பயணிகள் உயிரிழப்பு



நேபாளத்துக்கு ஆன்மிக சுற்றுலா சென்றுவிட்டு திரும்பிய போது, மலைப்பாதையில் பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த 12 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 27 பேர் காயம் அடைந்தனர். இதில் 6 பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.குஜராத் மாநிலம், கோராக்பூரை சேர்ந்த 45 பேர் நேபாள நாட்டுக்குச் சுற்றுலா சென்றனர். தலைநகர் காத்மாண்டுவில் உள்ள புகழ் பெற்ற பசுபதிநாத் கோயிலுக்குச் சென்றுவிட்டு பஸ்சில் திரும்பிக் கொண்டிருந்தனர். காத்மாண்டுவில் இருந்து சுமார் 75 கிமீ தூரத்தில் உள்ள மலைக் கிராமமான நவ்பீஸ் பகுதியில் பஸ் வந்து கொண்டிருந்தது.அப்போது கட்டுப்பாட்டை இழந்த பஸ் திடீரென மலையில் இருந்து கீழே உருண்டது.

சுமார் 300 மீட்டர் உயரத்தில் இருந்து உருண்ட பஸ், ஆற்றுப் பகுதியில் விழுந்தது. பஸ் விழுந்த சத்தத்தை கேட்டு அக்கம்பக்கத்தினர் அங்கு திரண்டனர். தகவலறிந்து மீட்பு படையினர் விரைந்து வந்து இடிபாடுகளில் சிக்கியிருந்தவர்களை மீட்டனர்.சம்பவ இடத்திலேயே 5 பெண்கள் உட்பட 12 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 27 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்கள் காத்மாண்டுவில் உள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இதில் 6 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. விபத்துக்கான காரணம் குறித்து பொலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். சுற்றுலாப்பயணிகள் 12 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மாயத்தோற்றத்தை உண்டாக்கும் மாணவி




ஜப்பானின் டோக்கியாவைச் சேர்ந்த ஹைகரு சோ என்ற இளம் மாணவி ஒப்டிகல் இல்யூஸன் எனப்படும் மாயத் தோற்றத்தில் கில்லாடியாக விளங்குகிறார். 20 வயதான ஹைகரு சோ தன்னுடைய கற்பனை மூலம் மனித உடல் மீது முப்பரிமாண ஓவியங்களை வரைவதில் வல்லவராக உள்ளார்.

இவ்வாறு வரையப்படும் படங்களின் மூலம் மாயத் தோற்றத்தை ஏற்படுத்துவதில் நிபுணத்துவம் பெற்று அனைவரையும் கவர்ந்து இழுக்கிறார். முழுவதும் முப்பரிமாணத்தில் காணப்படும் இவரது ஓவியங்கள் பார்ப்பவர்களைப் பிரமிக்கச் செய்வதோடு, தற்போது உலகம் முழுவதும் இவருக்கு ஆதரவு பெருகி வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சிலியில் எரிமலை வெடிப்பு அவசர நிலை பிரகடனம்

43 ஆண்டுகளாக செயலற்று இருந்த சிலி நாட்டின் கால்புகோ எரிமலை மீண்டும் வெடித்து, வானில சாம்பல் புகையைக் கக்கி வருகிறது. இதையடுத்து அப்பகுதியில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

அந்நாட்டின் தலைநகரான சாண்டியாகோவில் இருந்து 1,400 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் தெற்கு துறைமுக நகரமான பர்டோ மோண்டில் இருக்கும் கால்புகோ எரிமலை செயற்பட தொடங்கியுள்ளது. இதனால் எரிமலையைச் சுற்றி உள்ள 20 கிலோ மீட்டர் பகுதியில் இருக்கும் மக்களை உடனடியாக வெளியேற்றும் பணி நடந்து வருகிறது. எரிமலை வெடிப்பின் காரணமாக பனிக்கட்டிகள் உருகி வெள்ளப்பெருக்கு ஏற்படும் அபாயமும் உள்ளது.



இதன் காரணமாக அங்கு பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளதோடு அப்பகுதியில் விமான போக்குவரத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் மக்கள் நகரத்தை விட்டு வெளியேறுவதால் வாகனங்கள் போக்குவரத்து நெரிசலில் சிக்கியுள்ளன. அப்பகுதியில் வசிக்கும் 3500இற்கும அதிகமான மக்களை வெளியேற்ற வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளதால், காவல்துறையினருக்கு உதவ அந்நாட்டு இராணுவம் அழைக்கப்பட்டுள்ளது.

எப்போது வேண்டுமானாலும் வெடிக்கும் நிலையில் இருக்கும் 90 எரிமலைகளில், மிகவும் ஆபத்தானது கால்புகோ எரிமலை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த அளவ விளம்பரத்திற்கு
1000/= ரூபா மட்டுமே

# தேசிய நல்லிணக்கத்துக்கு ஆப்பு; தடுத்து நிறுத்தப்படவேண்டும்

## அரசிடம் கோருகிறார் டக்ளஸ்



தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பக் கூடிய சூழ்நிலை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அதனை சீர்குலைத்து விடும் வகையிலான சம்பவங்கள் யாழ். குடாநாட்டில் இடம்பெற்று வருவதைத் தடுக்க அரசு முழுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

இவ் விடயம் குறித்து மேலும் கருத்து தெரிவித்துள்ள செயலாளர் நாயகம் யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக மர்ம நபர்களது நடமாட்டங்கள் இரவு வேளைகளில் அதிகரித்து வருவதாகவும், இதனால் பொது மக்கள் அச்சத்துடனும், பதற்றத்துடனும் காணப்படுவதாகவும் எனக்கு அறியக் கிடைத்துள்ளது.

நாட்டின் தேசிய நல்லிணக்கம் கருதி நாம் தொடர்ந்து செயற்பட்டுவரும் நிலையில், இந்த அரசும் அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க முனைந்திருப்பது வரவேற்கத்தக்கது. இவ்வாறானதொரு சூழ்நிலையில், எமது மக்களை அச்சத்திற்குள்ளும், பதற்றத்திற்குள்ளும் தள்ளிவிடும் சம்பவங்களை சில தீய சக்திகள் முன்னெடுத்து வருவதாக அறிய முடிகிறது.

எனவே, இவ்வாறான சக்திகளை இனங்கண்டு, சட்டத்தின முன் நிறுத்துவதற்கும், எமது மக்களை அச்சத்திற்கும், பதற்றத்திற்கும் ஆளாக்குகின்ற சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே சமயம், தேசிய நல்லிணக்கம் குறித்த நம்பிக்கையினை எமது மக்களிடையே கட்டியெழுப்பும் நோக்கிலான செயற்பாடுகளை மேலும் வளர்க்கும் வகையிலும் அரசு செயற்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### விருப்பு வாக்கு...

விகிதாசார முறையின் கீழ் நடைபெறும் எனவும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய அரசியல் குழப்ப நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இக்கூட்டம் நடத்தப்பட்டது. வெள்ளிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் தேசிய நிறைவேற்றுப்பேரவை மீண்டும் கூடவுள்ளது.

### மருத்துவ...

கடுவெல நீதிபதி, அந்தக் கோரிக்கையை நிராகரித்திருந்தார்.

இந்தநிலையில், வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனையில் நேற்று முன்தினம் இரவு அனுமதிக்கப்பட்ட பசில் ராஜபக்ஷ, தம்மை கொழும்பு தேசிய மருத்துவமனையின் கட்டண விடுதியில் அனுமதிக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளிடம் அனுமதி கோரினார்.

அதையடுத்து, நேற்று பிற்பகல் பசில் ராஜபக்ச கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

### கோத்தாவுக்கு...

ஆகிய நிறுவனங்களில் இடம்பெற்ற மோசடிகள் மற்றும் நிதி மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கோத்தாபயவிடம் விசாரணை நடத்தப்படவேண்டும் எனவும், நிதி மோசடிகளில் கோத்தாபய ஈடுபட்டார் என்றும் ஆளும் கட்சி குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, கோத்தாபயவை விசாரிக்க கூடாது என்று கோருவோரால் பெரும் ஆர்ப்பாட்டமும் இலஞ்ச ஊழல் மற்றும் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு முன்பாக நடத்தப்பட்டது. இதனால் நேற்று காலை அங்கு பதற்றமான நிலைமை ஏற்பட்டது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அலுவலகத்திலிருந்து கோத்தாபய வெளியேறிச் சென்றதையடுத்து ஆர்ப்பாட்டங்காரர்கள் ஜனாதிபதியின் வாசஸ்தலத்தை நோக்கியும் வெலிக்கடைச் சிறைச்சாலை நோக்கியும் சென்றனர்.

### எரியுண்ட...

குள் எரியுண்ட நிலையில் சடலம் ஒன்று கிடப்பதைக் கண்டுள்ளார். பொலிஸாருக்கு அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை நடத்தினர்.

அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் சடலத்தை பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேபோன்று யாழ்ப்பாணம் வடமராட்சியின் அல்வாயில் 2 பிள்ளைகளின் தாயான நிராஜிங் ஜோய் எவஸ்ரென் (வயது 32) என்பவர் எரியுண்ட நிலையில் அவரது வீட்டில் இருந்து நேற்று சடலமாக மீட்கப்பட்டார். சந்தைக்கு சென்ற மாமியார் வீட்டுக்குத் திரும்பிய போது இவர் எரியுண்ட நிலையில் சடலமாகக் காணப்பட்டார். இது குறித்து பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை நடத்திய மரண விசாரணை அதிகாரி பிரேதச பரிசோதனைகளின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (18,160)

### சிதம்பரபுரம்...


நிலையத்தில் இருத்தப்பட்டுள்ள நிலையில், எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றியே இன்று வரையில் வாழ்ந்து வரு கின்றனர்.

இந்நிலையில், மேற்படி நலன்புரி நிலையம் அமையப் பெற்றுள்ள பகுதியிலேயே தங் களை மீளக் குடியமர்த்துமாறு இம் மக்கள் விடுத்துள்ள கோரிக்கை, கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போது பிரஸ்தாபிக்கப்பட்டு, அக் காணிகள் இம் மக்களது மீள் குடியேற்றத்திற்கு பிரித்து வழங்கப்பட வேண்டுமென இணைத் தலைவர்களால் அரச அதிபருக்கு பணிப்புரையும் வழங்கப்பட்டிருந்தது.

எனினும், ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு இதுவரையில் செயற்படுத்தப்படாத காரணத்தினால், இன்று இம் மக்கள் தங்களுக்கு நியாயம் கேட்டு வீதிக்கு வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில், இவ்வாறு தங்களுக்கான நியாயம் கேட்கும் மக்களைத் துன்புறுத்தும், கேவலமாக நடத்தும் செயற்பாடுகள் அங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறான செயற்பாடுகளை நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. எனவே, இவ் விடயம் தொடர்பில் அரசு உடனடி அவதானஞ் செலுத்தி, இம் மீள் குடியேற்ற விடயத்தில் தடையாக இருப்பவர்களை இனங்கண்டு, உரிய நடவடிக்கை எடுப்பதுடன், குறித்த மக்களை விரைவில் மீள் குடியேற்றவும் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும் என டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



நேற்று இரவு யாழ். கச்சேரியடியில் இடம் கோர விபத்தின் காட்சி... (நி)

# நிதி நிறுவனங்களுக்கு வடக்கில் கட்டுப்பாடு

வடக்கு மாகாண சபை ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் நிதி நிறுவனங்கள் மாலை 5 மணிக்குப் பின்னர் பொதுமக்களின் வீடுகளுக்கு சென்று பணக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. வடக்கு மாகாண சபை இதுகுறித்த தீர்மானம் ஒன்றை சபை அமர்வின்போது எடுத்திருந்தது.

இதனை வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும், இலங்கை மத்தியவங்கி ஆளுநருக்கும் அனுப்பிவைத்தது. இந்த தீர்மானத்தை ஏற்றுக்கொண்டுள்ள மத்திய வங்கி, உரிமம் பெற்ற சகல நிதி நிறுவனங்களும், விசேட லீசிங் கம்பனிகளும், மேற்குறித்த நடவடிக்கையில் ஈடுபட முடியாது என்று குறிப்பிட்டு கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதி மத்திய வங்கியின் ஆளுநர் வடக்கு மாகாண அவைத் தலைவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இந்த நடைமுறை குறித்து பொலிஸ் தரப்பும் உரிய நடவடிக்கை எடுக்கும் என்று வடக்கு மாகாண சபையிடம் தெரிவித்துள்ளது - என்றுள்ளது.

### நாவற்குழியில்...

பேர் சாவகச்சேரி ஆதாரவைத்திய சாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட 16 பேரில் இருவர் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெறுவதுடன், அவர்களில் ஒருவர் பாடசாலை மாணவர் ஆவார். இது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் கூறினர். (25)

### செய்தியாளர்...

வான் நீதிமன்றில் பொலிஸார் முன்னிலை படுத்தினர்.

அதனை அடுத்து நால்வரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி பொ.சிவகுமார் உத்தரவு இட்டார்.

நால்வரையும் நீதிமன்றில் பொலிசார் முற்படுத்திய வேளை முறைப்பாட்டாளர் நீதிமன்றுக்கு சமூகம் அளிக்கவில்லை. (25)

### சர்வதேச...

சிலருடைய நடத்தைகள் மற்றும் சில அரசியல்வாதிகளுடைய நடத்தைகளின் மாற்றங்களை காண்கையில் உலக வரலாற்றில் மாற்றத்தின் பின் வரும் விளைவுகளை கண்டேன்

அலரிமாளிகையில் அன்று 1575 பேர் தொழில் புரிந்தனர். ஆனால் இன்று 600 பேர் தொழில் புரிகின்றார்கள். நாம் முன்னுதாரணமாக இருக்கின்றோம்

நான் இதுவரை எந்தவொரு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கும் தொலைபேசி அழைப்பு விடுக்கவில்லை

அதேபோன்று நீதித்துறை சார்ந்த எவருக்கும் நான் அழைப்பு எடுக்கவில்லை

நல்லாட்சியினூடாக கிடைத்துள்ள ஜனநாயகத்தை தவறாக பயன்படுத்தாமல் நாம் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

எமது நாடு உலகத்தில் ஆசிர்வதிக்கப்பட்டதும் இயற்கை வளங்களை கொண்டதுமாகும். நாம் அத்னை பாதுகாக்க வேண்டும்

நாம் இந்த அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் தெளிவாக இருக்க வேண்டும்

அனைத்து இனங்களுக்கு மத்தியிலும் சுமுகமான உறவு ஏற்படும் வகையில் அனைவரையும் எம்மில் ஒன்றிணைக்க முடிந்தது

அனைத்து இனத்தவர்களும் முரண்பாடுகள் இன்றி வாழ்வதை உறுதிப்படுத்த ஜனாதிபதி செயலணியை உருவாக்கினோம். அது மாத்திரமின்றி பிரத்தியேக செயலகம் ஒன்றையும் ஸ்தாபித்தோம்.

இணையத்தினூடாக பொய் பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சிங்களவர்களை தவிர்த்து தமிழ் முஸ்லிம்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதாக பொய் பிரசாரம் மேற்கொள்ளப்படுகின்றது

புதிய தேர்தல் முறை தொடர்பில் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. நாடாளுமன்றத்தில் அதை சமர்ப்பித்து நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கின்றேன்

நாடாளுமன்ற உறுப்பினர்களை நான் பணிவாக கேட்டுகொள்வது என்னவென்றால் மக்களின் வேண்டுகோளுக்கு மதிப்பளித்த 19ஆவது திருத்துக்கு ஆதரவாக வாக்களியுங்கள்

என்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிறைவேற்று அதிகாரத்தை நிறைவுக்கு கொண்டு வருவதாக தெரிவித்திருந்தேன். அவ்வாறே செய்ய கடமைப்பட்டுள்ளேன்

அன்று நீதிபதிக்கு சுதந்திரம் இருந்ததா இல்லைத் தானே? நான் பிரதம நீதியரசரை நியமித்தல், இராணுவத் தளபதியை நியமித்தல் எல்லாம் அந்தந்தத் துறைகளில் சிறப்பானவர்களை நியமித்தேன்

என்னை தைரியம் இல்லாதவன், தலைமை பொறுப்பு தகுதி இல்லாதவர் என்று சொல்லுகின்றார்கள் நான் அதிகாரத்தை கையில் எடுக்க ஆட்சிக்கு வரவில்லை

பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்கள் கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளோம்

அன்று அரச ஊழியர்கள் சுதந்திரமாக செயற்பட முடியவில்லை. தொலைபேசியில் கூட சுதந்திரமாக கதைக்க முடியவில்லை. இந்த 3 மாதத்துக்குள் நாம் எந்த சுதந்திரத்தை பெற்று கொடுத்துள்ளோம்

100 நாட்களில் என்ன செய்தோம் என்று கேட்கிறார்கள். நாம் சர்வதேசத்தின் ஆதரவை முழுமையாக பெற்றிருந்தோம்

வெளிநாட்டு தலைவர்கள், இராஜதந்திரிகள், முக்கிய பிரதிநிதிகள் எமது நாட்டுக்கு வருகை தந்து உறவை வளர்த்தார்கள்.

வெளிநாட்டு அரச தலைவர்கள் என்னோடு கலந்துரையாடிய விதம் அற்புதமானது அழகானது

மக்கள் ஆணையினூடாக நான் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் சர்வதேச ரீதியில் நட்புகளை பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்தது

நான் சீனாவுக்கு சென்றதும் எமது இரு நாடுகளுக்கு இடையிலான உறவை வலுப்படுத்த முடிந்தது

மக்கள் ஆணையீனூடாக நான் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் சர்வதேச ரீதியில் நட்புகளை பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்தது. அன்று ஐ.நா. மற்றும் சர்வதேச மனித உரிமை ஸ்தாபனங்களின் அழுத்தங்களை நீங்கள் அறிவீர்கள் இன்று அவ்வாறான அழுத்தங்கள் எதுவும் எம் மீது இல்லை என்றும் ஜனாதிபதி மைத்திரி தெரிவித்தார்.

# சிறுபோகத்துக்கு மானிய உரம் தாமதமின்றி வழங்கவேண்டும்



## கோரிக்கை விடுக்கிறார் டக்ளஸ்

சிறுபோக நெற்செய்கைக்கான மானிய உரம் இதுவரையில் தமக்கு வழங்கப்படவில்லையென கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்கள் தன்னிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும், எனவே, இது விடயம் தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து, உரிய மானிய உரத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

குறித்த மானிய உரம் கமநல அபிவிருத்தித் திணைக்களங்களிடம் உள்ளதாகக் கூறப்படுகின்ற நிலையில், கமக்காரர்களால் அதனைப் பெற்றுக் கொள்வதில் தாமதங்கள் ஏற்படுவதாகவும், இந் நிலையில் சிறுபோக நெற்செய்கைகளும் உரிய செய்கையாளர்களும் பாதிப்படையக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ள டக்ளஸ் தேவானந்தா மேற்படி மானிய உரத்தை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீனத்தூதுவருடன் ருவன் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான சீன உயர் ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட யீ சியேங்லிங் நேற்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தனவை சந்தித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் இடம் பெற்ற இச்சந்திப்பின் போது சீன அரசு இந்நாட்டு அபிவிருத்திக்கும் பாதுகாப்புக்கும் நல்கி வரும் ஒத்துழைப்புக்களுக்கு பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் பாராட்டுக் களைத் தெரிவித்தார்.

அதேபோல் புதிய அரசின் செயறபாடுகள் வெற்றியுடன் முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கைக்கான சீன உயர்ஸ்தானிகர் வாழ்த்துக்களை தெரிவித்தார். கலந்துரையாடலின் நிறைவில் நினைவுச்சின்னங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

## கணக்காய்வு சட்ட மூலத்துக்கு அங்கீகாரம்

(கொழும்பு)

தேசிய கணக்காய்வு சட்ட மூலத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது அமைச்சர் ராஜித சேனாரத்ன இதனைக் கூறினார்.

அமைச்சரவை நேற்று முன்தினம் கூடியபோதே தேசிய கணக்காய்வு சட்ட மூலத்திற்கு அனுமதி வழங்கப்பட்டதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.

தேசிய கணக்காய்வு சட்ட மூலத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார்.

# சிறிலங்கா சுதந்திரக்கட்சி 19ஆவது திருத்தத்துக்கு ஆதரவு

(கொழும்பு)

அரசியலமைப்புக்கான 19ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிப்பதென சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது. கொழும்பில் நேற்று மாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற கட்சி மத்திய குழுவின் விசேட கூட்டத்திலேயே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

19ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர், தேர்தல் சீர்திருத்தங்களைச் செய்வதற்கான 20ஆவது திருத்தம் நாடாளுமன்றத் தில் நிறைவேற்றப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதியளித்த பின்னரே இதற்கான தீர்மானம் கட்சியின் மத்திய குழுவால் எடுக்கப்பட்டது.

# தகவல் அறியும் உரிமை சட்ட வரைவுக்கு அங்கீகாரம்

(கொழும்பு)

அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கான சட்ட வரைபை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசரங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அமைச்சரவை பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன இதனை தெரிவித்தார்.

குறித்த சட்டவரைபை அரசியலமைப்பின் 122ஆவது சரத்தின் கீழ் அவசரகால பிரேரணையாக முன்வைப்பதற்கு, பிரதமர் ரணில் விக்ரமசிங்க அமைச்சரவையில் கோரியுள்ளார்.

இதனடிப்படையில் குறித்த சட்ட வரைபு எதிர்வரும் நாட்களில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார்.

## 5 பேருக்கு அபராதம்

(சுன்னாகம்)

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சட்ட விரோதமான முறையில் மின்சாரம் பெற்ற ஐவருக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து மல்லாகம் மாவட்ட நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன், நேற்று தீர்ப்பளித்தார்.

மின்சார சபையின் புலனாய்வு அதிகாரிகளும், பொலிஸாரும் இணைந்து நடாத்திய திடீர் சோதனை நடவடிக்கையில், ஏழாலை, மயிலங்காடு பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்ற ஐவரை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக, மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு, நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது குற்றவாளிகள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, நீத்வான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

# நல்லாட்சி சவால் மிக்கது



(கொழும்பு)

நல்லாட்சியை ஏற்படுத்துவது சவால் மிக்க விடயமாகும் என முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஸல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நல்லாட்சியை ஏற்படுத்துவது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சவால் நிறைந்ததேயாகும் என அவர குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் நான் நன்கு அறிவேன் எனவும் அவர்கள் நம்பகத் தகுந்த தலைவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். நல்லாட்சிியை ஏற்படுத்துவதற்கு முன்னதாக மோசடிகளில் ஈடுபட்டவர்களை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் கோரியுள்ளார். அரசியல்வாதிகளை விடவும் நாட்டுக்கு மக்களே முக்கியமானவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

# தகவல் திணைக்களத்துக்கு புதிய பணிப்பாளர்

(கொழும்பு)

அரசாங்க தகவல் திணைக்களத்தின் புதிய பணிப்பாளர் நாயகமாக பேராசிரியர் எஸ்.கே.எம்.டீ தர்ஷனீ குணதிலக்கவை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக்க முன்வைத்த இக்கோரிக்கைக்கு அமைச்சரவை நியமனம் வழங்கியது.

# காணி வாங்கித்தருவதாகக் கூறி 10 இலட்சம் ரூபா மோசடி

## காங்கேசன்துறை பொலிஸில் முறைப்பாடு

காணி வாங்கித்தருவதாகக் கூறி, 10 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் பணத்தை மோசடி செய்துள்ளதாக மல்லாகம் சோடா கம்பனி வீதியை சேர்ந்த பெண்ணொருவர், காங்கேசன்துறை விசேட மோசடி குற்றத்தடுப்பு பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக காங்கேசன்துறை பொலிஸார் கூறினர். காணி வாங்கித்தருவதாகக்கூறிய அதேயிடத்தைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர், பெண்ணிடம் கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் பணத்தை வாங்கியுள்ளார். காணி கொள்வனவு செய்யப்படாத நிலையில், தனது பணத்தை பெண் திரும்பக் கேட்டவேளை, பணம் வாங்கிய வயோதிபர் பணத்தை தருவதாகக் கூறி ஏமாற்றி வந்துள்ளார். இதனையடுத்து, வயோதிபர் மீது பெண் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து சந்தேகநபரை கைது செய்யவுள்ளதாக பொலிஸார் கூறினர்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு முன்பாக நேற்று ஆஜராகிய முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அங்கிருந்து வெளியேறிச் செல்வதைக் காணலாம்.



இப்பத்திரிகை இல: 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 ஏப்ரல் 24ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.